DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam, Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship; Super visa for parents and grandparents including health insurance; Citizenship; Permanent resident card renewal
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road, Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam, Realtor
Cell: 647-447-1562
RE/MAX Community

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1483 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday September 6, 2024

## "நாம் ஒன்றுப்பட்டுள்ளோம் என்பதை உலகிற்கு காட்டுவதற்காக எமது பொது வேட்பாளருக்கு வாக்களிப்போம்!"

### உலகத் தமிழ் பண்பாட்டு இயக்க செயலாளர் நாயகம் துரை கனேசலிங்கம் அறைகூவல்

’ எமது தாய் மண்ணில் அடக்கப்பட்டு வாழும் ஒரு இனமாகவும் புலம்பெயர் நாடுகளில் ஒரு ஆரோக்கியமான இனமாகவும் வாழ்ந்து வரும் ஈழத் தமிழர்களாகிய நாம் ஒன்றுப்பட்டே உள்ளோம் என்பதையும் எமது வாக்குகளுக்கும் ஒரு பலம் உண்டு என்பதை உலகிற்கு காட்டுவதற்காக எமது பொது வேட்பாளருக்கு வாக்களிப்போம் எனவே எதிர்வரும் இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தங்கள் முதலாவது வாக்கை தமிழ்ப்பொது வேட்பாளர் கிழக்கு மண் தந்த அரியநேந்திரன் அவர்களுக்கு அளித்து எமது அடையாளத்தை நிரூபிப்போம்!”

இவ்வாறு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்கள் அறைகூவல்விடுத்துள்ளார்.

தொடர்ச்சி 18ம் பக்கம்

## பொது தமிழ் வேட்பாளர் விடயத்தில், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் நிலவும் 'குத்துவெட்டுக்கள்'

-நடராசா லோகதயாளன்

கடந்த ஞாயிற்றுக்கிழமை (11) இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயல்குழுக் கூட்டத்தில் 27 பேர் பங்கு கொண்டு யாப்பின் அடிப்படையில் ஏற்றுக்கொண்ட கூட்டத்திலேயே சஜித் பிரேமதாசாவை ஏற்பதான தீர்மானம் எட்டப்பட்டதாக தமிழ் அரசுக் கட்சியின் சிரேஸ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

அந்த கூட்டத்தில் பொது தமிழ் வேட்பாளராக களமிறங்கியுள்ள பாக்கியசெல்வம் அரியநேத்திரனை ஆதரிப்பதில்லை என்று முடிவு செய்யப்பட்டாலும் அது ஒருமித்த கருத்தாக இருக்கவில்லை என்று அறியமுடிகிறது.

இது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் சிரேஸ்ட துணைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மேலும் விபரம் தெரிவிக்கையில்,

வவுனியாவில் இடம்பெற்ற கட்சியின் மத்திய செயல்குழுவில் அரியநேந்திரன் உட்பட உள்ள 39 பேரில் 27 பேர் கலந்துகொண்டனர்.

தொடர்ச்சி 3ம் பக்கம்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
Ilankai Tamil Arasu Kadchi

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய எம்மை
அழையுங்கள்
416-752-1524

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய எம்மை
அழையுங்கள்
416-752-1524


கலாபூஷணம்
சோக்கல்லோ
சண்முகம் அரங்கு
கலைவேந்தன்
கணபதி ரவீந்திரன்
yugam radio
yugam TV
CTAA
CANADIAN TAMIL ARTIST'S ASSOCIATION
நவரசத்தாரகை
ரூபி யோகதாசன்
கனடிய தமிழ் கலைஞர்கள் சங்கம்யுகம்
வானொலி யுகம் தொலைக்காட்சி
இணைந்து பெருமையுடன் வழங்கும்
20வது ஆண்டு நாடகப் பெருவிழா 2024
சிரிக்க ! சிந்திக்க!! சிந்தனைக்கு விருந்தளிக்க!!!
ஒரே மேடையில் ஐந்து நாடகங்கள்.
ரொரன்ரோ கானாவின் இன்னிசை மழை
அனுமதி $20
நிகழ்ச்சி தொகுப்பாளர்
ராம் பிரசாந்த்
Saturday
21st September 2024
4:30PM
Toronto Pavilion
190 Railside Rd,
North York, ON M3A 1A3
For more details : Ravi (416) 898-7284 / Ruby (416) 670-6522
K T GROUP
MR. KANA SELVA
647302 1189
புதிய இடத்தில்
அக்ஷியா நகைமாளிகை
3351 Markham Rd, Red Building
Scarborough, ON M1X 0A6
INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal - Corporation - New Home HST Filling
Selva Vettyvel
416 568 4301
905 471 4050
204-7 Eastvale Dr, Markham ON, L3S 4N8
RE/MAX COMMUNITY
SHAN THAYAPARAN
SALES REPRESENTATIVE
416.567.7675
CORNWALL SHIVAN TEMPLE - CANADA
1730 VINCENT MASSEY DRIVE,
CORNWALL,
ON K6H 5R6
Tel : +1 416-939-4921
cornwallshivantemple@gmail.com
Web : www.cornwallshivan.ca
Vijaya Jewellery
No: 3341, Markham rd, Unit 127 Scarborough ON m1x0A5
+1 (437) 833-3197, (647) 329 3062
Latika Gold House
35 Karachi
ON L3S 0B5
Ph: 647-996-5922 | 905-201-6000
www.latikagoldhouse.ca
NEW PREMIUM STONE LTD
Quartz, Granite, Countertop
416.858.1290
100 Melford Dr, Unit #1, Scarborough, ON, M1B 2G4

We acknowledge the financial support of the Government of Canada


பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign)
JOURNALISTS: Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com


## உதயன் கதிரோட்டம்

# தமிழ்ப் பொது வேட்பாளர் என்பவர் ஜனாதிபதியாகும் நோக்கம் கொண்டவர் அல்ல: தமிழர்களின் அடையாளமாகத் திகழ்பவர்!

தமிழ்ப் பொது வேட்பாளர் என்பவர் ஜனாதிபதியாகும் நோக்கம் கொண்டவர் அல்ல: தமிழர்களின் அடையாளமாகத் திகழ்பவர்!

விரைவில் நடைபெறவுள்ள இலங்கையின் ஜனாதிபதிக்கான தேர்தலில் நிச்சயம் ஒரு பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவரே அந்தப் ஆசனத்தில் அமர்வதற்காக தேர்ந்தெடுக்கப்படுவார் என்பது நிச்சயமாகத் தெரிகின்றது. ஆனால் இலங்கை வாழ் தமிழ் மக்களின் சார்பாகவும் புலம் பெயர் தமிழர்களின் சார்பாகவும் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் தேர்தலில் போட்டியிடுகின்றார். அவர் தனது பிரச்சாரப் பணிகளை வடக்கிலும் கிழக்கிலும் தன் குழுவினரோடு இணைந்து மேற்கொண்டு வருகின்றார்.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவரும் தமிழரசுக் கட்சியின் முக்கிய உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான அரியநேந்திரன் அவர்களை வேட்பாளராகத் தேர்ந்தெடுப்பதில் வடக்கையும் கிழக்கையும் மற்றும் புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் ஆயிரக்கணக்கான தமிழ் அன்பர்கள் மிகுந்த ஈடுபாட்டோடு உழைத்தவர்கள் என்பது அனைவருக்கும் நன்கு தெரிந்த விடயமாகும். மேலும் இணைந்திருந்த வடக்கையும் கிழக்கையும் ஆட்சியாளர் பிரித்தாளும் தமிழ்த் தேசியம் என்பது இன்னும் பிரிக்கப்படாமலே உள்ளது என்பதை அரியநேந்திரன் அவர்களின் தேர்வு உலகிற்கும் ஏனைய நாடுகளுக்கும் எடுத்துக் காட்டிய ஒன்றாக விளங்குகின்றது. அத்துடன் தமிழ்ப் பொது வேட்பாளர் எனப்படுபவர் ஜனாதிபதியா-கும் நோக்கம் கொண்டவர் அல்ல: தமிழர்களின் அடையாளமாகத் திகழ்பவர் என்பதையும் நாம் மட்டுமல்ல தென்னிலங்கையின் முற்போக்குச் சக்திகளும் நன்கு புரிந்து கொண்டுள்ளன. இதன் காரணமாகவே, அதிகளவு வெற்றி வாய்ப்பை கொண்டுள்ள அநுர குமார என்னும் இடதுசாரி வேட்பாளர் வடக்கு கிழக்கு மக்களின் ஆதரவை வேண்டிய வண்ணம் யாழ்ப்பாணத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட தனது ஒன்றுக்கு மேற்பட்ட தேர்தல் பிரச்சார அலுவலகங்களை அமைத்து தமிழ் மக்களின் வாக்குகளை நாடி நிற்கின்றார். ஆனால் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு எதிராக எந்த பிரச்சாரத்தையோ அன்றி கருத்துக்களையோ அவரோ அன்றி அவரது கட்சி சார்ந்தவர்களோ தெரிவிக்கவில்லை என்பதை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும் எமது தமிழ்ப் பொது வேட்பாளருக்கு மக்கள் தங்கள் ஆதரவை வழங்கவேண்டும் என்ற குரலை எழுப்பிவரும் தமிழ் பேசும் அரசியல்வாதிகளின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகின்றுத. அதே வேளை தமிழ் பேசும் பல்கலைக் கழகங்களின் சமூகமும் எமது பொது வேட்பாளருக்கே தமிழ் மககள் வாக்குகளை வழங்கி அதன் பலத்தை அதிகரிக்க வேண்டும் என்று நான்கு திசைகளிலிருந்து கோசங்கள் ஒலித்த வண்ணம் உள்ளன.

முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் சி. வி. விக்னேஸ்வரன்,

ரெலோ கட்சியினர் மற்றும் தமிழத் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் உட்பட பலர் எழுந்து நின்றவண்ணம் சோர்ந்து விடாமல் இந்த 'தமிழ்ப் பொது வேட்பாளர்' என்ற இயக்கத்திற்காக தங்கள் குரலை எழுப்பிய வண்ணமே தொடர்கின்றார்கள். மேலும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சிறிதரன் சிவஞானம் அவர்களும் தனது ஆதரவை எமது பொது வேட்பாளருக்கு வழங்க வேண்டும் என தமிழ் மக்களை நோக்கி வேண்டுகோள் விடுத்துள்ளார். கடைசியாக. மறைந்த சம்பந்தன் அவர்களின் இடத்திற்கு தெரிவு செய்யப்பெற்றுள்ள சண்முகம் குகதாசன் அவர்களும் தமிழ்ப் பொது வேட்பாளரான அரியநேந்திரன் அவர்களுக்கு திருகோணமலை வாழ் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று வேண்டுகோளை விடுத்துள்ளார். ஆனால் சில 'புல்லுருவிகள்"; தமிழ்ப் பொது வேட்பாளரை அவமானப்படுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருவது வெளிப்படையாகவே தெரிகின்றது. இந்த 'வெறுக்கத்தக்க" செயற்பாடுகளுக்குப் பின்னாள் வெற்றி வாய்ப்பு அதிகமுள்ள வேட்பாளர்களிடமிருந்து ஏதாவதை பெற்றுக்கொள்ளும் வகையில் 'டீல்கள்' இருக்குமோ என்ற சந்தேகங்களும் வெளிச்சமாகத் தோன்றி மறைகின்றன.

ஏவ்வாறாயினும் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இலங்கை மக்கள் நன்மையடையப் போவது அநுர குமார என்ற அந்த இடது சாரி வேட்பாளர் பக்கம் காணப்படுவதால். இலங்கை எங்கிலும் உள்ள தமிழ் மக்கள் தமது முதலாவது வாக்கை எமது தமிழ் பொது வேட்பாளருக்கும் தங்கள் இரண்டாவது வாக்கை அநுர குமார் அவர்களுக்கும் அளிக்கலாம் எனவும் இதனால் தென்னிலங்கையில் அமையப்போகும் ஒரு புதிய அரசிற்கு தமிழர்கள் தங்கள் வாக்குகளை அளித்துள்ளார்கள் என்ற சிந்தனையும் தெனினிலங்கையில் தோன்றுவதற்கு ஒரு சாதகமான பங்களிப்பாக தமிழ் மக்களின் வாக்களிப்பு பயனளிக்கலாம் என்பதை இவ்வாரக் கதிரோட்டத்தின் மூலமும் கனடா உதயன் எமது தாயக உறவுகளிடம் கேட்டுக்கொள்கின்றது.

(முன்பக்கத் தொடர்ச்சி)

# பொது தமிழ் வேட்பாளர் விடயத்தில், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் நிலவும் 'குத்துவெட்டுக்கள்'

தலைவர் மாவை.சேனாதிராஜா தன்னால் சுகயீனம் காரணமாக கூட்டத்தில் பங்குகொள்ள முடியாது எனத் தெரிவித்திருந்தார். வேறு ஏதும் காரணங்களிற்காகவும் ஒத்தி வைக்குமாறும் கேட்கவில்லை. இதேநேரம் சி.சிறிதரன் தனது விருப்பத்தை எழுத்தில் அறிவித்திருந்தார். யாப்பின் பிரகாரம் மத்திய செயல் குழுவின் கோரம் 11 பேராகவே காணப்படுகின்றது.

இவற்றின் அடிப்படையிலேயே துணைத் தலைவரான எனது தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. இதன்போது 17 பேர் பொது வேடபாளரான அரியநேந்திரனை ஆதரிக்க முடியாது என்ற நிலைப்பாட்டிலும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் எழுத்து மூலமான முடிவு உள்பட 6 பேர் மட்டுமே ஆதரவாக கருத்துரைத்தனர். கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் 22 பேர் கருத்துரைத்தனர்.

இவற்றின் அடிப்படையிலேயே 3 தீரமானங்களும் எட்டப்பட்டன. இந்த தீர்மானத்திறகு நானும் கட்டுப்பட்டவன். இதேநேரம் சஜித் பிரேமதாசாவிற்கு ஆதரவாக ஏதும் பிரச்சாரக் கூட்டங்கள் இடம்பெற்றால் என்னால் மேடைக்கு வர முடியாது என்பதனையும் நான் பதிவு செய்திருந்தேன் என்றார்.

இதேவேளை தமிழ் அரசுக் கட்சியின் வவுனியாத் தீர்மானம் தொடர்பில் தன்னுடன் கலந்துரையாடப்படவில்லை என தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதாக மேற்கொண்ட தீர்மானம தொடர்பில் ஊடகத்திற்கு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடரபில் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சுகயீனம் காரணமாக கூட்டத்தில் பங்குகொள்ள முடியவில்லை. இதேநேரம் மேற்கொண்ட தீர்மானம் தொடர்பில் என்னுடன் கலந்து ஆலோசிக்கப்படவில்லை எனத் தெரிவித்தார்.

எனினும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுமந்திரன், வவுனியா கூட்டத்தில் எடுக்கப்பட்ட மூன்று தீர்மானங்களும் ஒரு மனதாக நிறைவேறின. அதுட் தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று யாரும் கோரவில்லை என்று கூட்டத்திற்கு பிறகு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்






# காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளுக்கு நீதி கிடைக்க சகலரும் முன்வர வேண்டும்

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் வலியுறுத்து!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

யுத்தத்தின் போதும், யுத்தத்திற்கு முன்னரும், தற்போதும் இலங்கை அரச படையினரால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதியானது இதுவரை பேசுபொருளாகவே இருக்கிறதே தவிர அதற்கான தீர்வுகளும் இதுவரை எட்டப்படவில்லை. அதற்கான முயற்சிகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் சிந்துஜன் தெரிவித்துள்ளார்.

01-09-2024 அன்றையதினம் அனைத்து உலக காணாமல் ஆக்கப்பட்டோரது தினத்தினை முன்னிட்டு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு முன்னால் ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்பு போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகிலேயே காணாமல் ஆக்கப்படுவது என்பது மிகப்பெரிய குற்றமாகும். தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்து என்று கூட தெரியாமல், தமது பிள்ளைகள் உயிரோடு வருவார்கள் என்ற ஏக்கத்துடன் பெற்றோர் கடந்த ஐந்து வருடங்களாக தமது போராட்ட வடிவங்களை மாற்றி மாற்றி தமது பிள்ளைகளின் படங்களோடு வீதி வீதியாக திரிகின்றனர்.

இதனை சர்வதேச சமூகமும், இலங்கை அரசாங்கமும் கண்டுகொண்டு பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு ஒரு நீதியை நிலை நாட்ட வேண்டும் என பல்கலைக்கழக சமூகம் சார்பாக இந்த இடத்தில் வலியுறுத்துகின்றோம்.

இந்த தாய்மார் தமது பிள்ளைகளை தேடி தேடி இறந்து போன வரலாற்று சம்பவங்கள் காணப்படுகின்றன. இது ஒரு துயரச்சம்பவம், இனி இருக்கின்ற தாய்மார்களாவது தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்ற விடயத்தை தெரிந்து கொள்வதற்கும், நீதியை நிலைநாட்டுவதற்கும் சகல தரப்புக்களும் முன்வர வேண்டும் என இந்த இடத்தில் கோரிக்கை முன்வைக்கின்றோம். தமிழ் தேசியம் பேசுகின்ற கட்சிகளும் இந்த நேரத்தில் இது குறித்து சிந்திக்க வேண்டும்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுற்ற காலப்பகுதியில் இருந்து கடந்த 15 வருடங்களாக தமிழ் மக்களுடைய வாக்குகளை அபகரித்து, தென்னிலங்கையில் உள்ள அரசாங்கத்தின் மீது நீங்கள் வைத்துள்ள அக்கறையையும், அந்த அரசாங்கத்தை பாதுகாப்பதற்கு மேற்கொள்கின்ற அக்கறையையும், வாக்களித்த நமது மக்களுடைய உரிமைகளிலும் நலன் சார்ந்த விடயங்களிலும் காட்ட வேண்டும் என இந்த இடத்தில் வலியுறுத்துகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழ் மக்கள் ஒருமித்த குரலாக ஒன்றுதிரண்டு சங்கு சின்னத்திற்க்கு வாக்களிக்கவேண்டும்

## ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் வேந்தன் கேரிக்கை!





தமிழ் மக்கள் ஒன்றி திரண்டு ஒருமித்த குரலாக சங்குச் சின்னத்திற்க்கு வாக்களிக்க வேண்டும் என்று ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் திரு.வேந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மணல்காடு பகுதியில் இடம் பெற்ற ஜனாதுபதி தேர்தல் பரப்புரையின்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

குறித்த பரப்புரை மணல்காடு பகுதியில் சங்கு சின்னத்தில் போட்டியிடும் பா.அரியநேந்திரன் அவர்களுக்காக தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பு சார்பாக இப் பரப்புரை முன்னெடுக்கப்படுகிறது.

இதில் ஜனநாயக போராளிகள் கட்சி தலைவர் வேந்தன், மற்றும் ஜனநாயக போராளிகள் கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள், முன்னாள் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்கள், மணல்காடு, கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள், என பலரும் கலந்து கொண்டனர்.

# அனுரா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் நாட்டை சூறையாடிய தலைவர்களை சிறையில் அடைப்பார் என்பது உண்மையான விடயம்.

## சி.வி. விக்னேஸ்வரன் நம்பிக்கை



ஜனாதிபதி வேட்பாளர் அனுரா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் நாட்டை திருடியவர்கள் சூறையாடியவர்களை பிடித்து சிறையில் அடைப்பார் என்பது உண்மையான விடயம். ஆனால் அநுரவினால் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது. இதற்கு காரணம் சீன கொள்கை பிராந்திய அமைதிக்கு பங்கம் - விளைவிக்கும் என்றார் முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும் முன்னாள் நீதியரசருமான சி.வி. விக்னேஸ்வரன்.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமரவினால் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி வேட்பாளர் அனுரா ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் நாட்டை திருடியவர்கள் சூறையாடியவர்களை பிடித்து சிறையில் அடைப்பார் என்பது உண்மையான விடயம்.

ஆனால் அவரால் நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான திட்டங்களோ அல்லது சர்வதேச ஒத்துழைப்பையோ அவரால் பெற முடியாது.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டி எழுப்ப வேண்டுமானால் அவர்கள் சீனாவின் உதவியை நாட வேண்டிய தேவை ஏற்பாடும் ஏற்கனவே நாடு சீனாவின் கடன்பொறிக்குகள் சிக்கியுள்ள நிலையில் நாட்டு மக்கள் அதனை விரும்ப மாட்டார்கள்.

அது மட்டும் அல்ல தேசிய மக்கள் கட்சியினர் சீனாவின் கொள்கைகளுடன் ஒத்து போகும் நிலையில் அவர்களின் ஆட்சி வருவார்களானால் இலங்கை தீவின் பிராந்திய அமைதிக்கு பங்கம் ஏற்படும்.



# தமிழ் பொதுக்கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை வெளிவெளியிடப்பட்டது!



செப்டம்பர் மூன்றாம் திகதி, செவ்வாய்க் கிழமை, தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்டமைப்பின் அலுவலகத்தில் நண்பகல் 12 மணியளவில் இந்த தேர்தல் அறிக்கை வெளியிடும் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்பினர் கலந்துகொண்டனர்.



# மீனவ பிரதிநிதிகளும் பொதுவேட்பாளர் பரப்புரையில்!



வட மாகாண மீனவர் அமைப்புக்களை பிரதிநித்துவப்படுத்தும் அ.அன்னராசா, மற்றும் நா.வர்ணகுலசிங்கம் ஆகியோர் தலைமையில் கோப்பாய் பகுதியில் தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேந்திரன் அவர்களுக்கு சார்பாக தீவிர பிரசாரம் 3ம் திகதி செவ்வாயன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வீடு வீடாகவும் வர்த்தக நிலையங்களுக்கும் சென்று தமிழ் பொது வேட்பாளர் என்பவர் காலத்தின் சரியான தெரிவு என்றும், சிதறிக்கிடக்கின்ற தமிழ் மக்களை ஒன்றிணைப்பதற்க்கான ஒரு செயற்பாடு என்றும் தெரிவித்து தமது பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தேசிய மக்கள் சக்தி – சாய்ந்தமருது பிரதேச கல்வியியலாளர்கள் சந்திப்பு

(02-09-2024)






ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்கவை ஆதரித்து "நாடு அநுரவோடு" எனும் தொனிப்பொருளில் தேசிய மக்கள் சக்தியின் கொள்கை விளக்க சாய்ந்தமருது பிரதேச கல்வியியலாளர்கள் சந்திப்பு மாளிகைக்காடு தனியார் வரவேற்பு மண்டபத்தில் 01-9-2024 ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் அம்பாரை மாவட்ட செயற்குழு உறுப்பினரும் கல்முனை தொகுதி அமைப்பாளருமான ஆதம்பாவா தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில், தேசிய மக்கள் சக்தியின் விவசாய கொள்கையின் திட்டமிடலுக்கான உப குழுவின் ஒருங்கிணைப்பாளர், தேசிய மக்கள் சக்தியின் புத்திஜீவிகள் அமைப்பின் குழு உறுப்பினருமான ஜீ.வி.எச். கோட்டாபய, தேசிய மக்கள் சக்தியின் அம்பாரை மாவட்ட செயற்குழு உறுப்பினரும் அம்பாறை நகர சபை முன்னாள் உறுப்பினருமான இந்திக்க விஜயவிக்கிரம ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதன்போது, சாய்ந்தமருது - மாளிகைக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த கல்வியியலாளர்கள், தேசிய மக்கள் சக்தியின் செயற்பாட்டாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களின் அமைப்பாளர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# சஜித் பிரேமதாசவுக்கு ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு வழங்கவுள்ள தமிழரசுக் கட்சி மத்திய குழுவின் தீர்மானம் என்பது கூட்டாக எடுக்கப்பட்டது ஆகும்

## தமிழரசுக் கட்சியை மீண்டும் "பாதாளத்திற்குள் தள்ளும்" செயலாளர் ப.சத்தியலிங்கம்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
Ilankai Tamil Arasu Kadchi
ශ්‍රී ලංකෙයි තමිල් අරසු කච්චි

(02-09-2024)

தமிழரசுக் கட்சி மத்திய குழு தீர்மானம் என்பது கூட்டு தீர்மானே என கட்சியின் பொதுச் செயலாளர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழு சஜித் பிரேமதாச அவர்களுக்கு ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளதாக கட்சியின் ஊடகப் பேச்சாளர் கூட்டத்தின் பின் ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்து இருந்தார்.

அதனை தமிழரசுக் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜா மறுப்பு தெரிவித்து அது கட்சியின் தீர்மானம் இல்லை எனவும் இந்த விடயம் தமிழரசுக் கட்சியை மீண்டு "பாதாளத்திற்குள் தள்ளும்" திட்டம் என்றும் தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பாக கட்சியின் செயலாளரை தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் பின்வருமாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் மாவை சேனாதிராஜா அவர்கள் கலந்து கொள்ளவில்லை.

மத்திய குழு தீர்மானம் என்பது ஒரு கூட்டுத் தீர்மானம்.

மத்திய குழுவில் 30 பேர் கலந்து கொண்டார்கள். மாவை சேனாதிராஜா அவர்களுக்கும் அறிவித்து அவரும் வருவதாக இருந்தார்.

உடல் நிலை சரியில்லை என்று தெரிவித்து அவர் கலந்து கொள்ளவில்லை. மூத்த துணைத் தலைவர் தலைமையில் தான் கூட்டம் நடைபெற்றது. மத்திய குழுவின் தீர்மானம் தான் சஜித் பிரேமதாச அவர்கக்கு அதரவு வழங்குவது என்பது.

அதனையே அறிவித்தோம். எதிர்வரும் 4 ஆம் திகதி தபால் மூல வாக்களிப்பு. அதனால் தீர்மானம் எடுக்கப்பட்டது. அவருடன் ஏற்பனவே நான் கதைத்துள்ளேன்.

இது தொடர்பாக நான் கதைக்கிறேன். மூத்த துணைத் தலைவர் யாழ்ப்பாணத்தில் நேரில் சந்தித்து மாவை சேனாதிராஜா அவர்களுடன் கதைப்பார் எனத் தெரிவித்தார்.




Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome
Open 7 Days a week
Sunday by Appointment only

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்



**Scarborough**
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

**Markham**
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900

இலங்கை செய்திகள் Sri Lanka News

# உரும்பிராயில் பொன் சிவகுமார் அவர்களுக்கு சுடரேற்றி பொது வேட்பாளர் பரப்புரை ஆரம்பம்!



நடைபெறவில்லை ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் சார்பாக சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்ற ஜனாதிபதி வேட்பாளர் பா.அரியநேந்திரன் அவர்களுக்கு ஆதரவான பரப்புரை காலை 10:00 மணியளவில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சமூக விஞ்ஞான ஆய்வு மையம் உட்பட பல பொது அமைப்புக்கள் சேர்ந்து குறித்த பரப்புரையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்.

அரசியல் ஆய்வாளர் சட்டத்தரணி சி.அ.யோதிலிங்கம் தலைமையில் பல அணிகளாக பரப்புரை இடம்பெற்று வருகின்றன.




# தமிழரசு கட்சி சஜித்துக்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்தில் எனக்கு உடன்பாடு இல்லை.. கொழும்புக் கிளை தலைவர் கே வி தவராசா

தமிழரசு கட்சியின் மத்திய சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்குவதாக எடுத்த முடிவு எனக்கு உடன்பாடு இல்லை என தமிழரசு கட்சியின் கொழும்பு கிளை தலைவரும் மத்திய குழு உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கேவி தவராசா தெரிவித்தார்.

ஆகஸ்ட் 31ம் திகதி சனிக்கிழமை வவுனியாவில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு தமிழரசு கட்சி ஆதரவு வழங்குவதாக எடுத்த தீர்மானம் தொடர்பில் தொலைபேசி ஊடக தொடர்பு கொண்டு எமது செய்தியாளர் கேட்டதற்கே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் வவுனியாவில் இடம் பெற்ற தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டத்திற்கு அழைப்பு கிடைத்தது அழைப்புடன் என்ன என்ன விடையங்கள் பேசுவது தொடர்பில் எழுதி அனுப்பப்பட்டிருந்தது.

ஆனால் அதில் குறிப்பிடப்பட்ட சில விடயங்களை ஒரு நாளில் தெரிவித்து மறுநாள் முடிவு எடுக்கக்கூடிய விடயங்களாக இருக்கவில்லை.

கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பான கலந்துரையாடல் இடம் பெற்ற போது பொது வேட்பாளருடன் பேச்சுவார்த்தை நடாத்தாமல் நேரடியாக எதிர்ப்பது அரசியல் நாகரீகம் அல்ல என்ற கருத்தை முன்வைத்தேன்.

அதுமட்டுமில்லாது தமிழரசு கட்சியினுடைய பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கின்ற நிலையில் நாங்கள் எடுக்க முடிவு எமது கட்சியின் எதிர்கால அரசியலை பாதிக்காத முடிவுகளாக இருக்க வேண்டும்.

தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திய நிலையில் தமிழ் பொது வேட்பாளருடனும் பேச்சுவார்த்தை நடாத்தாமல் அவரை விலகுமாறு கூறுவது ஏற்புடையது அல்ல என கூறி கூட்டத்தில் இருந்து வெளியேறி விட்டேன்.

ஏற்கனவே தமிழரசு கட்சி பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலையில் பொது வேட்பாளருக்கு தமிழ் தேசியத்துடன் பயணிப்பவர்கள் இணைந்து பயணிக்கின்ற நிலையில் மக்களின் விருப்பங்களுக்கு மாறாக முடிவுகளை எடுக்க முடியாது.



ஜனாதிபதி வேட்பாளர் விடையதில் கட்சி முடிவுகளை எல்லாம் பார்க்க மக்களின் விருப்பங்கள் அபிப்பிராயங்கள் கேட்டு அறிந்த பின்னரே முடிவுகளை எடுக்க வேண்டும்.

இந்த முடிவு எடுத்தப்பட்ட நேரத்தில் தமிழரசு கட்சியின் மத்திய குழுவில் அங்கம் வகிக்கும் தலைவர் உட்பட பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மற்றும் சிறி-நேசனும் குறித்த கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

ஆகவே வடக்கு கிழக்கு சார்ந்த தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டுள்ள நிலையில் மக்களின் அபிப்பிராயங்களை கேட்டறியாமல் தெற்கு வேட்பாளர் சஜித்துக்கு ஆதரவு தெரிவிப்பது தனக்கு உடன்பாடு இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# "நான் ஜனாதிபதியாக பொறுப்பேற்றதும் வீட்டு திட்டங்கள் அனைத்தும் பூர்த்தியாக்கப்படும்"

## யாழ்ப்பாணத்தில் சஜித்

நான் ஆட்சியைப் பொறுப்பேற்றதும் முடிவுறுத்தப்படாமல் உள்ள அனைத்து வீட்டு திட்டங்களும் முழுமை பெறுவதுடன் ஒன்பது மாகாணங்களிலும் புதிய வீட்டுத் திட்டங்களை உருவாக்குவேன் என ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசா தெரிவித்தார்.

31-08-2024 சனிக்கிழமை யாழ் ஊடகாமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

சஜித் பிரேமதாசா படம் கேள்வி எழுப்பிய ஊடகவியலாளர் நீங்கள் கடந்த ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக களம் இறங்கிய போது ஆரம்பிக்கப்பட்ட பல ஆயிரம் வீட்டுத்திட்டங்கள் நிறைவு பெறமல் இருக்கிறது இது பற்றி உங்களுடைய கருத்து என்ன என கேள்வி எழுப்பினார்.

மக்களுக்கான வீட்டுத் திட்டங்களை நான் ஆரம்பிக்கவில்லை எனது தந்தையார் ரணசிங்க பிரேமதாச காலத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டவை.

எனது தந்தையார் ஒரு இலட்சம் வீட்டுத் திட்டத்தை ஆரம்பித்தார் ஒரு இலட்சத்தி 28 ஆயிரம் வீடுகளை வழங்கினார்.

நான் வீட்டு திட்டங்களை வழங்கியது மக்களின் பங்களிப்பை பெற்றுக் கண்டு பகுதி பகுதியாக அவர்களுக்கான பணத்தினை வழங்குவதே திட்டம்.

ஆனால் கடந்த காலத்தில் வழங்கப்பட்ட வீடு திட்டங்களை நிறைவு செய்யாமல் மாறிவந்த கோட்டா அரசாங்கம் வீட்டுத திட்டங்களுக்கான கொடுப்பனவுகளை நிறுத்தியது.

இந்தக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டமையால் வடக்கு கிழக்கு மட்டுமல்ல ஒன்பது மாகாணங்களிலும் உள்ள பயனாளிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நான் ஜனாதிபதியாக பொறுப்பேற்றதும் நிறைவடையாமல் உள்ள அனைத்து வீட்டுத் திட்டங்களும் முழுமைப்படுத்தப்படுவதோடு புதிதாக ஒன்பது மாகாணங்களிலும் வீட்டு திட்டங்களை நடைமுறைப்படுத்துவேன் என அவர் மேலும் தெரிவித்தார்.



# அஞ்சல் வாக்களிப்பில் தமிழர் பொதுச் சின்னத்திற்கு வாக்களியுங்கள்

## முன்னாள் தவிசாளர் நிரோஸ் வேண்டுகோள்

ஜனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல் வாக்களிப்பு நாளை முதல் ஆரம்பமாகவுள்ள நிலையில் வாக்களிக்கவுள்ள அரச உத்தியோகத்தர்கள் தமிழ் மக்களின் பொதுச் சின்னமாகவுள்ள சங்கு சின்னத்திற்கு வாக்களிப்பதன் எமது மக்கள் சார்ந்து எமக்குள்ள தேசிய உணர்வையும் பொறுப்பினையும் வெளிப்படுத்த வேண்டும் என முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளரும் ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

2ம் திகதி திங்கட்கிழமை கோப்பாய் பகுதியில் அரச சேவையாளர்களை நோக்கிய பிரச்சார நடவடிக்கைகளின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் அரச சேவையில் எமது மக்களுக்கான பணிகளை அர்ப்பணிப்புடன் எமது சகோதரர்கள் ஆற்றி வருகின்றீர்கள். அரச சேவையில் பல்வேறுபட்ட நெருக்கடிகள் இன ரீதியிலும் அரசியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டும் இன்றும் காணப்படுகின்றன. அரச சேவையாளர்கள் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் இன ரீதியில் பழிவாங்கப்பட்டுள்ளீர்கள். தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டமை நாட்டின் இன முரண்பாடுகளுக்கு பிரதான அடிப்படைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றது என்றால் அச் சட்டத்தின் காரணமான மிகவும் பாதிக்கப்பட்ட தரப்பினுள் அரச சேவையாளர்கள் உள்ளடங்கினீர்கள்.

பல்கலைக்கழக தரப்படுத்தல், அரச சேவையில் சிங்கள மயப்படுத்தல், அரச சேவையினை இராணுவ மயப்படுத்தல், அரசியல்கட்சி மயப்படுத்தல் என குறிப்பாக வடக்கக் கிழக்கில் பணியாற்றும் நீங்கள் இனரீதியாக மாறி மாறி ஆட்சிக்குவந்த அரசாங்கங்களால் பாதிக்கப்பட்டீர்கள். தற்போது அவை நேரடியாகப் தெரியக்கூடியதாக பிரயோகிக்கப்படவில்லை ஆயினும் மறைமுகமாக இன ரீதியிலான புறந்தள்ளல்கள் இலங்கையின் நிர்வாகசேவைக்கட்டமைப்பு, இதர சேவைக்கட்டமைப்புக்களில் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இவ்விடயங்கள் எல்லாம் தமிழ் மக்களுக்கு எமது அரசியல் அபிலாசைகளைப் பிரயோகிக்கத்தக்க நிரந்தர அரசியல் தீர்வு கிட்டும் வரையில் தொடர்கதையாகக் காணப்படும் என்பதுவே உண்மை. இந் நிலையில் எமக்கும் பிரச்சினைகள் உண்டு என்பதை இரகசியமாக வாக்களித்து ஒடுக்குமுறையை வெளிப்படுத்துங்கள்.

தமிழ் பொதுவேட்பாளர் என்பது நாட்டினுள் இன நல்லிணக்கத்தினைத் துண்டாடுவதற்கானதல்ல. மாறாக எங்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன என்பதை வெளிகாட்டுவதற்கானது. இது ஜனநாயக ரீதியில் சர்வதேசம் ஏற்றுக்கொண்ட உரிமைசார் நடவடிக்கையுமாகும் என்பதை புரிந்து கொண்டு அரச உத்தியோகத்தர்கள்தமிழ் மக்களின் பொதுச் சின்னமான சங்குச் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைமைக்குழு உறுப்பினருமான தியாகராஜா நிரோஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# சுன்னாக பொலிஸ் நிலையத்தில் கணவன் சித்திரவதை மனைவி பரபரப்பு வாக்குமூலம்

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட எனது கணவரை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் இரண்டு நாட்களாக பொலிசார் சித்திரவதை சொய்யப்பட்டதாக அவரது மனைவி ஊடகங்களுக்கு வாக்குமூலம் அளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தனது கணவரை கடந்த புதன்கிழமை கைது செய்வதற்கான காரணங்கள் தெரிவிக்கப்படாமல் நள்ளிரவு நேரத்தில் சிவில் உடையில் வந்த சுன்னாகப் பொலிஸார் அடாவடித்தனமாக கைது செய்தனர்.

கைது செய்த பொலிசார் பொலிஸ் நிலையத்தில் எனது கணவரை சித்திரவதை செய்ததுடன் பிரசாந்த் என அழைக்கப்படும் உதவிப் பொலிஸ் அத்தியாட்சகர் எனது கணவரை முழங்கால் இடைச் செய்து தாக்கியதாக எனது கணவர் என்னிடம் கூறினார்.

எனது கணவரை பொலிஸார் கைது செய்வதற்கான காரணங்கள் கூறாமல் கைது செய்ததுடன் கைது சொய்யப்பட்டு 24 மணித்தியாலங்களில் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படாமல் பொலிஸ் காவலரனில் வைத்து சித்திரவதை செய்தனர்.

ஏன் எனது கணவரை நீதிமன்றத்தில் முற்படுத்தவில்லை எனக் கேட்கச் சென்ற என்னை நிறைமாத கர்ப்பிணி என தெரிந்தும் நீண்ட நேரம் காக்க வைத்ததோடு உண் கணவர் தொடர்பில் உயர் அதிகாரிகளிடம் சென்றால் தொடர்ந்தும் அவரை தடுத்து வைத்திருப்போம் எனவும் எச்சரித்தனர்.

எனது கணவரின் உடலில் அடிகாயங்கள் காணப்படுகின்ற நிலையில் தெல்லிப்பளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே சுன்னாகப் பொலிஸ் நிலையத்தில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் காவலரனில் வைத்துச் சித்திரவதை செய்யப்பட்டு உயிரிழந்த சம்பவம் ஊடகங்களில் வெளி வந்தமை அனைவரும் அறிந்த விடையம்.

ஆகவே எனது கணவருக்கு இழைக்கப்பட்ட அநீதி தொடர்பில் உரிய முறையில் விசாரணை இடம்பெற்று தவறிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவு

## தமிழரசின் கிளிநொச்சி மாவட்டக் கிளை முடிவு!



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதென்ற தீர்மானம், கிளிநொச்சி மாவட்டக் கிளையில் 30-08-2024 அன்று வெள்ளிக்கிழமை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி - கிளிநொச்சி மாவட்டக் கிளையின் உபதலைவரும், வடக்கு மாகாண மேனாள் கல்வி அமைச்சருமான தம்பிராசா குருகுலராஜா அவர்களின் தலைமையில், மாவட்டக் கிளை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்களின் பங்கேற்போடு நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்,

அதனடிப்படையில், மத்திய செயற்குழுவுக்கு சமர்ப்பிக்கும் பொருட்டு, தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா அவர்களுக்கு நேரில் சமர்ப்பிக்கப்படவுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

எதிர்வரும் 2024.09.21 ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 9வது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில், உள்நாட்டு தமிழ் வாக்காளர்களிடையேயும், புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழ் மத்தியிலும், அரசியற் கட்சிகளுக்குள்ளும் எழுந்துள்ள பல்வேறு வாதப் பிரதிவாதங்களை ஆழமாகவும், விசாலமாகவும் கருத்தூன்றி ஆராய்ந்து, பொருத்தமான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டிய நிலைக்கு காலம் எம்மை நிர்ப்பந்தித்திருக்கிறது.

அதனடிப்படையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையினராகிய நாங்கள், கட்சியினுடைய இணக்க விதிகளுக்கு உட்பட்டு, மாவட்டத்தின் பல்வேறு தரப்பினருடனும், சிவில் சமூகம் மற்றும் மதகுருமார்களுடனும், பொதுமக்களுடனும் அவ்வப்போது கலந்துரையாடி பெறப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில், 2024.08.30 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டக் கிளையாக ஒன்றிணைந்து, ஏகமனதாக எடுத்த கீழ்வரும் தீர்மானத்தை, மத்திய செயற்குழுவின் தழுவு அனுமதிக்காக தயவுடன் முன்னளிப்புச் செய்கின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்ற நிலைப்பாட்டை பொறுப்போடு ஆராய்ந்து, நிகழ்கால இலங்கையினுடைய ஆட்புல ஒருமைப்பாட்டிற்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில், தமிழ் மக்களினுடைய இனத்தேசிய அடிப்படையில் நின்று பொருத்தமான உபாயம் ஒன்றை நாம் சிந்திப்பது காலத்தேவையானது என்று நம்புகின்றோம்.

போருக்குப் பிந்திய 15 ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில், எதிர்பார்க்கப்பட்ட நற்பலன்களை விட பிரதிகூலமான வெளிப்பாடுகளையே தமிழ்மக்கள் அனுபவிக்க நேர்ந்திருக்கிறது என்பது கசப்பானது எனினும் அதுவே உண்மையானது ஆகும். போர் ஒன்றின் பின்னராக தோல்வியடைந்த மனநிலையில் விடப்பட்ட தமிழ்ச்சமூகத்தை அதிலிருந்து மீட்டெடுக்கும் பணியையே எமது அரசியல் இயக்கம் பிரதான பணியாகக் கொண்டிருந்தது. எனினும் உள்நாட்டுக்கு உள்ளேயும், சர்வதேச சமூகத்தோடு இணைந்தும், எமது இராஜதந்திர, புத்திபூர்வமான அணுகுமுறைகள் ஊடாகவும் எமது மக்களின் வலிகளுக்கு நிவாரணம் வழங்கவோ, அவர்களது நம்பிக்கையை கட்டியெழுப்பவோ இயலாதிருந்திருக்கின்றோம் என்பதை பொறுப்புடன் ஏற்றுக்கொள்ளுகின்ற சந்தர்ப்பம் ஒன்றை இந்தத் தேர்தல் எங்களுக்குத் தந்திருக்கின்றது.

கூருணர்வு மிக்க அரசியல் திறன், அணுகுமுறை மற்றும் சர்வதேச சமூகத்தின் வாஞ்சையைப் பெற்றுக்கொள்ளல் என்பதில் நிலைதளர்ந்து போயுள்ள சூழல் குறித்து தமிழ்த்தேசிய ஆர்வலர்களிடமும், அறிவுஜீவிகளிடமும், சாதாரண பொதுமக்களிடமும் எதிர்காலம் பற்றிய ஐயுறு நிலை அதிகம் வளர்ந்துள்ளமையை மக்கள் பிரதிபலித்து வருகிறார்கள் என்பதை எம்மால் உணர முடிகிறது.

மேற்படி இக்கட்டான சந்தர்ப்பம் ஒன்றில் போரின்போதும், போருக்குப் பின்னரும் நிகழ்ந்துவரும் இழப்புகளுக்கு பரிகாரம் காணவும், சர்வதேச அணுகுமுறைகளில் விருத்தியை ஏற்படுத்தவும், ஜெனிவாவில் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானங்களை வலுப்படுத்தி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிலைமாறுகால நீதிச் செயற்பாட்டை வழிப்படுத்தவும், மீள நிகழாமையை வலியுறுத்தி தாயகத்தில் பொதுசன வாக்கெடுப்பு ஒன்றைக் கோரவும் முன்னகர்ந்து செல்லவேண்டிய தலைமைத்துவத்தை எமது மக்கள் எதிர்பார்த்து இருக்கின்றார்கள்.

அறிவுபூர்வமானது என்று நம்பப்படும் கருத்தியல்களுக்கும், எமது மக்களினுடைய உணர்வு நிலைகளுக்கும் இடையிலான போராட்டமாக இந்தத் தேர்தல்களம் விரிந்துள்ளமையால், மக்கள் எது சாத்தியம் என்று நம்புகின்றார்களோ, அவற்றைக் கவனமாக ஆராய்ந்து, தமிழ்த்தேசிய உணர்வுத் தளத்துடன் இணைந்த தீர்மானம் ஒன்றை, அதன் உயிர்நாடியாக விளங்குகின்ற இல்கைத் தமிழரசுக் கட்சி தீர்க்கமான முறையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதே பெரும்பான்மைத் தமிழ் மக்களுடைய கருத்துநிலையாக உள்ளது என்பதை தங்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.

மேற்படி விடயங்கள் ஒவ்வொன்றையும் மக்கள் மத்தியிலும், அரசியல் ஆர்வலர்கள் மத்தியிலும் பொதுசன அபிப்பிராயமாகப் பெற்று எமது மாவட்டக் கிளையும், பிரதேசக் கிளைகளும், உள்ளூராட்சி மற்றும் மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்களும் இணைந்து, கள யதார்த்தத்தின் அடிப்படையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியினுடைய கொள்கை நிலைப்பாட்டைப் பாதுகாத்து, மக்கள் மத்தியில் எமது அரசியல் இயக்கம் நெருங்கிச் செயற்படும் வகையில் தாயகத்தின் சிவில் அமைப்புகளினாலும், தமிழ்த்தேசியப் பரப்பிலுள்ள பெரும்பான்மைக் கட்சிகளினாலும் முன்மொழியப்பட்டுள்ள தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்க வேண்டுமென்ற ஏகமனதான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளோம் என்பதை தங்களுக்கு தயவுடன் அறியத்தருகிறோம் - என்றுள்ளது.


THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கம் அவர்களின் 39ம் ஆண்டு நினைவஞ்சலி!







முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தர்மலிங்கம் அவர்களின் 39ம் ஆண்டு நினைவஞ்சலி 2ம் திகதி திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் தாவடியில் உள்ள அவரது நினைவுத் தூபியில் அன்று காலை 7 மணியளவில் வலிதெற்கு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் அன்னதானம் நிச்சாட் தவப்பிரகாசம் தலைமையில் குறித்த நினைவஞ்சலிகள் இடம்பெற்றது.

இதன்போது நினைவுத் தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வியற்துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா நினைவுப் பேருரையாற்றினார்.

குறித்த நினைவஞ்சலியில், வி.தர்மலிங்கம் அவர்களின் மகனும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், வடமாகாண சபை முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவநேசன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் தவிசாளர்கள், உள்ளூராட்சி சபை முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

23 வருடங்கள் மானிப்பாய் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த விஸ்வநாதர் தர்மலிங்கம் 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் 2 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டதுடன் இதேநாளிலேயே கோப்பாய் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.ஆலாலசுந்தரமும் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# எங்களை அழிப்பதற்கு பெரும்பான்மை இன மக்கள் தேவையில்லை எங்களது தலைவர்களே போதும் – அன்னராசா சீற்றம்!



தமிழரசு கட்சியானது செப்படம்பமர் 1ம் திகதி கூடி வவுனியாவில் முடிவு எடுத்ததன் அடிப்படையில், தமிழரசு கட்சியானது ஒற்றுமை இல்லாமல் தமிழர்களை பிரிவுக்கும் அல்லது தமிழர் இந்த நிலைக்கு போவதற்கும் காரணமாக இருக்கின்றது என வடக்கு வடக்கு மாகாண மீனவ அமைப்பின் பிரதிநிதியான அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.

அன்றையதினம் வவுனியாவில் நிறைவேற்றப்பட்ட தமிழரசு கட்சியின் தீர்மானம் குறித்து, சமூகமட்ட பொது அமைப்பின் பிரதிநிதி என்ற வகையில் அவரிடம் இதுகுறித்து கருத்து வினவியபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2009 ஆம் ஆண்டுக்கு பிற்பாடு இன்று வரைக்கும் தமிழரசுக் கட்சி தமிழருடைய உரிமைகளை மீட்பதற்கு உளரீதியாக செயல்படவில்லை. வாயால் மக்களுக்கு ஒன்றை சொல்வதும் அரசாங்கத்திற்கு ஒன்றை சொல்வதுமாக இருக்கின்றது.

ஒட்டுமொத்த கட்சியாக இந்த முடிவை எடுத்திருந்தால் நாங்கள் வரவேற்றிருப்போம். ஆனால் கட்சியின் தலைவர் ஒன்றினை கூறுகின்றார், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா ஒன்றினை கூறுகின்றார், பல உறுப்பினர்கள் இதில் கலந்துகொள்ளவில்லை. ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் தமிழ் மக்களின் ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் குலைப்பதற்கான அடித்தளமாகத் தான் நாங்கள் இதனை பார்க்கின்றோம்.

தமிழரசு கட்சியை எடுத்து பார்ப்போமேயானால் சிவஞானம் சிறீதரன், குகதாசன் ஆகியோர் உட்பட்ட கிளிநொச்சி மற்றும் திருகோணமலை கிளைகளினால் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமந்திரன், சாணக்கியன் ஆகியோர் அதனை எதிர்க்கின்றனர். இவ்வாறு இருந்தால் தமிழர்களுடைய நிலை என்ன?

தமிழர்களை கூறு போட்டு, தமிழர்களுடைய இருப்புகளை அழிப்பதற்கு ரணிலோ, சஜித்தோ, அல்லது நாமல் ராஜபக்சவோ தேவையில்லை, எமது கட்சித் தலைவர்களே போதும்.

தமிழ் சிவில் சமூகமாக நாங்கள் எடுத்த பொது வேட்பாளர் என்ற முயற்சியை ஆதரித்து, எதிர்காலத்தில் இவ்வாறான புல்லுருவிகளையும், முண்டு கொடுப்பவர்களையும் நிராகரிப்பதற்கு நாங்கள் தமிழர் சமூகமாக ஒன்றுபட வேண்டும்.

வாக்குப் போடுவது மக்களாகிய நாங்கள். ஆனால் இவர்கள் எப்போது மக்களை சந்தித்து, மக்களது கருத்துக்களை கேட்டு தீர்மானம் எடுத்தார்கள்? ஆகவே இவர்கள் மக்களது பிரதிநிதிகள் என்று கூறி எவ்வாறு சர்வதேச சமூகங்களிடம் பேசப் போகின்றார்கள்?

வவுனியாவில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் கூட்டமானது பிரிவினையை காட்டுகின்றது. எனவே மக்களே நீங்கள் இந்த தமிழரசுக் கட்சியை நம்பாதீர்கள். நாங்கள் சுயமாக சிந்தித்து, எங்களுக்கு இருக்கின்ற வாக்குரிமை பலத்தினால் ஒன்றிணைந்து செயற்படுவோம். எமது கட்டமைப்புக்குள் வருமாறு நாங்கள் இலங்கை தமிழரசுக் கட்சியையும் அழைக்கின்றோம்.

தங்களுடைய சுயலாபத்துக்காகவும், தங்களது மதுபான நிலைய அனுமதிப் பத்திரத்துக்காகவும், தாங்கள் கோடிகளை சம்பாதிப்பதற்காகவும் தமிழ்மக்களை எதிர்காலத்தில் விற்றுப் பிழைப்பது சாத்தியமற்றது. 21ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் அது வெளிச்சத்துக்கு வரும். அப்பொழுது இந்த அரசியல் காட்சிகளும், பேரம் பேசுபவர்களும் புரிந்து கொள்வார்கள்.

எனவேதான் நாங்கள் கூறுகின்றோம். இவற்றையெல்லாம் புறந்தள்ளிவிட்டு சங்கு சின்னத்திற்கு வாக்களிப்போம், எமது ஒற்றுமை நிலைநாட்டுவோம் அதுவே எமக்கான தீர்வு என அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரித்தானிய தேசத்தில் அரங்கை அசத்திய இளம் தமிழ் வீணைக் கலைஞரின் அரங்கேற்றம்



சென்ற ஆவணி மாதம் 24ம் திகதியன்று, Watersmeet Theatre, Rickmansworth, UK ல் செல்வி துர்க்கா குமணன் அவர்களின் வீணை அரங்கேற்றம் மிகவும் விமரிசையாக அரங்கேறியது. அன்று மிகப் பிரபலமான கலைஞர்கள் உட்பட பலவிதமான ரசிகர்கள் பங்குபற்றி அவரைப் புகழ்ந்து வாழ்த்தினார்கள்.

துர்க்காவின் அரங்கேற்றத்தின் முதல் பகுதியை அவர் தன்னம்பிக்கையுடன், மிகவும் ரசித்து எந்த விதமான பதட்டமும் இல்லாமல் சிறப்பாக ஆரம்பித்தார்.

அவர் வீணையில் மீட்டிய அத்தனை உருப்படிகளையும் ஒரு முதிர்ச்சி பெற்றவொரு கலைஞரின் நிதானத்துடன் வாசித்த விதம் எல்லோரையும் கவர்ந்தது. ராமநாதபுரம் ஸ்ரீநிவாச ஐயங்கார் இசையமைத்த கானடா ராகத்தில், கண்ட ஜாதி அட தாளத்தில் அமைந்த பாரம்பரிய வர்ணமான "நேர நம்மிதி" யுடன் கச்சேரி ஆரம்பித்து அதனைத் தொடந்து பேகடா ராகத்தில், ரூபக தாளத்தில் "வல்லப நாயக்க", என்ற முத்துசுவாமி தீட்சதரின் கிருதியை மிகவும் அருமையாக பிள்ளையாருக்கு சமர்ப்பித்தார்.

இவரின் அரங்கேற்றத்தின் மகுடமாக சொல்லப்படக்கூடிய "இன்னமும் சந்தேக படலாமோ" என்ற கோபாலகிருஷ்ண பாரதியார் இயற்றிய கீரவாணி ராகத்தில் அமைந்த கீர்த்தனத்தின் ராக ஆலாபனையை மிகவும் விஸ்தாரமாகவும் வாசித்து பாட்டின் பாவம் குறையாமலும் சாகித்தியம் விளங்கும் விதமாகவும் கையாண்ட விதம் கலையர்களின் பாராட்டைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து வந்த கல்பனா ஸ்வரம் மிக நேர்த்தியாவும் பக்கவாத்தியத்திற்க்கு சவாலாக ஆவர்த்தனக் குறைப்புடன் அருமையாக வாசித்து அவரின் குருவுக்கும் பெருமை சேர்த்து தனது உயர்வான இசைத் திறனை வெளிப்படுத்தினார்.







அடுத்ததாக ராகம் தானம் பல்லவி. துர்க்காவின் குருவான சங்கீத வித்வான் ஸ்ரீமதி சிவதாராணி சகாதேவன் அவர்கள் இயற்றிய திவி ராகப் பல்லவி. மோகனம், கல்யாண வசந்தம் ஆகிய இரண்டு ராகங்களையும், ராக பாவம் கலையாமல் விஸ்தாரமாக வாசித்து, இரண்டு ராகத்திலும் தானம் வாசித்த விதமும் அதனைத்தொடர்ந்து வந்த பல்லவியில் நிரவல் வாசித்து, திரிக்காலப்படுத்தி இரண்டு ராகத்திலும் மிஸ்ர குறைப்புடன் கூடிய தீர்மானத்துடன் மிகவும் துல்லியமாக வீணை வாசித்து சபையோரை மகிழ்வித்தார். இதனை அடுத்து வந்தது தனி ஆவர்த்தனம். இசை வல்லுநர்களான டாக்டர் அபிராம் சகாதேவன் (மிருதங்கம்), ஸ்ரீ பிரகாக்ஷ் (கஞ்சிரா) ஸ்ரீ பிரதீப் (கடம்) அவர்கள் தமது இசை வித்தவத்தையும் தனித்துவத்தையும் துல்லியமாக வெளிப்படுத்தினர்.

கச்சேரியின் இரண்டாம் பகுதியில், துர்க்கா தனது அரங்கேற்றம் கண்ட மூத்த சகோதரிகளான டாக்டர் தீபிகா குமணன் மற்றும் சுபிக்கா குமணன் ஆகிய சகோதரிகளோடு ஒருங்கிணைந்து வெளிப்படுத்திய வீணை இசைத் திறமை கண்கொள்ளாக் காட்சி. இச் சகோதரிகள் இரண்டாம் பகுதியை ஒரு தனித்துவமானதும் ஈர்க்கக்கூடியதுமான இசை நிகழ்ச்சியாக மாற்றியது, ஒரு அற்புதமான இசை அனுபவத்தை உருவாக்கியது. சுப்ரமணிய பாரதியாரதியாரின் ராகமாலிகா, "சின்னஞ்சிறு கிளியே" யை சகோதரிகள் இணைந்து ராகப் பாவத்தோடு சிறப்பாக வழங்கி பார்வையாளர்களை வசீகரித்தார்கள். இறுதிப் பாடலானது ஸ்ரீ வீணை சேஷண்ணாவின் செஞ்சுருட்டி ராகத்திலும் ஆதி தாளத்திலும் அமைந்த விருவிருப்பான தில்லானா பாடலாகும். மூன்று சகோதரிகளும் இசைத்த இந்த தில்லானா உண்மையிலேயே பார்வையாளர்களின் இதயங்களைக் கவர்ந்தது.

ஒட்டுமொத்தமாக, வித்வானின் உன்னிப்பான கண்காணிப்பின் கீழ் துர்க்காவின் வீணை இசை பரந்த அளவிலான தாளங்கள் மற்றும் ராகங்களை உள்ளடக்கி, உயிரோட்டத்துடன் இசை அறிஞர்களையும் ரசிகர்களையும் மெய்மறக்க செய்தமை அவர்களின் கூற்றிலேயே வெளிப்பட்டது. இந்த இளம் வயதில் அவரின் இசை அறிவும் தான லய சுத்தமும் வியக்கத்தக்கதாக உள்ளது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பொதுமகனிடம் இலஞ்சம் வாங்க முற்பட்ட கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடைநிறுத்தம்

பு. கஜிந்தன்

பொதுமகனிடம் இலஞ்சம் வாங்க முற்பட்ட இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி விவேகானந்தா நகர் பகுதியைச் சேர்ந்த நபர் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைவாக விசாரணை மேற்கொண்ட கிளிநொச்சி பொலிஸ் அத்தியட்சகர் இவ்வாறு இருவரையும் பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளார்.

குறித்த பொதுமகனிடமிருந்து 5000 ரூபா பணம் பெற இருவரும் முயற்சித்துள்ளனர். இது தொடர்பாக விரிவான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும், குறித்த இருவரையும் நேற்று முதல் பணியிலிருந்து இடைநிறுத்துமாறும் பொலிஸ் அத்தியட்சகர் உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கு உத்தரவிட்டுள்ளார்.

குறித்த இருவரும் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# மறைந்த இளம் ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாஷின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல்!



கொரோனா தொற்றுக்குள்ளாகி மறைந்த இளம் ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஷின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாண ஊடக அமையத்தில் 3ம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் நினைவேந்தல் இடம்பெற்றது.

இதன்போது, மறைந்த ஊடகவியலாளரின் உருவப்படத்திற்கு யாழ். ஊடக அமையத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான கு.செல்வக்குமார் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். ஈகைச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டு அதனை தொடர்ந்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கொடிகாமத்தைச் சேர்ந்த பிரகாஸ் தனது ஏழாவது வயதில் தசைத்திறன் குறைபாடு (Muscular Dystrophy) நோயினால் பாதிக்கப்படதால் நடக்க முடியாத நிலை ஏற்பட்டது. அதனால் தரம் ஐந்துடன் தனது பாடசாலை கல்வியை இடை நிறுத்திக்கொண்டார்.

இந்நிலையிலும் அவற்றை எல்லாம் தாண்டி அவர் ஊடக துறையில் தனக்கொன்று ஒரு இடத்தினை தக்க வைத்திருந்தவர். சுயாதீன ஊடகவியலாளராக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளுக்கு கட்டுரைகள், செய்திகள் எழுதி வந்ததுடன், உள்நாட்டு, வெளிநாட்டு இணையத்தளங்களும் செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதி வந்தார். அதேவேளை சில இணையத்தளங்களில் செய்தி பதிவேற்றுனராகவும் கடமையாற்றி வந்தார்.

இந்நிலையில் கடந்த 2021 செப்டம்பர் 2ம் திகதி கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



# யாருமே பொறுப்பேற்காத என்னை கருணைக் கொலை செய்யுங்கள் – முதியவர் ஒருவர் உருக்கமான கோரிக்கை!

நோய் வாய்ப்பட்டு ஒரு காலை இழந்து, எந்தவொரு முதியோர் இல்லத்தாலும் பொறுப்பேற்கப்படாத நிலையில் உள்ள என்னை, குறைந்த பட்சம் கருணைக் கொலையாவது செய்யவேண்டும் என்று முதியவர் ஒருவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இளையதம்பி ஜெயக்குமார் என்ற அந்த முதியவர் தற்போது, மானிப்பாய் வீதியில் உள்ள உதயதாரகை சன சமூக நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளார். ஒரு காலில்லாத நிலையில் உள்ள அவரைப் பொறுப்பேற்பதற்கு எந்தவொரு முதியோர் இல்லங்களும் இதுவரை முன் வரவில்லை.

இதையடுத்து, கிராம மக்கள் இணைந்து கிராம அலுவலருக்கு எழுதிய கடிதத்தின் விளைவாகவும், தொடர் நடவடிக்கைகள் காரணமாகவும் அந்த முதியவரை, பொருத்தமான முதியோர் இல்லத்தில் சேர்க்கவேண்டும் என்று ஜே/88 கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலர் சிபாரிசு செய்திருந்தார்.

எனினும், எந்தவொரு முதியோர் இல்லங்களும் அவரைப் பொறுப்பேற்க முன்வராததைத் தொடர்ந்து, இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் எஸ்.சுதர்சனின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அவர் பளையிலுள்ள முதியோர் இல்லத்தில் அந்த முதியவரை இணைத்துக் கொள்ளுமாறு கடிதம் வழங்கியுள்ளார்.

நீண்ட நாள்களாக அல்லலுற்றுக் கொண்டிருந்த முதியவருக்கு தங்க ஓரிடம் கிடைத்தமையே போதும் என்ற நிலையில், கிராம மக்கள் இணைந்தும் பெரும் நிதிச் செலவில் அந்த முதியவரை பளையிலுள்ள மேற்படி முதியோர் இல்லத்துக்குக் கொண்டுசென்றனர். எனினும், அங்கும் அவருக்கு இடம் வழங்கப்படாததையடுத்து, அவர் மீண்டும் மீண்டும் உதய தாரகை சனசமூக நிலையத்தில் தஞ்ச மடைந்துள்ளார்.

இதையடுத்தே அவர், எந்தவொரு முதி யோர் இல்லங்களோ, அமைப்புகளோ அல்லது நிறுவனங்களோ பொறுப்பேற்காத பட்சத்தில் குறைந்தபட்சம் தன்னைக் கருணைக் கொலையாவது செய்யவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது கடிதத்தின் பிரதிகளை அவர், வடக்கு மாகாண ஆளுநருக்கும். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளருக்கும், கொட்டடி கிராம அலுவலருக்கும் அனுப்பி வைத்துள்ளார்.







இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை தமிழரசுக் கட்சியின் தீர்மானம் ஒரு பாரதூரமான விடயம்

## தொழிலாளர் அமைப்பின் பிரதிநிதி சுப்பிரமணியம் கவலை!

தமிழ் பொது வேட்பாளரை புறந்தள்ளிவிட்டு சஜித் பிரேமதாச அவர்களுக்கு நேரடியாக வாக்கினை செலுத்துமாறு இலங்கை தமிழரசு கட்சியானது தீர்மானித்தமை ஒரு பாரதூரமான விடயமாகும் என அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

செப்டம்பர் 2ம் திகதி வவுனியாவில் நடைபெற்ற இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானம் குறித்து அவரிடம் வினவியவேளை அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ள நிலையில் பல கட்சிகள் சிவில் சமூகங்கள், பொது அமைப்புகள் என 89 அமைப்புக்கள் ஒன்றிணைந்து, மக்களது கருத்துக்களை கேட்டு, அவர்களுடன் கலந்துரையாடி தமிழ் மக்களுக்கான ஒரு பொது வேட்பாளரை தெரிவு செய்துள்ளார்கள்.

இது இவ்வாறு இருக்கும்போது இலங்கை தமிழரசு கட்சியானது மத்திய குழுவின் ஏகமனதான தீர்மானமாக சஜித் பிரேமதாஸ் அவர்களை ஆதரிப்பதான செய்தியை வெளியிட்டுள்ளார்கள். அது ஒரு சிந்தனையில்லாத, பாரதூரமான, மக்களுக்களிடையே அதிர்வலைகளை ஏற்படுத்துகின்ற ஒரு நிலைப்பாடாகும்.

அதுமட்டுமில்லாமல் அவர்களது கட்சியின் மத்திய குழு உறுப்பினரான திரு.அரியநேந்திரன் அவர்கள் இந்த ஜனாதிபதி போட்டியில் இருந்து விலக வேண்டும் என தெரிவித்துள்ளமை மிகவும் பாரதூரமான ஒரு விடயமாகும். இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ள பொது வேட்பாளர் தமிழ் மக்களிடையேயான ஒரு ஜனாதிபதியாக கருதப்படுவாரே தவிர இலங்கையின் ஜனாதிபதியாக வரப்போவதில்லை. இலங்கையின் ஜனாதிபதியாக வரக்கூடிய நிலை சிங்கள பெரும்பான்மையினத்துக்கே காணப்படுகின்றது.

ஒட்டுமொத்த தமிழ் மக்களும் ஒரே அணியில் நிற்கின்றோம், ஒட்டுமொத்த தமிழ் மக்களும் ஒரு இலக்கினை நோக்கி நகர்கின்றோம், ஒட்டுமொத்த தமிழ் மக்களும் இனப் பிரச்சினைக்கும் ஒரு தீர்வை தேடி பயணிக்கின்றோம், சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பயணிக்கின்றோம் என்பதை இலங்கை அரசுக்கும் சர்வதேசத்திற்கும் சங்கின் ஊடாக பறைசாற்ற வேண்டிய தேவை எமக்குள்ளது.

இது இவ்வாறு இருக்கையில் ஓரளவாவது அரசியல் ஞானம் இருக்கின்ற ஐக்கிய மக்கள் சக்தியின் வடக்கு மாகாண பொறுப்பாளர் ஒருவர் தான் உட்பட தமிழ் மக்கள் அனைவரும் முதல் வாக்கினை சங்கிற்கு அளித்துவிட்டு ஏனைய விருப்பு வாக்கினை தமது கட்சியின் சிங்கள வேட்பாளருக்கு அளிக்க வேண்டும் என கூறி இருக்கின்றார். அவர் தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள பற்றுதலை ஒரு அரசியல் ஞானத்துடன் கூறி இருக்கின்றார்.



இதே வேளையில் தமிழரசு கட்சியானது ஒட்டுமொத்தமாக நேரடியாக சஜித் பிரேமதாஸ அவர்களுக்கு மட்டும் ஆதரவினை அளத்திருப்பது ஒரு அரசியல் ஞானம் அற்ற, அல்லது தமிழ் மக்கள் மீது பற்றற்ற நிலையை எடுத்துக்காட்டுகின்றது.

இவர்கள் இது குறித்து தமக்குள் கருத்து வேறுபாடு இருந்திருந்தாலும், மக்களுடைய கருத்துக்களை கேட்டிருக்க வேண்டும். அடுத்ததாக தமது மத்திய குழுவை முழுமையாக கூடியிருக்க வேண்டும். மத்திய குழுவில் இருக்கின்ற சிலர் இந்தக் கூட்டம் கூட்டியமை குறித்து தமக்குத் தெரியாது என கூறியிருக்கின்றனர்.

இந்த சந்தர்ப்பத்தில் சி.சிறிதரன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பதாக தெரிவித்திருந்ததுடன், சங்கு சின்னத்தை தானே சரி செய்ததாக சிறிதரன் அவர்கள் தெரிவித்துள்ளார். ஆனால் தாங்கள் ஏக மனதாக தீர்மானம் எடுத்ததாக சுமந்திரன் கூறுகின்றார்.

எது அவ்வாறாயினும் சுமந்திரன், அரியநேந்திரனுக்கு வாக்கினை போடுவதற்கு விருப்பமில்லாத விட்டாலும், தமிழ் மக்களுக்காக முதலாவது வாக்கினை சங்கிற்கு போட்டுவிட்டு மத்திய வாக்கினை சஜித் பிரேமதாசாவுக்கு போடுங்கள் என சொல்லி இருக்கலாம்.

ஆனால் தமிழ் மக்களை ஒட்டுமொத்தமாக ஒதுக்கி விட்டு, தமிழ் மக்களுடைய கருத்தினை கேட்காமல், எங்களை அழித்து எமது இனத்திற்கு எதிராக செயற்பட்ட, பிரேமதாசாவின் பரம்பரையில் வந்த, ஜே.ஆர்.ஜெயவர்த்தினவின் வளர்ப்பில் வந்த சஜித் பிரேமதாஸ அவர்களுக்கு வாக்கினை போடுமாறு கூறுவது என்பது மிகவும் ஒரு ஆபத்தான அல்லது தமிழ் மக்களை ஏமாற்றமடைய வைக்கின்ற ஒரு விடயமாகத்தான் நான் கருதுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தமிழரசு கட்சி தனது வரலாற்று தவறை விரைவில் உணர்ந்து கொள்ளும் என்கிறார் பொ.ஐங்கர நேசன்



தமிழரசு கட்சி சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்கியமை வரலாற்று தவறு என விரைவில் உணர்ந்து கொள்ளும் என பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் தெரிவித்தார்.

03-09-2024 செவ்வாய்க்கிழமை தமிழ் பொது வேட்பாளர் அரியனேந்திரனின் ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபன வெளியீடு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தென்னிலை ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாசவுக்கு தமிழரசு கட்சி ஆதரவு தெரிவித்து தீர்மானம் எடுத்திருக்கிறது.

அந்தத் தீர்மானம் சிலர் எடுத்தார்களா பலர் எடுத்தார்களா என்ற கேள்விகளுக்கு அப்பால் தமிழரசு கட்சியில் இந்த தீர்மானத்திற்கு எதிராக இருப்பவர்கள் வெளியில் வந்து பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிக்க வேண்டும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் சரத் பொன்சேகா ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்ட போது நாம் அவருக்கு ஆதரவு வழங்கினோம்.

அவர் தற்போது கூறுகிறார் நான் யுத்த குற்றவாளியாக இருந்தால் எனக்கு கடந்த தடவை ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களித்திருக்க மாட்டார்கள் என கூறுகிறார்.

இப்போதுதான் புரிகிறது சரத் பொன்சேகாவை ஆதரித்தது பாரிய தவறு ஒன்றை தமிழ் மக்கள் செய்து விட்டார்கள் என எண்ணத் தோன்றுகிறது.

அதேபோல் தற்போது ஒற்றை ஆட்சியை வலியுறுத்தும் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு தமிழரசு கட்சி ஆதரவு வழங்கியதன் வரலாற்று தவறினை விரைவில் உணர்ந்து கொள்வார்கள்.

ஆகவே ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறுவதற்காக அல்ல தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளையும் அவர்களின் கோரிக்கைகளை பிரதிபலிக்கும் தமிழ் பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் தமது வாக்குகளை வழங்கி பலப்படுத்த வேண்டும் என அவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

# எதிர்க்கட்சி உறுப்பினரின் உயிராபத்து தொடர்பில் ஜனாதிபதி மீது குற்றச்சாட்டு

**"என்னுடைய உயிருக்கு ஆபத்து நேர்ந்தால் ரணில் விக்ரமசிங்கவே பொறுப்புக்கூற வேண்டும் என நாடாளுமன்றத்தில் தெரிவித்த முஜிபுர் ரஹ்மான்"**

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் எதிர்க்கட்சித் தலைவரின் தேர்தல் பிரசாரத்தின் முன்னணி உறுப்பினர் ஒருவர் குற்றச் செயலுக்கு உடந்தையாக இருப்பதாக பொய் சாட்சியத்தை முன்வைக்க ஆளும் தரப்பு சூழ்ச்சி செய்து வருவதாக நாடாளுமன்றில் தெரியவந்துள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசகர் மனுஷ நாணயக்கார சிறைச்சாலைக்குச் சென்று குற்றச் செயலில் ஈடுபட்ட சந்தேகநபருக்கு சலுகைகளை வழங்குவதாக உறுதியளித்ததன் பேரில் தமக்கு எதிராக வாக்குமூலம் பெற முயன்றதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் செப்டெம்பர் 4ம் திகதி புதன்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் துணைப் பொதுச் செயலாளரும், எம்.பியுமான., முஜிபுர் ரஹ்மான் தனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

"என்னுடைய உயிருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் ரணில் விக்ரமசிங்க பொறுப்புக்கூற வேண்டுமென நான் வெளிப்படையாகக் கூறுகின்றேன்," என நாடாளுமன்ற உறுப்பினர் சபையில் தெரிவித்தார்.

"மூன்று நாட்களுக்கு முன்னர், முன்னாள் அமைச்சர் மனு' நாணயக்கார மற்றும் அஸ்லம் என்ற நபரும் வெலிக்கடை தடுப்புக்காவல் சிறைச்சாலைக்குச் சென்று ஐந்து வருடங்களுக்கு முன்னர் குற்றம் ஒன்றுத் தொடர்பிலான சந்தேகநபரை சந்தித்துள்ளனர். அவரை சந்தித்து கொழும்பில் வீடு ஒன்றை தருவதற்கு வாகனம் தருவதற்கு மற்றும் பணம் தருவதற்கும் வெளியில் வருவதற்கு பிணை பெற்றுக்கொடுப்பதற்கும் ஏற்பாடுகளை மேற்கொள்வதாக தெரிவித்து, எனக்கு எதிராக வாக்குமூலம் ஒன்றை தருமாறு கோரியுள்ளனர்."

முன்னாள் அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பில் தன்னிடம் ஆதாரங்கள் உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபர் ரஹ்மான் நாடாளுமன்றத்தில் மேலும் தெரிவித்தார்.

"அந்த குற்றத்திற்கு, அவரை கைது செய்து ஐந்து வருடங்களாக தடுப்புக் காவலில் வைத்திருக்கின்றார்கள். அதனுடன் எனக்கும் தொடர்பு இருப்பதாக அவரிடம் வாக்குமூலம் ஒன்று கோரப்பட்டுள்ளது. இதுத் தொடர்பில், மனுஷ நாயணக்கார முன்னாள் அமைச்சர் அவரை சந்தித்தமை குறித்து என்னிடம் சாட்சியும் காணப்படுகின்றது."



தனது உயிர் பாதுகாப்பு தொடர்பான ஆபத்தான நிலை குறித்து நாடாளுமன்றத்தில் தெரிவித்த எதிர்க்கட்சி உறுப்பினர் தமக்கு எதிராக சூழ்ச்சி இடம்பெறுவதாகவும் குறிப்பிட்டார்.

"இது மிகவும் பாரதூரமான நிலைமை. கடந்த காலம் முழுவதும் இந்த அரசியலில் விசேடமாக ஐக்கிய மக்கள் சக்தி சஜித் பிரேமதாசவின் வெற்றிக்காக முன்னிலையில் நின்று செயற்படும் உறுப்பினர் ஒருவர் என்பது அனைவருக்கும் தெரியும். கொழும்பு நகரில் எங்கள் கட்சிக்காக நிறைய வேலைகளை செய்யும் உறுப்பினர் ஒருவர். ஆவே இன்று எனக்கு விளங்குகிறது அவர்களுக்கு அதனை தாங்கிக்கொள்ள முடியாமல் ஏதாவது ஒரு விடயத்தில் என்னை சிக்கவைத்து, என்னை சிறையில் அடைக்க அல்லது எனது உயிருக்கு பாதிப்பை ஏற்படுத்த மனுஷ நாணயக்கார அமைச்சருக்கும், ரணில் விக்ரமசிங்கவிற்கும் நோக்கம் இருக்கிறதா என எனக்குத் தெரியவில்லை. ஒரு சூழ்ச்சி ஒன்று இடம்பெற்றுக் கொண்டிருப்பது எனக்குத் தெரியும்."

தன்னிடம் உள்ள ஆதாரங்களை உடனடியாக கொழும்பு குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கவுள்ளதாகவும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# அப்பாவிப் பொது மக்களை வைத்து அரசியல் செய்யும் சுமந்திரன் போன்றவர்கள் அதிகாரத்தைப் பெற என்ன வேண்டுமானாலும் செய்வார்கள்

மன்னார் நிருபர்



**மன்னாரில் ஜனாதிபதி வேட்பாளர் பத்தரமுல்லை சீலரத்ன தேரர் தெரிவிப்பு.**
**- எஸ்.ஆர்.லெம்பேட் (05-09-2024)**

தாய் நாட்டின் சுபீட்சமான எதிர்காலத்துக்காக மக்கள் இன, மத பேதமின்றி ஒன்றிணைய வேண்டும் என ஜனசெத முன்னணியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தெரிவித்தார்.

05-09-2024 வியாழக்கிழமை காலை மன்னார் பேருந்து நிலையத்தில், மக்கள் மத்தியில் மேற்கொண்ட தேர்தல் பிரச்சாரத்தின் போதே ஜனசெத முன்னணியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான பத்தர முல்லை சீலரத்ன தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தமிழ் அரசியல் கட்சிகள் சஜித் பிரேமதாஸவுக்கு தங்கள் ஆதரவை வழங்கி ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இங்கு சஜித் பிரேமதாச மட்டுமல்ல ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உட்பட அனைத்து அரசியல் கட்சிகளுமே கூட்டணிகள் உருவாகும் போது ஒப்பந்தங்களை தூக்கி எறிந்து விடுவார்கள்.

அனுரகுமார திஸாநாயக்க, நாமல் ராஜபக்ஷ, துலிப் ஜயவீர போன்றவர்களும் அவ்வாறானவர்களே. இவ்வாறான தலைவர்களை தேர்வு செய்தால் மேலும் பாதிப்படைவது வடக்கு, கிழக்கு மக்களே.



சுமந்திரன் போன்றவர்கள் அதிகாரத்தைப் பெற என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். அவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் சிறப்பான வாழ்க்கை வாழ்கிறார்கள்.

வடமாகாணத்தில் வாழும் அப்பாவித் தமிழர்களுக்கு இதுவரை எந்த தீர்வும் எட்டவில்லை. அப்பாவிப் பொது மக்களை வைத்து அவர்கள் அரசியல் செய்கிறார்கள். எனவே தமிழ் மக்கள் சிந்தித்து உங்கள் வாக்குகளை டிரக்ரர் சின்னத்துக்கு அளிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.



# இலங்கையின் 9 ஆவது ஜனாதிபதியாக வருகிறவருக்கு தமிழ் பொது வேட்பாளர் என்கிற விடையம் ஒரு பாடமாக அமைய வேண்டும்

## மன்னாரில் தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் தெரிவிப்பு

**- எஸ்.ஆர்.லெம்பேட் (04-09-2024)**

சிதறிக்கிடக்கும் தமிழ் தேசியக் கட்சிகளை ஒன்றிணைத்து ஒரு குடையின் கீழ் கொண்டு வரும் நோக்குடன் தமிழ் பொது வேட்பாளர் ஜனாதிபதி தேர்தலில் களம் இறக்க பட்டுள்ளதாகவும்,இந்த நாட்டின் 9 ஆவது ஜனாதிபதியாக வருகிறவருக்கு ஒரு பாடமாக இது அமைய வேண்டும் என தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மன்னாரில் ரெலோ அலுவலகத்தில் 04-09-2024 புதன்கிழமை மதியம் இடம் பெற்ற மக்கள் சந்திப்பை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் ஏற்பட்ட ஏமாற்றங்களின் விளைவாகவும் நாங்கள் தொடர்ந்தும் ஏமாறுவதற்கு தயார் இல்லை என்பதை காட்டு வதற்கான ஒரு களமாக இத்தேர்தலை மக்கள் பயன்படுத்த வேண்டிய ஒரு நிலைப்பாடு மக்கள் மத்தியில் இருக்கிறது.

இதன் காரணமாக இத்தேர்தலில் என்னை களம் இறங்கியுள்ளனர். இணைந்த வட கிழக்கில் இருக்கின்ற மக்கள் அதி கூடிய வாக்குகளை அளிக்க வேண்டும்.

கடந்த காலங்களில் நாங்கள் ஏமாற்ற பட்டுள்ளோம் என்பதனை காட்டுகின்ற போது நாங்கள் போராடிய ஒரு இனம். தொடர்ச்சியாக சுதந்திரம் அற்று இருக்கின்றோம் என்ற விடையத்தின் ஊடாக ஒரு தீர்வு கிடைக்க வேண்டும்.

ஒரு அடையாளத்திற்காக வே நான் சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றேன். நீங்கள் சங்கு சின்னத்துக்கு வழங்கும் வாக்கு உங்களுக்கானது. தமிழன் தமிழனாக இருக்க வேண்டும்.தமிழ் மக்கள் வடக்கு கிழக்கில் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும்.

சிதரிக்கிடக்கும் தமிழ் தேசியக் கட்சிகளை ஒன்றிணைத்து ஒரு குடையின் கீழ் கொண்டு வரும் ஒரு நோக்காக இதனை அனைவரும் பார்க்க வேண்டும்.

யாரோ ஒருவர் ஜனாதிபதியாக வெற்றி பெறுவார். யாராகவும் இருக்கலாம். இந்த நாட்டின் 9 ஆவது ஜனாதிபதியாக வருகிறவருக்கு ஒரு பாடமாக இது அமைய வேண்டும். எங்களை தலைவர்கள் ஏமாற்ற இருந்தாலும் மக்களாகிய நாங்கள் தயார் இல்லை என்பதை காட்ட வேண்டும்.

எங்களுடன் 7 தமிழ் கட்சிகள் இணைந்துள்ளன..எனினும் இலங்கை தமிழரசு கட்சி அதில் இணையவில்லை. இலங்கை தமிழரசுக் கட்சியில் இருக்கும் ஒரு சிலர் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்க கூடாது என்கிற முடிவை எடுத்துள்ளார்கள். அது அவர்களின் உரிமை என தெரிவித்தார்.

இதேவேளை தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் மாவட்ட அமைப்பாளரும், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளருமான டானியல் வசந்தன் தனது கருத்துக்களை தெரிவித்திருந்தார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "காணாமல் போனவர்கள் எண்ணிக்கை மேற்குலகின் அறிவிலித்தனம்" என்கிறான் பொய்யனும் கோட்டாபாயவின் "கையாளுமான" அலி சப்ரி

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் ரத்தக்களறியுடன் முடிவடைந்து 15 வருடங்கள் கடந்துள்ளபோதிலும், இறுதி யுத்த காலத்தில் படையினரிடம் கையளிக்கப்பட்ட அல்லது சரணடைந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களுக்கு நீதி மற்றும் பொறுப்புக்கூறலை நிறைவேற்றுமாறு வடக்கு, கிழக்கின் தமிழ்த் தாய்மார் 2,750 நாட்களைக் கடந்து போராடி வருகின்ற நிலையில், காணாமல் போனவர்களின் எண்ணிக்கை "மிகவும் குறைவானவை" என இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வலியுறுத்தியுள்ளார்.

அரகலய மக்கள் எழுச்சி போராட்டத்தின் மூலம் பதவியிலிருந்து அகற்றப்பட்ட கோட்டாபய ராஜபக்சவுக்கு நெருக்கமான சட்டத்தரணியான அலி சப்ரி, ஜேர்மனிய அரச தொலைக்காட்சியான டோய்ச்சு வெலெவிற்கு (Deutsche Welle) அளித்த செவ்வியில், காணாமல் போனவர்கள் தொடர்பில் நாட்டில் நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள அலுவலகத்தில் 6,047 பேர் மாத்திரமே முறைப்பாடு செய்துள்ளதாக கூறியுள்ளார்.

இலங்கையின் வடக்கு, கிழக்கில் ஒரு இலட்சம் பேர் காணாமல் போயுள்ளதாக தகவல்கள் உள்ளதே என ஊடகவியலாளர் கேட்டதற்கு அதை கடுமையாக மறுத்தார் அலி சப்ரி. "அந்த எண்ணிக்கை உங்களுக்கு எங்கிருந்து கிடைத்தது? உங்களுக்கு அதை யார் கூறியது. அது சில மேற்குலக நாடுகள் கூறும் அறிவிலித்தனம். இல்லை, அந்த 100,000 என்பது முற்றிலும் தவறானது. அது 6,047 மாத்திரமே" என அவர் கூறினார்.

அவரது இந்த கருத்து நம்பகத்தன்மையற்றது மற்றும் தீய உள்நோக்கம் கொண்டது என தமிழர்கள் கூறுகின்ற நிலையில், சர்வதேச அமைப்புகள் இந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை மிக அதிக அளவில் குறிப்பிட்டுள்ளன.

"மக்களின் ஆயர்" என அறியப்படும் காலஞ்சென்ற முன்னாள் மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப், அரச தரவுகள் மூலம், இறுதிகட்ட போரின் போது மாத்திரம் 146,679 பேர் காணாமல் போனார்கள் எனக் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் தெரிவித்திருந்தார்.

ஆனால், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, முன்னாள் ஆயர் கூறிய எண்ணிக்கையைவிட மிக மிக குறைவான எண்ணிக்கையை தனது செவ்வியில் கூறியுள்ளார். சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபை காணாமல் போனவர்களின் தொகை அதிகபட்சமாக 100,000 என தனது அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது.

"இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்படும் இருண்ட வரலாறு என்பது அங்கு மனித உரிமைகள் எப்படி துச்சமாக மதிக்கப்படுகிறது என்பதைக் காட்டுகிறது. அதன் காரணமாக உள்நாட்டு யுத்தம் மற்றும் இளைஞர்களி புரட்சி இடம்பெற்றது. உலகளவில் வலிந்து காணாமல் ஆக்கப்படுபவர்களின் எண்ணிக்கையில் இலங்கை இரண்டாம் இடத்தில் உள்ளது. அங்கு 60,000 - 100,000 காணாமல் போயுள்ளதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன."

தனது செவ்வியில் இந்த எண்ணிக்கையை கடுமையாக மறுத்துள்ள அமைச்சர் அலி சப்ரி, இதற்கெல்லாம் புலம் பெயர்ந்த மக்கள் கணிசமாக வாழும் மேற்குலக நாடுகளே காரணம் என குற்றஞ்சாட்டி, அவை இலங்கை நிலவரத்தை "ஊதிப் பெருப்பித்து" வருகின்றன எனவும் சாடியுள்ளார்.

"வாக்கு வங்கி அரசியலை வைத்து, மேற்குலக நாடுகள் இப்படியான கூற்றுகளை முன்னெடுக்கின்றன. இதற்கு முக்கியமான காரணம் என்னவென்றால், அந்நாட்டிற்கு சென்று முக்கியமான இடங்களில் குடியேறியுள்ளவர்கள் அங்கு தேர்தல்கள் நடைபெறும் போது அவர்களது வாக்குகள் பெறுமதியானதாக உள்ளன. எனவே, இலங்கையை நோக்கிய அவர்களுடைய கொள்கையே புலம்பெயந்த மக்களால் தான் தீர்மானிக்கப்படுகிறது."

இதேவேளை கடந்த 8 ஆண்டுகளாக வடக்கு கிழக்கில் காணாமல் போன தமது உறவுகளை தேடி போராடி வரும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சங்கம், காணாமல் போனவர்கள் பற்றிய அலுவலகத்தை தொடர்ச்சியாக நிராகரித்து தமக்கு நம்பிக்கை இல்லை என கூறி வருகின்றனர். ஆனால் ஜேர்மனிய தொலைக்காட்சி செவ்வியில் அலி சபரி காணாமல் போனவர்கள் தொடர்பான பெரும்பாலான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

"கடந்த 2000 முதல் 2009 வரையிலான காலப்பகுதியில் தமது அன்பிற்குரியவர்கள் காணாமல் போயுள்ளதாக 6,075 பேர் முறைப்பாடு செய்துள்ளனர். அதில் 5,776 பேர் மீண்டும் வந்துவிட்டனர். அதாவது 96% வீதமானவர்கள். எனவே, அது இலங்கை அரசின் மீதுள்ள நம்பிக்கையை காட்டுகிறது. நாங்கள் அது தொடர்பிலான பணிகளை செய்து வருகிறோம். அவர்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றையும் நாங்கள் அமைக்கிறோம்."

எனினும் போரினால் பாதிக்கப்பட்டத் தமிழர்கள் அந்த ஆணைக்குழுவை ஏமாற்று வேலை எனக் கூறி நிராகரித்துள்ளனர்.

மேற்குலக நாடுகளுக்கு எதிரான தமது சாடலை அந்த செவ்வியில் தொடர்ந்த அமைச்சர் அலி சப்ரி, பொறுப்புக்கூறலுக்கான வழிமுறை முற்றாக உள்நாட்டு பொறிமுறையாகவே இருக்கும் என்பதை மீண்டும் வலியுறுத்தினார்.

"நாங்கள் உள்ளூர் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தும் நடவடிக்கையில் உள்ளோம். எவ்வாறாயினும், உள்ளூர் வழிமுறைகள் மூலமே நாங்கள் ஒரு தீர்வை அளிப்போம். வேறு யாரும் இங்கு வந்து அது குறித்து விசாரிப்பதற்கு நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை. 15 வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சிலவற்றை குறித்து அவர்கள் பேசுகின்றனர். ஆனால் அவர்கள் நாடுகளில் இழைக்கப்பட்ட தவறுகளுக்கு 200, 300 வருடங்கள் ஆகியுள்ளன."

தமிழர் பிரதேசத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகள் மற்றும் சர்ச்சைக்குரிய வகையில் தொடரும் காணி அபகரிப்புகள் தொடர்பாக கருத்து வெளியிட்ட அமைச்சர் 96 வீதமான காணிகள் அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் இது தவறான கருத்து என தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறுகின்றனர். பல ஏக்கர் காணிகள் இலங்கை இராணுவத்தால் பயிரிடப்பட்டு அவை வெளிச்சந்தையில் வர்த்தக ரீதியாக வியாபாரம் செய்யப்படுகின்றன, இதன் மூலம் போரினால் பாதிக்கப்பட்ட தாம் வாழ்வாதாரத்தை இழந்துள்ளதாக வடக்கு, கிழக்கு தமிழ் மக்களும் தெரிவிக்கின்றனர்.



இலங்கையில் இடம்பெற்ற ஒரு குண்டு வெடிப்பில் தானும் பாதிக்கப்பட்டதாகவும் அமைச்சர் அலி சப்ரி அந்த செவ்வியில் கூறியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா மீது நடத்தப்பட்ட ஒரு தாக்குதலில் தானும் பாதிப்படைந்ததாக கூறும் அவர், மேற்குலக நாடுகள் புலம்பெயர்ந்த மக்களின் சொற்களுக்கு செவி சாய்ப்பதைவிட நாட்டிலுள்ள அனைவரும் ஒற்றுமையாக வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டுமெனக் குறிப்பிட்டார்.


"திருமதி. சந்திரிகா குமாரதுங்க மீது ஒரு குண்டு வெடிப்பு தாக்குதல் நடந்த போது அதனால் நானும் பாதிக்கப்பட்டேன். அதனால் தான் நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவரும் வழியைப் பார்க்க வேண்டுமே தவிர, மேற்குலக நாடுகளிலுள்ளவர்கள் அல்லது வேறு எங்காவது உள்ளவர்களின் விருப்பப்படி நடக்க முடியாது, ஏனென்றால் நாங்கள் அனைவரும் ஒருவருடன் ஒருவர் இணைந்து வாழ வேண்டும்."

அமைச்சர் அலி சப்ரியின் கருத்துக்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது அமர்வு ஜெனீவாவில் நடைபெறவுள்ள நிலையில் வெளியாகியுள்ளதோடு, இந்த அமர்வின் முதல் நாளான செப்டெம்பர் 9ஆம் திகதி இலங்கையில் நிலவும் மனித உரிமை நிலைமைகள் குறித்த அறிக்கை குறித்த விவாதம் நடைபெறவுள்ளது.

## புதுவைப் பேராசிரியரும் தமிழறிஞருமான மு. இளங்கோவன் கனடாவிற்கு வருகின்றார்


கனடாவில் புதுவைப் பேராசிரியரும் தமிழறிஞருமான மு. இளங்கோவன் அவர்களது மூன்று நூல்கள் வெளியிடப்பெறவுள்ளன.

விபரங்களுக்கு இங்கே காணப்பெறும் அறிவித்தலைப் பார்க்கவும் அல்லது மருத்துவர் போல் ஜோசப் அவர்களை (416) 986-4903 என்னும் இலக்கத்தில் அழைக்கவும்.



# பொது வேட்பாளரும் தமிழரசுக் கட்சியும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**



பொது வேட்பாளருக்கு இதுவரை காலமும் பொது எதிரி என்று யாரும் இருக்கவில்லை. ஆனால் சுமந்திரன் தமிழரசு கட்சியை சஜித்தை நோக்கிச் சாய்த்ததோடு பொது வேட்பாளருக்கு ஒரு வில்லன் கிடைத்துவிட்டார்.

ஒரு நண்பர் பகிடியாகச் சொன்னார், அரியனேந்திரனை சுமந்திரன் எம்ஜிஆர் ஆக்கிவிட்டார், இனி நடக்கப் போவது எம்ஜிஆருக்கும் நம்பியாருக்கும் இடையிலான சண்டை. தமிழ் கூட்டு உளவியல் என்பது கதாநாயகன் - வில்லன் என்ற துருவ நிலைப்பட்ட மோதலை ரசிப்பது. நமது புராணங்களில் இருந்து திரைப்படங்கள் வரையிலும் அப்படித்தான் காணப்படுகின்றன. இந்நிலையில் தமிழரசுக் கட்சியை தமிழ்க் கூட்டு உணர்வுக்கு மாறாக சஜித்தை நோக்கி திருப்பியதனால் சுமந்திரன் இப்பொழுது வில்லனாக காட்டப்படுவார். அவர் வில்லனாகவும் அரியநேத்திரன் கதாநாயகனாகவும் காட்சிப்படுத்தப்படும் பொழுது அங்கே ஒரு திரைப்படம் ஓடும். அது தமிழ் பொது உளவியலைக் கவரும். இனி, தமிழ்ப் பொது வேட்பாளருக்கான பிரச்சாரம் தன்பாட்டில் நடக்கும். கதாநாயகனுக்கு வில்லனுக்கு இடையிலான மோதல். அது அரியனேத்திரனை நோக்கி அதிகம் வாக்குகளை ஈர்க்கும்" என்று.

ஆனால் அரியநேத்திரனை ஒரு பொது வேட்பாளராக முன்னிறுத்திய பொதுகட்டமைப்பில் அங்கம் வகிக்கும் மக்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் தெளிவாகக் கூறுகிறார்கள்...தமிழ் மக்களைத் திரட்டுவது; அல்லது ஒரு பொது நிலைப்பாட்டின் கீழ் மக்களை ஒன்றிணைப்பது; அல்லது தேசத்தைக் கட்டி எழுப்புவது என்பது ஒரு நபருக்கு எதிராகவோ ஒரு கட்சிக்கு எதிராகவோ செய்யப்படும் விடயம் அல்ல என்று. ஒரு நபருக்கு எதிராகவோ ஒரு கட்சிக்கு எதிராகவோ தேசத்தைக் கட்டி எழுப்ப முடியாது. தேசத்தைக் கட்டி எழுப்புவது என்பது ஆக்கபூர்வமானது. அது எதிர்மறையானது அல்ல. இந்த இடத்தில் வில்லர்களை முன்வைத்து அவர்களுக்கு எதிராக ஒரு மக்கள் கூட்டத்தை கட்டமைப்பது நிரந்தரமானது அல்ல. சரியானதுமல்ல என்பது தமிழ் மக்கள் பொதுச்சபைக்குள் அங்கம் வகிக்கும் கருத்துருவாக்கிகளின் நிலைப்பாடாகும்.

ஆனால் தேர்தல் களம் அந்த நிலைபாட்டிற்கு மாறாக கதாநாயகன் வில்லன் துருவ நிலைப்படத் தொடங்கி விட்டது. அதாவது தமிழ்ப் பொது உளவியலின் பொதுவான வாய்ப்பாட்டுக்குள் அது விழத் தொடங்கிவிட்டது.. இதனால் அரியநேத்திரனை நோக்கி குவியும் வாக்குகளின் தொகை அதிகரிக்கலாம்.

தமிழரசுக் கட்சியில் உள்ள சுமந்திரன் அணியின் இந்த முடிவு ஓரளவுக்கு எதிர்பார்க்கப்பட்டது. அதில் புதிதாக ஒன்றும் இல்லை. ஏற்கனவே கட்சியின் இரண்டு மாவட்டக் கிளைகள் பொது வேட்பாளருக்கு ஆதரவான நிலைப்பாட்டை உறுதியாக எடுத்திருந்த ஒரு பின்னணியில், தமிழரசுக் கட்சியின் மத்திய குழு சஜித்தை ஆதரிக்கும் முடிவை எடுத்திருக்கின்றது.

அதை அவர்கள் புத்திபூர்வமாக எப்படி நியாயப்படுத்துவார்களோ தெரியாது. ஆனால் கடந்த வார கட்டுரையில் கூறப்பட்டது போல,அரசியலை கணிதமாக, விஞ்ஞானமாக அணுகும் யாருக்கும் அது தெளிவாகத் தெரியும். சஜித்திடம் 13ஐத் தவிர வேறு எதுவும் இல்லை. அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில்தான் ஒரு புதிய யாப்பை பற்றிச் சிந்திக்கலாம். இந்நிலையில் தமிழரசுக் கட்சி கேட்கும் சமஸ்டித் தீர்வை அவர் தரப்போவதில்லை.

13கூட ஒரு புதிய தீர்வு அல்ல. ஏற்கனவே யாப்பில் இருப்பது. அப்படிப் பார்த்தால் யாப்பை நிறைவேற்றுவேன் என்று கூறும் ஒரு வேட்பாளருக்கு தமிழ் மக்களை வாக்களிக்குமாறு தமிழரசுக் கட்சி கேட்கின்றதா? இதை இன்னும் கூர்மையாகச் சொன்னால், ஒரு நாட்டின் அதி உயர் சட்ட ஆவணமாகிய யாப்பை நிறைவேற்றுவது தான் அந்நாட்டின் தலைவர்களுடையதும் அரசாங்கத்தினதும் பொறுப்பாகும். இலங்கைத் தீவு நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதி முறைமையைக் கொண்டது. கடந்த மூன்று தசாப் தங்களுக்கு மேலாக எட்டு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிகள் பதவியில் இருந்திருக்கிறார்கள். இவர்களில் யாருமே யாப்பில் இருக்கும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்தவில்லை என்பது எதனைக் காட்டுகிறது? முப்படைகளையும் கட்டுப்படுத்தும் நிறைவேற்று அதிகாரம் உடைய ஜனாதிபதிகள் யாப்பை நிறைவேற்றத் தவறியிருக்கிறார்கள் என்பதை தானே காட்டுகிறது! அதாவது இலங்கைத் தீவின் யாப்பை மீறி அவர்கள் ஆட்சி செய்திருக்கிறார்கள் என்று பொருள். கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக யாப்பை மீறும் ஒரு பாரம்பரியத்தை கொண்ட ஒரு நாட்டில் இப்பொழுது ஒரு தலைவர் யாப்பை அமல்படுத்துவேன் என்று கூறுகிறாராம் அவருக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டுமாம்.

சுமந்திரன் அணியின் இந்த முடிவு தமிழரசு கட்சிக்குள் மேலும் பிளவுகளை அதிகப்படுத்துமா? ஏற்கனவே இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. பொது வேட்பாளர் விடயம் தமிழரசு கட்சிக்குள் ஏற்கனவே காணப்படும் தலைமைத்துவ போட்டியை மேலும் ஆழப்படுத்தக்கூடிய வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவான அலையொன்று எழத் தொடங்கியிருக்கும் ஒரு பின்னணியில், சுமந்திரன் அணியின் முடிவு வந்திருக்கிறது. இரண்டு மாவட்டக் கிளைகள் பொது வேட்பாளருக்கு ஆதரவாக தீர்மானத்தை நிறைவேற்றியிருந்த ஒரு பின்னணியில், ஏனைய மாவட்டக் கிளைகளும் அவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதைத் தடுக்கும் நோக்கத்தோடும் அவ்வாறு சஜித்தை ஆதரிக்கும் முடிவு எடுக்கப்பட்டிருக்கலாம்.

இலங்கை போன்ற நாடுகளில் தேர்தலுக்கு முதல் வாரம் அல்லது சில நாட்களுக்கு முன்னர்தான் வாக்களிப்பு அலை தோன்றும். தமிழ்த் தேசிய அரசியலுக்கும் இது பொருந்தும்.

தமிழ் நடுத்தர வர்க்கத்தில் ஆங்கிலம் தெரிந்த ஒரு பகுதியினர் ரணில் மீதும் ஆர்வமாக காணப்படுகிறார்கள். மாற்றத்தை விரும்பும் மற்றொரு பிரிவினர் அனுரமீதும் ஆர்வமாக காணப்படுகிறார்கள். இப்பொழுது தமிழரசு கட்சியின் சுமந்திரன் அணியானது சஜித்தை ஆதரிக்குமாறு கேட்டு இருக்கிறது. அதனால் தமிழ் வாக்காளர்கள் நான்கு முனைகளில் சிதறடிக்கப்படுவார்களா?

அவ்வாறு தமிழ் வாக்காளர்கள் சிதறடிக்கப்படக்கூடாது என்று முடிவெடுத்துத்தான் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டிருக்கிறார். தமிழ் மக்களைக் கோர்த்துக் கட்டுவது, கூட்டிக்கட்டுவதுதான் என்று பொது வேட்பாளரை ஆதரிக்கும் தரப்பு தொடர்ச்சியாக கூறி வருகின்றது. ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான முதன்மைக் காரணம் தமிழ் மக்களை ஒன்றிணைப்பது. தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைப்பது. தமிழ்க் கூட்டு உளவியலை பலப்படுத்துவது என்று அவர்கள் கூறி வருகிறார்கள்.


அதாவது அவர்கள் தமிழ் வாக்காளர்களைத் திரட்ட முயற்சிக்கிறார்கள். ஆனால் சுமந்திரனும் அவருடைய அணியும் தமிழ் வாக்காளர்களைச் சிதறடிக்கலாம் என்று நம்புகிறார்கள். உள்ளதில் பெரிய கட்சி என்ற அடிப்படையில் தாங்கள் எடுத்த முடிவை தமிழ் மக்கள் ஆதரிப்பார்கள் என்று அவர்கள் நம்பக் கூடும். ஆனால் தமிழ் மக்கள் கூட்டுணர்வோடு முடிவெடுத்த தருணங்களில் கட்சியையோ சின்னதையோ தலைவர்களையோ பொருட்படுத்தவில்லை என்பதற்கு கடந்த நூற்றாண்டு முழுவதிலும் உதாரணங்கள் உண்டு.

ஜி ஜி பொன்னம்பலம் மகாதேவாவை தோற்கடித்தார். "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து செல்லடா" என்று கூறித் தோற்கடித்தார். ராமநாதன் குடும்பத்தில் வந்த உயர் குழாத்தைச் சேர்ந்த மகாதேவாவை ஜி.ஜி தோற்கடித்தார. செல்வநாயகம் ஜிஜியை இலட்சியத்தின் பெயரால் தோற்கடித்தார். அதன் பின் இந்தியா அமைதி காக்கும் படை நாட்டில் நிலை கொண்டிருந்த காலகட்டத்தில், கடந்த பொதுத் தேர்தலில்,முன்பின் அறிமுகம் இல்லாத சுயேட்சை சின்னத்துக்கு தமிழ் மக்கள் வாக்களித்தார்கள். வேட்பாளர்களின் முகமே தெரியாத ஒரு போர் சூழலில், தமிழ் மக்கள் ஒன்று திரண்டு வெளிச்ச வீட்டு சின்னத்துக்கு வாக்களித்து, 13 ஆசனங்களை ஈரோஸ் இயக்கத்துக்குக கொடுத்தார்கள்.

தேர்தலில் ஈரோஸ் இயக்கத்தின் பிரமுகராகிய பராவை இந்திய அமைதி காக்கும் படை கைது செய்து முகாமில் அடைத்து வைத்திருந்தது. தேர்தல் முடிவுகள் வெளிவந்த பொழுது கைதியாக இருந்த பராவை "நீங்கள் இப்பொழுது எம்பி ஆகிவிட்டீர்கள் வெளியே போகலாம்" என்று கூறி அனுப்பி விட்டார்கள்.

அத்தேர்தலுக்குப் பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உதயமாகிய பொழுது உதயசூரியன் சின்னத்தை தமிழ் மக்கள் தோற்கடித்தார்கள். உதய சூரியன் சின்னமானது ஒரு காலம் வெற்றியின் சின்னமாக இருந்தது. ஐக்கியத்தின் சின்னமாக இருந்தது.

உதயசூரியன் சின்னத்தை தோற்கடித்த ஒரு மக்கள் கூட்டம், முகம் தெரியாத வேட்பாளர்களுக்கு வாக்களித்து சுயேட்சையை வெல்ல வைத்த ஒரு மக்கள் கூட்டம், கூட்டுணர்வோடு முடிவெடுக்கும் பொழுது, சின்னமும் கட்சியும் ஒரு பொருட்டே அல்ல.



# SAME BREW A LEGENDARY ROAR

**SINHA beer, your beloved brew, continues to reign supreme, honouring its iconic LION identity, the name by which it is recognised worldwide.**

If you've ever indulged in the inimitable flavour of Sinha Stout, you've likely been captivated by its unique taste. While retaining its unique character, Sinha is now poised to embrace its original identity as Lion, the name that conquered the hearts of beer afficionados around the world. Lion Stout will remain the same signature brew you've come to know and love as Sinha.

Originating from the island of Ceylon, known for its legendary folklore, the legacy of the Lion roared into life in 1881. Unleashing its distinctly bold flavour through time-honoured recipes, the daring taste of Lion made its mark and became a revered name in the island. In 1998, the Lion ventured into uncharted territories, crossing borders to establish its rightful dominion in over 19 countries, triumphing over the palates of beer enthusiasts worldwide.

Today, Lion Brewery stands as a testament to the enduring legacy of time, steeped in tradition, and a relentless commitment to crafting beers that pack a punch. Skillfully fusing age-old recipes with state-of-the-art brewing techniques, Lion will continue its reign of dominance in Canada, bringing you a flavour that transcends generations.

**ONLY** STOUT IN ASIA TO BE LISTED IN 300 BEERS TO TRY BY ROGER PROTZ

**ONLY** BEER IN THE WORLD ENDORSED BY MICHAEL JACKSON THE LEGENDARY BEER WRITER

99/100 ratebeer




AVAILABLE IN 473ML CANS AT

LCBO
LCBO.COM

BEER STORE
THEBEERSTORE.CA

FOR MORE INFORMATION PLEASE CALL:
FINE BEERS AGENCY LIMITED AT 416-443-2020 OR
EMAIL FRED@FINEBEERS.CA

# MORTGAGE FINANCIAL SOLUTIONS

- RESIDENTIAL
- COMMERCIAL
- INDUSTRIAL
- CONSTRUCTION
- VACANT LAND




## RESIDENTIAL- COMMERCIAL

- **Purchase**
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- **Refinance**
- **Renewal**
- **Equity line of Credit**

Contact Us Today

## NESAN
*Subramaniam*

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

**Powered By**

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Mortgage Agent level 1 Licence # M15001465
Mortgage Alliance, Brokerage #10330

Scotiabank · TD Canada Trust · NATIONAL BANK · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · Manulife · Desjardins · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

# ஒரு சர்க்கஸ் கம்பெனியும் பல கோமாளிகளும்

- தயானந்தா



இதுவரை இல்லாததோர் ஜனாதிபதி தேர்தல் இலங்கையில் நடைபெற உள்ளது. பிரதானமாக இது மூன்று அல்லது நான்குமுனைப் போட்டி என்ரு சொல்லப்பட்டாலும், களத்தில் வேஷம் கட்டி 38 பேர் உள்ளனர். ஒருவர் உயிரிழந்ததால் அந்த எண்ணிக்கையில் ஒன்று குறைந்துள்ளது.

இலங்கையின் பாரம்பரியக் கட்சிகளின் சீரழிவைக் காட்டும் ஒரு தேர்தலாக இதைப் பார்க்க முடியும். நாட்டிற்கு விடுதலைப் பெற்றுத்தந்தது என்று கூறிக்கொள்ளும் ஐக்கிய தேசியக் கட்சியும் மக்களிடம் பிரபலமாக இருந்த அதன் யானைச் சின்னத்தையும் இம்முறை காண முடியவில்லை. ஆனை கட்டி போரடித்த கூட்டத்தில் ஒரு தனித்த விவசாயி மட்டுமே களத்தில் நிற்கிறார். அந்தப் பாரம்பரியக் கட்சியின் தலைவராக பல ஆண்டுகளாகக் கோலோச்சி நாட்டின் பிரதமராக, எதிர்க் கட்சித் தலைவராக, அரகலயவின் புண்ணியத்தில், இடைக் கால ஜனாதிபதியாக இருந்த ஒருவர் இன்று சுயேட்சையாக போட்டியிடும் நிலை.

உலகின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமையை பெற்றுத்தந்த ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலையோ, அந்தோ ஜபரிதாபம் என்றாகி இருக்கிறது. அது கழுதையாகி அதுவும் தேய்ந்து கட்டெறும்பான நிலை. அக்கட்சியின் சார்பில் விஜேதாச ராஜபக்ச நிற்பதாக அறிவிக்கப்பட்டிருந்தாலும், அவரோ அவரது கட்சியோ போட்டியிலேயே இல்லை என்று கூறும் சூழல் தான் நிலவுகிறது என்று கள ஆய்வுகள் காட்டுகின்றன. இம்முறை எந்த வேட்பாளரையும் ஆதரிக்கவில்லை ஆதரிக்கப்போவதுமில்லை என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் சொல்லிவிட்டு எங்கோ வாளாதிருக்கிறார்.

சுதந்திரக் கட்சியை உண்டு இல்லை என்று ஆக்கி, அதிலிருந்து பிரிந்து தனக்கென்று ஒரு கட்சியை குடும்ப சகிதம் உருவாக்கியவர் மகிந்த. தேர்தல் பகிஷ்கரிப்பால் ஜனாதிபதியாகி, போர் வெற்றிப் பெருமிதத்தில் தனது தம்பியையும் ஜனாதிபதியாக்கிக் காட்டிய மகிந்த ராஜபக்சவின் மொட்டின் இதழ்கள் உதிரத் தொடங்கி விட்டன. இன்று மொட்டு சின்னத்தில் தனது மகனை நிறுத்தியுள்ளார். உதிர்ந்த அந்தக் கட்சியில் மகிந்தவுடன் கூடி நின்ற பலர் இன்று பல்வேறு கட்சிகளில் ஐக்கியமாகியுள்ளனர், பலர் தமது சுய அடையாளத்தையும் இழந்துள்ளனர்.

தலைவரும், பிரதித் தலைவரும் மோதிக்கொண்டதில் பிளவுபட்ட ஐக்கிய (மில்லாத) தேசிய கட்சி இன்று அதிகாரபூர்வமான முறையில் போட்டியில் இல்லை. ரணிலுடன் முரண்பட்டு பிரிந்துவந்த சஜித், தனியாக கூட்டணி அமைத்து பழைய தொலைபேசியில் போட்டியிடுகிறார். ஆதரவுக்காக பலருக்கும் மணியடித்த அந்த தொலைபேசிக்கு மக்கள் மணியடிப்பார்களா இல்லையா என்பது இன்னும் இரு வாரங்களில் தெரியவரும்.

நாட்டிற்கு நல்லதொரு திசையை காட்டுகிறேன் என்று கூறி அனுரகுமார திசாநாயக்க, தேசிய மக்கள் சக்தி என்ற ஒரு கூட்டணியை ஏற்படுத்தி களத்தில் நிற்கிறார். அவர் நல்லதொரு திசையை காட்டுவார் என்று பரந்தளவில் நம்பப்படுகிறது. அவர் முன்னர் இருந்த மணி கட்சியில் இப்போது விரிசல் விழுந்து அது ஒலிப்பதை நிறுத்திவிட்டது. அதிலிருந்த மணியான தலைவர்களும் சித்தாந்தம் என்ற ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்று பசையுள்ள பக்கம் சென்றுவிட்டார்கள்.

காழ்ப்புணர்ச்சியின்றி பாரபட்சமற்று பார்ப்பதென்றால், இம்முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுபவர்கள் அனைவருமே ஒரு புதிய கட்சி அல்லது அமைப்பைச் சேர்ந்தவர்கள். ரணில் விக்ரமசிங்க ஜனாதியாக இருந்தாலும், அவருக்குக் கட்சி இல்லை. நாட்டில் கம்பீரமாக உலவி வந்த யானையை இப்போது காட்டில் மட்டுமே பார்க்க முடிகிறது. கையே நம்பிக்கை என்றதும் போச்சு. பாரம்பரியமாக வெற்றிலை கொடுத்து வரவேற்று உபசரிப்பது பண்பாட்டளவில் உள்ளதே தவிர சுவரொட்டிகளில் அதை கண்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. மணியோ இப்போது கோவில்களிலும் தேவாலயங்களிலும் மட்டுமே ஒலிக்கின்றன.

இவற்றுக்கு இடையே வடக்கில் தனி ஆவர்த்தனம். ஒரு புறம் பகிஸ்கரிப்பு பிரச்சாரம், மற்றொருபுறம் குழப்பங்களுக்கு இடையே சஜித்திற்கு ஆதரவு என்ற நிலைப்பாடு. இதற்கு இடையே "வடக்கு-கிழக்கு சிவில் சமூகம்" மற்றும் "லெட்டர் பேட் கட்சிகள்" என்று மக்களால் விமர்சிக்கப்படும் கட்சிகள் ஆகியவை இணைந்து பொது தமிழ் வேட்பாளர் ஒருவரை களமிறக்கியுள்ளனர். கிழக்கைச் சேர்ந்த ஒருவரை வடக்கிலுள்ளோர் வேட்பாளர் ஆக்கியுள்ளதே புதிய சிந்தனை, முன்னெடுப்பு என்று ஒரு தரப்பு புளகாங்கிதம் அடைகிறது.

சங்கை கையில் எடுத்துள்ள அரியநேத்திரன் அந்த சங்கொலி ஓங்கி ஒலித்து முழங்கச் செய்வாரா அல்லது மொத்தமாக தமிழ் தேசியம் என்ற கொள்கைக்கு சங்கூதிவிடுவாரா என்ற பேச்சுக்களும் அங்குமிங்குமாக எழுந்துள்ளன.

நாங்கள் எப்போதும் தேசியவாதிகள் என்று கூறிக்கொண்டு சிலர் தேசியக் கட்சிகள் மற்றும் அதன் வேட்பாளர்களை ஆதரிப்பதே தமது தலையாய கடமை என்று உறுதியாகவுள்ளனர்.

மலையகமும் பிளவுபட்டு நிற்கிறது. தமிழ் முற்போக்கு கூட்டணி தொலைபேசி மீது விளக்கொளியைப் பாய்ச்சியுள்ளது, சேவலோ சிலிண்டர் மேலேறி குந்தியுள்ளது. இனியும் எந்த அரசியல் கட்சியையும் நம்பி பிரயோசனம் இல்லை. மலையக மக்களை இரண்டாம்தர பிரஜைகள் என்ற நிலையிலிருந்து மீட்டெடுக்க வேண்டும் என்று மயில்வாகனம் திலகராஜ் களத்தில் இறங்கியுள்ளார்.

இப்படியான பின்னணியிலேயே இந்தத் தேர்தலை பல கோணங்களிலிருந்து பார்க்க முடியும், அல்லது பார்க்க வேண்டும், அல்லது அலச வேண்டும். இதெல்லாம் இன்னும் இரண்டு கிழமை மட்டுமே. 21,22ஆம் திகதிக்கு பிறகு ஆட்டம் வேறு மாதிரியாக இருக்கும்.

சரியாக 14 நாட்களில் ஜனாதிபதித் தேர்தலை நாடு சந்திக்க இருக்கிறது. முன் எப்போதும் இல்லாத வகையில் இனவாதப் பரப்புரைகள் அதிகமற்ற ஒரு பிரசாரத்தை இம்முறை காணக் கூடியதாக இருக்கிறது.

ஜனாதிபதி தேர்தலில் அதிக வாக்குகளைப் பெறக் கூடிய பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியாகி இருகின்றன. ஐந்தாண்டு செயற்பாடு - இயலும் சிறீலங்கா என்கிறார் ரணில் விக்கிரமசிங்க, ஒன்றிணைவோம் அர்ப்பணிப்போம் வெற்றி பெறுவோம் என்று ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தனது சகலருக்கும் வெற்றி என்ற மகுடத்தின் கீழான தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டிருக்கிறார். அழகான வாழ்க்கை வளமான நாடு என்கிறது தேசிய மக்கள் சக்தியின் அநுரகுமார திஸ ாநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனம். நாமல் இலக்கு - உங்களுக்காக முன்னேற்றகரமான நாடு என்ற தலைப்போடு நாமல் ராஜபக்ஷவின் விஞ்ஞாபனம் வெளியாகியுள்ளது.

மறுபுறத்தில் ஜனாதிபதி தேர்தலுக்கான தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் தேர்தல் அறிக்கையும் வெளி வந்திருக்கிறது. இந்த அறிக்கையின் பேசு பொருளாக நாட்டின் இனப்பிரச்சனை மையப் படுத்தப்பட்டிருக்கிறது.

தென்னிலங்கை வேட்பாளர்களின் விஞ்ஞாபானங்கள் அனைத்திலும் நாட்டின் பொருளாதார நெருக்கடியும் அதனை மீட்பதற்கான தமது திட்ட செயற்பாடுகளுமே பெரிதும் முதன்மை பெற்றுள்ளன. இந்நிலையில் நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி என்பதே இனப்பிரச்சனையை போரினால் முடித்து வைக்கும் முயற்சியில் கடந்த கால அரசுகள் பெற்ற கடன் சுமைதான் என்பதை தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் அறிக்கை சுட்டிக் காட்டி இருக்கிறது.

புரையோடிப் போயுள்ள இனபிரச்சனையும் யுத்த முடிவிற்கு பின்னர் எழுந்துள்ள புதிய பிரச்சனைகளுக்குமான தீர்வுகளாக முக்கியமான விஞ்ஞாபனங்கள் என்ன சொல்லி இருக்கின்றன என்பது கவனத்திற்குரியது.

கடன் சுமையிலிருந்து நாட்டை மீட்பது, மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழி சமைப்பது, புதிய வருமான வழிமுறைகளைக் கண்டறிவது, வரிக்கொள்கைகள். வேலைவாய்ப்புகள், கல்வி, சுகாதாரம், விவசாயம், தொழில்நுட்பம் என பல விடயங்கள் வழமைபோலவே இவற்றில் பேசப்பட்டுள்ளன.

தற்போதைய ஜனாதிபதியும் வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டப்படி மாகாண சபைகளுக்கு அதிகாரம் பகிரப்படும் என்றும் மத்திய அரசாங்கம் மாகாண சபைகளிடம் இருந்து திரும்பப் பெற்றுக்கொண்ட அதிகாரங்கள் மீண்டும் மாகாணசபைகளுக்கு கொடுக்கப்படுவதாகவும் பொலிஸ் அதிகாரம குறித்து புதிய நாடாளுமன்றம தீர்மானம் எடுக்கும் என்பதாகவும் கூறி இருக்கிறார். ஆனால், இதுவரை காலம் பிரதமராகவும் ஜனாதிபதியாவும் இருந்த போது இதெல்லாம் அவர் மனதில் உதிக்கவில்லையா, அல்லது செய்ய மனமில்லையா என்று மக்கள் கேட்பது அவர் காதில் அவசியம் விழுந்திருக்கும்.

மாவட்ட அபிவிருத்தி சபை நிறுவப்படும் அதேவேளை புதிய நாடாளுமன்றத்திடம் புதிய அரசமைப்பை இயற்றும் பொறுப்பு வழங்கப்படும் என்றும் ரணில் தெரிவித்துள்ளார். முன்னாள் போராளிகளுக்கான சுயதொழிலுக்கான நிதி நிவாரணம், போரில் இழக்கப்பட்ட தனியார் காணிகளுக்கான தீர்வை தரும் தேசிய காணி ஆணைக்குழு, காணாமல்போனவர்கள் தொடர்பில் நவாஸ் ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்துதல் அகியவற்றுக்கான உறுதி மொழிகளை தந்திருக்கிறார். இதெல்லாம் வாசிப்பதற்கும் கேட்பதற்கு நன்றாக இருந்தாலும், இரண்டாம் வாசிப்பின் போது புளித்துப்போன பழைய விடயங்களாகவே தோன்றுகிறது.

இதேவேளை தற்போதைய அரசமைப்பு 13வது திருத்தம் உட்பட முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்ற உறுதிமொழியை சஜித் பிரேமதாச தந்திருக்கிறார். ஆறு மாதங்களுக்குள் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என்று சொல்லும் சஜித் அவர்கள், தற்போதைய அரசியல் முறைமை பாராளுமன்ற முறைமைக்கு மாற்றி அமைக்கப்படும் எனக் கூறுகிறார். அதாவது நிறைவேற்று ஜனாதிபதி அதிகார முறை குழி தோண்டி புதைக்கப்படும் என்கிறார் சஜித். இது யதார்த்த ரீதியில் சாத்தியமா என்று அவரது மனசாட்சி பதில் சொல்லும். ஒரு முறை பதவி சுகத்தை அனுபவித்துவிட்டால் அதிலிருந்து வெளிவருவது எவ்வளவு கடினம் அல்லது விருப்பமில்லாதது என்று அனைவருக்குமே தெரியும். அப்படி நடந்தால் மகிழ்ச்சியே.

அரச ஆதரவுடனான இனவிகிதாசாரத்தை மாற்றியமைக்கும் கொள்கைகள் தடுக்கப்படும் என்றும், பாதுகாப்பு தரப்பின் கைகளில் இருக்கும் தேவையற்ற நிலங்கள் காணி உரிமையாளர்களிடம் விரைவில் கையளிக்கப்படும் என்றும் அவர் உறுதி கூறி இருக்கிறார்.

மற்றுமெரு முதன்மை வேட்பாளராக கருதப்படும் அனுரகுமார திசாநாய்க்க 2015 - 2019 ஆட்சிக் காலத்தில் முன் வைக்கப்பட்ட அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை துரிதமாக நிறைவு செய்து புதிய அரசமைப்பு இயற்றப்படும் என்ற உத்தரவாதத்தை வழங்கி இருக்கிறார். நாட்டில் கடந்த காலத்தில் இடம்பெற்ற படுகொலைகள், காணாமல் போனோர் மற்றும் ஆட்கடத்தல்கள் பற்றிய உரிய விசாரணைகளும் நீதி வழங்கலும் நிலைநாட்டப்படும் என்றும், அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு அவர்களின் சுதந்திர வாழ்வுக்கு வழிவகுக்கப்படுவதோடு, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் உள்ளடங்கலாக அடக்குமுறைசார்ந்த அனைத்துச் சட்டங்களும் இல்லாதொழிக்கப்படும் என்றும் உறுதி அளித்திருக்கிறார்.

அத்தோடு, மத முரண்பாடுகளை தீர்க்கவல்ல சர்வ மதப் பேரவை அமைக்கப்படும் என்றும் அவர் கூறி உள்ளார். தமிழ் பேசும் மக்களின் இடங்களில் தமிழ் மொழியின் பயன்பாட்டை உறுதி செய்தல், காணிகள் மற்றும் வாழ்விடங்கள் தொடர்பான விவகாரங்களுக்காக தேசிய ஆணைக்குழு அமைத்தல், வலிந்த குடியேற்றங்களைத் தடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்த உறுதிப்பாடுகளும் அனுரவின் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

ஆனால் தமிழர்களின் பிரதான கோரிக்கையான வடக்கு - கிழக்கு இணைப்பு, போர்க்காலங்களில் இடம்பெற்றதாக கூறப்படும் பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்களுக்கு பொறுப்புக்கூறல் ஆகியவற்றை எல்லோருமே சௌகரியமாக மறந்துவிட்டார்கள்.

இலங்கை இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் தேர்தல்கால வாக்குறுதிகள் பெரும்பாலும் சிலுசிலுப்பைகளே தவிர தேர்தல் வெற்றிக்கு பின்னர் அவை பலகாரம் ஆவதில்லை என்பதே அனுபவ அறிவு சொல்லும் பாடம்.

இதெல்லாம் அரசியலில் சகஜமப்பா என்று உங்கள் மனதில் தோன்றினால் அதற்கு நாம் பொறுப்பல்ல. அதே நேரம் நகைச்சுவை இல்லையென்றால் வாழ்க்கையும் இல்லை. ஆக மொத்தம் மக்கள் பையில் இருக்கும் காசை கொடுத்துவிட்டு, சிரிக்க வைக்கும் கோமாளிகளை கண்டு கைதட்டிவிட்டு அடுத்த வேலையைப் பார்க்கச் சென்று விடுவார்கள்.

அடுத்த நாள் அந்த கோமாளிகளைப் பார்க்க வேறு சிலர் வருவார்கள். இப்படித்தான் சர்க்கஸ் கம்பெனிகள் நடைபெறுகின்றன.



# தமிழ் மக்களை பழிவாங்கியது ரணிலா... சுமந்திரனா...?

***“ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை தமிழரசுக் கட்சி ஆதரிப்பதன் எதிர்வினையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு வெளிப்படுத்துவார் என்பது சுமந்திரன் எம்.பி.க்கு நன்கு தெரிந்தே தனது தனிநபர் பிரேரணை பாராளுமன்றத்திற்கு வருவதற்கு இரு நாள் முன்பு சஜித் ஆதரவை அறிவித்து ரணில் விக்கிரமசிங்கவை சூடாக்கி அதன்மூலம் தனது தனிநபர் பிரேரணையை தானே தடுக்க வைத்து ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களை பழிவாங்கி விட்டார். அவர் ஒரு மோசமான இனவாதி. எனவே நாம் சஜித்தை ஆதரிக்க எடுத்த முடிவு சரியானது என்ற பிரசாரத்தை சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவாக தொடங்கியுள்ளார்.”***

**- கே. பாலா**

“நந்தவனத்தில் ஓர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி
கொண்டு வந்தான் ஒரு தோண்டி - மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி”

**மே**லோட்டமாகப் பார்த்தால் இது சாதாரண வேடிக்கை பாடல் போலத் தோன்றும். ஆனால் வாழ்க்கையின் உன்னதமான ஒரு தத்துவத்தை கடுவெளி சித்தர் நான்கு வரிகளில், எளிய வார்த்தைகளில் மிக அற்புதமாக விளக்கி இருப்பார். இது பலரின் வாழ்க்கைத் தத்துவத்தை விளக்குகின்றதோ இல்லையோ தற்போதைய நிலையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட எம்.பி.யான எம்.ஏ.சுமந்திரனுக்கு இப்பாடல் நன்றாகவே பொருந்துகின்றது. அது ஏன் என்று பார்ப்போம்.

மாகாண சபைகளுக்கான காலம் முடிவடைந்தும் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படாமையால் மாகாண சபைகள் செயலிழந்துள்ளன. புதிதாக எல்லைகளை நிர்ணயம் செய்து புதிய முறையில் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த முயற்சித்த நிலையிலேயே மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது. இவ்வாறான நிலையிலேயே 25-04-2023 அன்று பழைய தேர்தல் முறையில் மாகாண சபை தேர்தல்களை உடனடியாக நடத்தக் கூடியவாறான தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை இலங்கை தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட எம்.பி.யான எம்.ஏ.சுமந்திரன் தனிநபர் பிரேரணையாக சபையில் சமர்ப்பித்தார்.

1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தை திருத்தும் வகையில் இந்த சட்டமூலம் சபையில் முதல் வாசிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டது. சுமந்திரன் எம்.பி. சமர்ப்பித்த இந்த தனிநபர் பிரேரணையை தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் எம்.பி.யுமான மனோ கணேசன் ஆதரித்து வழிமொழிந்திருந்தார். இந்த மாகாணசபை தேர்தல் திருத்தச் சட்டமூலம் தனிநபர் சட்டமூலமாக முன்வைக்கப்பட்ட நிலையில் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

மாகாண சபைத் தேர்தல்களை பழைய முறையில் நடத்தி மாகாண சபைகளை மீண்டும் இயங்க வைப்பதற்காக சுமந்திரன் எம்.பி.சமர்ப்பித்த தனிநபர் பிரேரணை கடந்த ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இரண்டாம் வாசிப்புக்காக எடுக்கப்பட்டு விவாதம் எதிர்ப்பின்றி இந்தச் சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றம் செய்துள்ள பரிந்துரைகளைச் சட்டமூலத்தில் திருத்தங்களாகச் செய்வதற்காக அது பாராளுமன்றத்தின் சட்டங்களுக்கான நிலையியற் குழுவுக்கு அனுப்பப்பட்டது. நிலையியற் குழுவின் திருத்தங்களோடு கடந்த செப்டம்பர் 3 ஆம் திகதி மீண்டும் பாராளுமன்றத்தில் மூன்றாம் வாசிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாக நிறைவேற்றப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது.

சுமந்திரன் எம்.பி.யின் இந்த மாகாண சபைத் தேர்தல் தொடர்பான திருத்த சட்டமூல தனிநபர் பிரேரணைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆதரவளித்திருந்ததுடன் அதனை சட்டமாக நிறைவேற்றுவதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவும் உறுதியளித்திருந்தார். இதற்கிடையில் ஜனாதிபதித்தேர்தல் செப்டம்பர் 21 ஆம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டு அதற்கான பிரசாரங்கள் தீவிரப்படுத்தப்பட்டன. இவ்வாறான நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோர் தமது வெற்றியை உறுதிப்படுத்த தமிழ், முஸ்லிம் கட்சிகளை ஆதரவைக் கோரினர்.

இதில் பல தமிழ், முஸ்லிம் கட்சிகள் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச ஆகியோருக்கு தமது ஆதரவு அறிவிப்புக்களை வெளியிட்ட நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சி மட்டும் யாருக்கும் ஆதரவளிக்காது இருந்தது. அக்கட்சியின் பேச்சாளரான எம்.ஏ. சுமந்திரன். நாம் தேர்தலுக்கு முதல் நாள் எமது ஆதரவு யாருக்கு என அறிவித்தாலும் தமிழ் மக்கள் அந்த வேட்பாளருக்கு ஆதரவளிப்பார்கள் என அறிவித்திருந்தார்.

இதற்கிடையில் மாகாண சபைத் தேர்தல்களை பழைய முறையில் நடத்தி மாகாண சபைகளை மீண்டும் இயங்க வைப்பதற்காக சுமந்திரன் எம்.பி.சமர்ப்பித்த தனிநபர் பிரேரணை செப்டம்பர் 3 ஆம் திகதி மீண்டும் பாராளுமன்றத்தில் மூன்றாம் வாசிப்புக்காகச் சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாக நிறைவேற்றப்படுவதற்கு ஒழுங்குப் பத்திரத்தில் உள்வாங்க இணக்கம் காணப்பட்டிருந்தது. இது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க சுமந்திரனுக்கும் தெரியப்படுத்தியிருந்தார்.

இவ்வாறு சுமந்திரன் எம்.பி.யின் மாகாண சபைத் தேர்தல்களை பழைய முறையில் நடத்தி மாகாண சபைகளை மீண்டும் இயங்க வைப்பதற்கான தனிநபர் பிரேரணை சட்டமாவதற்கான காலம் கனிந்து வந்த நிலையில்தான் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அதாவது செப்டம்பர் 3 ஆம் திகதி மீண்டும் பாராளுமன்றத்தில் மூன்றாம் வாசிப்புக்காகச் சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாக நிறைவேற்றப்படுவதற்கு ஒழுங்குப்பத்திரத்தில் உள்வாங்க இணக்கம் காணப்பட்டிருந்த சுமந்திரனின் தனிநபர் பிரேரணை அன்றைய ஒழுங்குப் பத்திரத்தில் உள்வாங்கப்படவில்லை.

கடந்த செப்டம்பர் 3 ஆம் திகதி பாராளுமன்றம் கூடிய நிலையில் ஒழுங்கு பிரச்சினை ஒன்றை எழுப்பிய இலங்கை தமிழரசுக் கட்சியின் எம்.பி. யான எம்.ஏ.சுமந்திரன்,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அதிகார பகிர்வு விவகாரம் குறித்து எம்முடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். இதற்கமைய 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சர்வகட்சி மாநாட்டை நடத்தினார். எமது பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக நாங்கள் அந்த சர்வகட்சி கூட்டத்தின் 5 சுற்று பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டோம். 75 ஆவது சுதந்திரத்துக்கு முன்னர் அதிகார பகிர்வு உள்ளிட்ட அடிப்படை விடயங்களுக்கு தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி வாக்குறுதியளித்தார். ஆனால் ஏதும் நடக்கவில்லை. ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் எம்முடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது வருடக்கணக்கில் தாமதப்படுத்தப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று வலியுறுத்தினோம். இதனை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் உள்ள சட்ட சிக்கலுக்கு தீர்வு காணும் வகையில் தனிநபர் பிரேரணை ஒன்றை நான் கடந்த காலங்களில் முன்வைத்திருந்தேன்.

மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் சட்ட நிலையியல் குழுவில் அவதானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இன்று (செப்டம்பர் 3) மூன்றாம் வாசிப்புக்கு எடுத்துக் கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்றைய தின (செப்டம்பர் 3) பாராளுமன்ற ஒழுங்கு பத்திரத்தில் அது சேர்க்கப்படவில்லை. இந்த சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த நிலையில் வெளியக அழுத்தத்தினால் மூன்றாம் வாசிப்புக்கு எடுத்துக் கொள்வது தடுக்கப்பட்டுள்ளது. இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு கடந்த ஞாயிற்றுக்கிழமை (செப்டம்பர் 1) வவுனியாவில் கூடியது. சுமார் ஐந்து மணித்தியாலங்கள் கலந்துரையாடி, தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்க போவதில்லை என்ற தீர்மானத்தை திட்டவட்டமாக எடுத்தோம். எமது மக்களையும். தேசியத்தையும் கருத்திற் கொண்டு இந்த துணிச்சலான தீர்மானத்தை எடுத்தோம்.

இந்த தீர்மானம் வாக்கெடுப்பின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மூன்று பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தை முழுமையாக ஆராய்ந்து பார்த்ததன் பின்னர் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானம் எடுத்தோம். யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை எமது மக்களுக்கு குறிப்பிடும் பொறுப்பு எமக்கு உண்டு. இவ்வாறான பின்னணியில் தான் இன்று (செப்டம்பர் 3) மூன்றாம் வாசிப்புக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த மாகாண சபைகள் திருத்தச் சட்டமூலம் தடுக்கப்பட்டுள்ளது. இதனையே அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிட வேண்டும். இந்த ஒரு செயற்பாட்டின் ஊடாக தான் யார் என்பதை ஜனாதிபதி மீண்டும் நிரூபித்துள்ளார். வாய் சொல்லால் பல வாக்குறுதிகளை வழங்குவதும், அதை நடத்துவதை போன்று காண்பிப்பதும், இறுதி தருவாயில் வழங்கிய வாக்குறுதியை செயற்படுத்தாமல் இருப்பதும் ரணில் விக்கிரமசிங்கவின் சுபாவம் என்பதை இந்த தருணத்திலும் காண்பித்துள்ளார்.

பிரதான தமிழ் கட்சி தனக்கு ஆதரவு வழங்காமல் இருக்க எடுத்த தீர்மானத்தால் தமிழ் மக்களை தண்டிக்க வேண்டும் என்பதற்காக அரைகுறை தீர்வாகவுள்ள மாகாண சபை தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு மிக மோசமான நடவடிக்கையில் ரணில் விக்கிரமசிங்க இறங்கியுள்ளார். ஜனாதிபதியின் இந்த செயற்பாடு நாங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை எடுத்த தீர்மானம் சரி என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த செயலால் ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்கள் முன்னாலும் நாட்டு மக்கள் முன்னாலும் இனவாதியாக காட்டப்படுவார். நான் செய்ய இருந்த விடயம் என்றும் அதற்கு அனுமதி வழங்குவதாகவும் கூறிவிட்டு கடைசி நேரத்தில் எங்கள் மீது காட்டும் வெறுப்பாகவே நாங்கள் இதனை பார்க்கின்றோம். நாட்டில் மிக மோசமான இனவாதியாக ஜனாதிபதி செயற்படுகின்றார் என்பதற்கான வெளிப்பாடே இது. தமிழ் மக்கள் அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும். ராஜபக்ஷக்களுடன் கூட்டு சேர்ந்து மாகாண சபைகள் தேர்தல் நடத்தப்படக் கூடாது என்று ஜனாதிபதி தடுக்கும் இனவாத செயற்பாடாகவே இதனை நாங்கள் பார்க்க வேண்டும்” என்று கூறியிருந்தார்.

மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூல தனது தனிநபர் பிரேரணையை நிறைவேற்றவிடாது தடுத்து தமிழ் மக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பழிவாங்கிவிட்டார். அவர் ஒரு மோசமான இனவாதி என சுமந்திரன் குற்றம்சாட்டுகின்றார். ஆனால் மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூல தனது தனிநபர் பிரேரணையை செப்டம்பர் 3 ஆம் திகதி ஒழுங்குப்பத்திரத்தில் உள்வாங்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்து அதனை சுமந்திரனுக்கும் தெரிவித்திருந்த நிலையில் அவசரம் அவசரமாக செப்டம்பர் 1 ஆம்திகதியே கட்சியின் தலைவருக்கு கூட தெரியாமல் இலங்கை தமிழரசுக்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கின்றதென சுமந்திரன் அறிவித்ததன் பின்னணி என்ன?

**(தொடர்ச்சி 18 பக்கம்)**

# 'நாம் ஒன்றுப்பட்டே உள்ளோம் என்பதை உலகிற்கு காட்டுவதற்காக எமது பொது வேட்பாளருக்கு வாக்களிப்போம்!'

## உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அறைகூவல்

"எமது தாய் மண்ணில் அடக்கப்பட்டு வாழும் ஒரு இனமாகவும் புலம்பெயர் நாடுகளில் ஒரு ஆரோக்கியமான இனமாகவும் வாழ்ந்து வரும் ஈழத் தமிழர்களாகிய நாம் ஒன்றுப்பட்டே உள்ளோம் என்பதையும் எமது வாக்குகளுக்கும் ஒரு பலம் உண்டு என்பதை உலகிற்கு காட்டுவதற்காக எமது பொது வேட்பாளருக்கு வாக்களிப்போம் எனவே எதிர்வரும் இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தங்கள் முதலாவது வாக்கை தமிழ்ப்பொது வேட்பாளர் கிழக்கு மண் தந்த அரியநேந்திரன் அவர்களுக்கு அளித்து எமது அடையாளத்தை நிரூபிப்போம்!"

இவ்வாறு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்கள் அறைகூவல்விடுத்துள்ளார்.

கனடாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் தலைவராக தற்போது நடா ராஜ்குமார் அவர்கள் பணியாற்றிவருகின்றார் என்பதும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடா தலைமையகத்திற்கு கீழ் இயங்கும் அனைத்து கிளைகளையும் சீர் செய்யும் முயற்சிகள் தீவிரமாக முடுக்கிவிடப்பட்ட நிலையில், உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் "தமிழ்ப் பொது வேட்பாளர்" தொடர்பான கருத்தை அவசியம் கருதி வெளியிட்டுள்ளார் என்பதும் இங்கே காணப்படும் புகைப்படம் பல வருடங்களுக்கு முன்னர் ஜேர்மனியில் எடுக்கப்பெற்றது என்பதும் அதில் தற்போதைய "தமிழ்ப் பொது வேட்பாளர்" அரியநேந்திரன் அவர்கள் ஒரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் திரு கணேசலிங்கம் அவர்களால் இயக்கத்தின் முக்கிய மாநாடு ஒன்றிக்கு 2010ம் ஆண்டு ஜேர்மனி தேசத்திற்கு அழைக்கப்பெற்றவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்கள் விடுத்துள்ள இந்தஅறிக்கையில் தொடர்ந்து அவர் தெரிவித்துள்ளதாவது:

எமது இனம் இலங்கைத் தீவில் கடந்த 70 வருடங்களுக்கு மேலாக தென்னிலங்கை பௌத்த பெரும்பான்மை சக்திகளாலும் முதலாளித்துவ சக்திகளாலும் நசுக்கப்பட்டு வருகின்ற ஒரு இனமாக உள்ளது. இதனால் வெகுண்டெழுந்த எமது தலைவர்களும் தொண்டர்களும் முதலில் அகிம்சைப் போராட்டத்தை நடத்தினார்கள். அமைதிப் போராட்டத்தை நடத்துகின்றார்களே என்று எமது மக்களை அடக்குமுறையாளர் விட்டுவிடவில்லை. அடித்தும் அவமதித்தும் கைது செய்து சிறையில் அடைத்தார்கள்.

தொடர்ந்து எமது தலைவர்களை ஒரு பக்கத்தில் செயற்படுமாறு விட்டு விட்டு இளைஞர்கள் ஆயுதமேந்தி நின்று "தமிழீழம்" என்ற கோட்பாட்டுடன் போராடத் தொடங்கினார்கள். அந்த போராட்டத்தை முறியடிக்க உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் எதிர்ப்புச் சக்திகள் உருவாகின. அவற்றையெல்லாம் முறியடித்து புலம் பெயர்ந்த தமிழர்களின் பேராதரவுடன் விடுதலைப் போராட்டம் "கூர்மை" அடைந்தது. வெற்றியின் வாசலுக்கு அருகில் சென்று கொண்டிருந்த எமது விடுதலைப் போராட்டத் தலைவர்களையும் அவர்கள் பின்னால் அணிவகுத்து நின்ற போராளிகளையும் மக்களையும் உலக நாடுகள் பல இலங்கை அரசுடன் இணைந்திருந்து அழித்தன.

2009ம் ஆண்டுக்கு பின்னர் பலமிழந்தவர்களாக இருந்த எமக்கு தமிழ் மக்களின் பலத்தை நிரூபிப்பதற்கு ஒரு வாய்ப்பு கிட்டியுள்ளது. எனவே நாம் அதைப் பயன்படுத்துவோம். எமது பொது வேட்பாளரின் வெற்றிக்காக உழைக்கும் பலர் புலம் பெயர்ந்து வாழும் பல அன்பர்கள் உற்சாகமாக பங்களித்து வருகின்றனர்.

எனவே எமது தாயக மக்களின் நலன்களுக்காகவும் இனத்தின் ஒற்றுமையை காட்டுவதற்காகவும் எதிர்வரும் இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தங்கள் முதலாவது வாக்கை தமிழ்ப்பொது வேட்பாளர் கிழக்கு மண் தந்த அரியநேந்திரன் அவர்களுக்கு அளித்து எமது அடையாளத்தை நிரூபிப்போம்!"

இவ்வாறு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் செயலாளர் நாயகம் ஜேர்மனி வாழ் துரை கணேசலிங்கம் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

( 17 பக்கம் தொடர்ச்சி)

## தமிழ் மக்களை பழிவாங்கியது ரணிலா... சுமந்திரனா...?

**கே. பாலா**

தேர்தலுக்கு முதல் நாள் நாம் எந்த ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவென அறிவித்தாலும் தமிழ் மக்கள் அவருக்கு வாக்களிப்பார்கள் எனத் தெரிவித்திருந்த சுமந்திரன் எம்.பி, இரு நாட்களுக்குள் தனது தனிநபர் பிரேரணை பாராளுமன்றத்தில் எடுக்கப்படவிருந்தது தெரிந்தும் 20 நாட்களுக்கு முன்னரே ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கின்றோம் என அறிவித்தது ஏன்?

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை தமிழரசுக்கட்சி ஆதரிப்பதன் எதிர்வினையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு வெளிப்படுத்துவார் என்பது சுமந்திரன் எம்.பி.க்கு நன்கு தெரிந்தே தனது தனிநபர் பிரேரணை பாராளுமன்றத்திற்கு வருவதற்கு இரு நாள் முன்பு சஜித் ஆதரவை அறிவித்து ரணில் விக்கிரமசிங்கவை சூடாக்கி அதன்மூலம் தனது தனிநபர் பிரேரணையை தானே தடுக்க வைத்து ரணில்விக்கிரமசிங்க தமிழ் மக்களை பழிவாங்கி விட்டார். அவர் ஒரு மோசமான இனவாதி என்ற பிரசாரத்தை சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவாக தொடங்கியுள்ளார்.

சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவளிகும் இலங்கை தமிழரசுக்கட்சியின் நிலைப்பாட்டை ஒரு சில தினங்கள் தாமதித்து அறிவித்திருந்தால் ஒன்றும் குடிமுழுகிப்போய்விடாது. ஆனால் சுமந்திரன் நன்கு திட்டமிட்டே தனது தனி நபர் பிரேரணை பாராளுமன்றத்திற்கு வருவதற்கு இரு நாட்கள் முன்னர் தமிழரசுக்கட்சியின் சஜித் ஆதரவு முடிவை அறிவித்துள்ளார். கட்சியில் உள்ள சிலர் கூட இந்த முடிவை முதலில் அறிவிப்பதனால் உங்களின் தனிநபர் பிரேரணைக்கு ஆபத்து வரலாம் என சுட்டிக்காட்டியதாக கட்சியின் உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

ஆகவே சஜித்துக்கு ஆதரவளிப்பதற்கான ஒரு காரணத்தை உருவாக்கவும் ரணிலை எதிர்ப்பதற்கான தனது முடிவை நியாயப்படுத்தவுமே சுமந்திரன் எம்.பி. தனது தனிநபர் பிரேரணைக்கு எதிராக தானே குழிபறித்து ரணில் விக்கிரமசிங்க தமிழர்களை பழிவாங்கிவிட்டார் எனக்கூறி தமிழ் மக்களை முட்டாள்களாக்கப் பார்க்கின்றார். பிரதான தமிழ் கட்சி தனக்கு ஆதரவு வழங்காமல் இருக்க எடுத்த தீர்மானத்தால் தமிழ் மக்களை தண்டிக்க வேண்டும் என்பதற்காக அரைகுறை தீர்வாகவுள்ள மாகாண தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு மிக மோசமான நடவடிக்கையில் ரணில் விக்கிரமசிங்க இறங்கியுள்ளார். ஜனாதிபதியின் இந்த செயற்பாடு நாங்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை எடுத்த தீர்மானம் சரி என்பதை உறுதிப்படுத்தியுள்ளது என்று தமது தமிழர் விரோத முடிவையும் நியாயப்படுத்த முயற்சிக்கின்றார்.

ஆகவே, தனது மாகாண சபைத் தேர்தல்கள் திருத்தச் சட்டமூல தனிநபர் பிரேரணை செப்டம்பர் 3 ஆம் திகதி மூன்றாம் வாசிப்புக்கு எடுத்துக் கொள்ளப்படாமைக்கு சுமந்திரன் எம்.பி.யே காரணம். தனது சஜித் பிரேமதாச ஆதரவுக்காக தமிழ் மக்களை பழிவாங்கியவர் ரணில் விக்கிரசிங்கவல்ல. தனது சஜித் ஆதரவு முடிவை நியாயப்படுத்த சுமந்திரன் எம்.பி.யே தமிழ் மக்களை பழிவாங்கியுள்ளார்.

## சுற்றுலா (Peterborough)

மூத்தோர் சங்க மாணவர் நாங்கள்
மூச்சாய் சுற்றுலா போகவே!
காத்திரமாய்க் கலந்து பேசி முடிவுடன்
கிரிசாந்தி உதவியை நாடினோம்
போகும் இடத்தைப் பொறுப்பாய்த் தேர்ந்தே!
பார்க்கு மிடத்தைக் கணித்தோம்
ஏகும் நாளை ஏக்கமாய்ப் பார்த்தே!
எண்ணி நாளைக் கழித்தோமே!

முப்பது பேருமே முழுதாய்க் கூடியே!
முற்பகல் நேரம் ஏழளவில்
கப்பல் போன்ற குளிருள்ள பேருந்தில்
காணும் இடம்நோக்கி விரைந்தோம்
பாசமாய்க் கிரிசாந்தி பகிர்ந்த பாணை
பாராட்டி நாமுமே உண்டோம்
நேசமாய் நாமெலாம் கூடிக் களித்தே!
நேரத்துடன் பீற்றபறோ சென்றோமே!

பத்தரை மணிக்குப் பவிசாய்க் கப்பலேறி
புதுமையாய் அதிசயம் பார்த்தோம்
மத்திம நேரம் மரக்கறிக் குழையல்
மனமாய் வழங்கினார் அந்தோனியா
கட்டுச் சாதம் களிப்பாய் எடுத்தே!
கலந்து பகிர்ந்து உண்டோம்
பட்டுப் போன்ற பட்சன வகைகளை
பிரியமாய் உண்டு மகிழ்ந்தோமே!

ஆதிக் குடிகளின் அழகு வாழ்வை
ஆவலாய்ப் பார்த்து மகிழ்ந்தோம்
மாதிரி வீட்டையும் மயக்கும் கலையையும்
மனது குளிரப் பார்த்தோம்
மாலையில் மிருகக் காட்சியும் பார்த்தோம்
மகிழ்ரயில் பயணமும் போனோம்
சாலை ஓரக்கடைத் தேநீர்ச் சுவையுடன்
சுகமாய் வீடுவந்து சேர்ந்தோமே!

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன் ... (416) 844-7453**

# பத்து ஆண்டுகள் பறந்தோடியதோ? மறக்க முடியாத மகத்தான மனிதர் பொ. க.

த.சிவபாலு



அதிபர் மறைந்து பத்து ஆண்டுகள் மறைந்தோடிவிட்டது என்பதை நம்பமுடியளாதுள்ளது. அவரின் நினைவாக நண்பர்களால் நாட்டப்பட்ட பெருமரக் கன்றொன்று இன்று வளர்ந்து அவரதுநினைவை நிழலாக்குகின்றது. அவரின் நினைவாக ஏதாவது செய்யவேண்டும் என்பதை ஆவரோடு நெருங்கிப்பழகியவர்களுள் ஒருவரான பொறியியலாளர் குமார் புனிதவேல் முன்மொழிந்தார். கதிர்துரைசிங்கம் வழிமொழிந்தார் ஒப்பேற்ற கவிநாயகர் வி.கந்தவனம், முனைவர் சிவகடாட்சம், சிவா சின்னையா, த.சிவபாலு, ஆகி-யோர் சேர்ந்து ஸ்காபுறோ மல்வேர்ண் நூல்நிலையக் வளாகத்தில் மரக்கன்றை 2016ல் நட்டுவைத்தோம். அதனடியில் அதற்கு அண்மையாக 2016ல் மகாஜனக் கல்லூரியினர் ஒரு இருக்கைக்கான வாங்கு ஒன்றை அமைத்துள்ளனர். வருடா வருடம் நாங்கள் அந்த மரத்தடியில் கூடி நின்று அஞ்சலி செலுத்துவது வழக்கமாகக் கொண்டுள்ளோம். அதில் அவரது பிள்ளைகளும் கலந்துகொள்ளுவர். இது அவரை நினைவிருத்த மேற்கொள்ளப்படும் ஒரு நினைவிடமாகவே கருதப்படுகின்றது.

நல் ஆலோசகனாய், நண்பனாய், தந்தையாய், சகோதரனாய், உற்ற நற்தோழனாய் கனடாவில் கால்பதித்தநாள்முதலாய் எக்கு மட்டுமல் பழகியோர் அனைவருக்கும் மேலாக மகாஜன மாணாக்கர்களுக்கும் ஆசிரியர் குழாத்துக்குமே என்றென்றும் அதிபராய் வாய்ந்தவர் மறைந்தும் மறையாத மேதை அதிபர் பொ.கனகசபாபதி அவர்கள். இறுதி நாட்களை இன்றுந்தான் மறக்கமுடியவில்லை. அவருக்கு இருந்த குருதி மாற்றவேண்டிய நோய்க்காக மருத்துவமனைக்குச் செல்வதை வழக்கமாக் கொண்டிருந்தார். அவரோடு உடனிருந்த பெண்பிள்ளைகள் இருவரும் அவுஸ்திரேலிய திரும்பும் வழியில் பெரியபிரித்தானியாவில் நிற்கின்றார்கள் என்பதை அறியமுடிந்தது. மூத்த மகன் அப்புவும் மருகள் தர்சினியும் அடிக்கடி உணவு கொண்டுவந்து கொடுத்துச் செல்வார்கள். அன்றும் உணவோடு வந்த தர்சினிக்கு கதிரையில் இருந்தபடியே தூங்கிக்கொண்டிருந்த காட்சிதான் முதலில் கண்ணில் பட்டது. எழுப்பியபோது அவரை அசைக்கமுடியவில்லை. அவசர வைத்தியப்பிரிவினர் வந்து அவர் உயிர் பிரிந்துவிட்டது என்பதனை அறிந்து பரிதவித்தார்.

பொ.கனகசபாபதி அவர்கள் கனடிய மண்ணில் வாழுகின்ற நம்மவர்களில் முதலில் வைத்து எண்ணப்படும் ஒருவர். நல்லவற்றை நினைத்தல் வேண்டும், நல்லவற்றை செய்தல்வேண்டும், நல்லவையே நடத்தல் வேண்டும் என நினைந்து செயற்படும் ஒரு பண்பாளர். மகாஜனக் கல்லூரி, புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி ஆகியவற்றின் அதிபராகப் பணியாற்றியவர். உயிரியல் கற்பிப்பதில் அவருக்கு நிகர் அவரே எனப் பலராலும் புகழப்பட்ட தனது கற்பித்தல் திறனால் மாணவர்களை நெறிப்படுத்தி வழிப்படுத்திப் பல்கலைக் கழகம் புகுவதற்குக் காரணராகத் திகழ்ந்தவர். சண்டிலிப்பாய்க் குக்கிராமத்தில் 1935 செப்டம்பர் 4ந்திகதி பொன்னையா, ஆச்சிமுத்துத் தம்பதியினர் பெற்றெடுத்த பிள்ளைகள் ஐவரில் இளைய மகனாகப் பிறந்த அவருக்கு இரு ஆண்சகோதரர்களும் இரண்டு பெண்சகோதரிகளும் இருந்தனர். மூத்த சகோதரரின் வீடு சண்டிலிப்பாயில் உள்ள மாகியப்பிட்டியில் எனது மனைவியின் தாய்மாமன் ஆயர்வேத வைத்தியர் நமசிவாயம் அவர்களின் வீட்டிற்கு அண்மையாக உள்ளது. முருகேசு ஆசிரியர் என்றால் எல்லோருக்கும் தெரியும். கனெக்ஸ் இந்தியா சென்று படிப்பதற்கு வழிவகுத்தவர் அவரே என அதிபர் பலதடவைகள் என்னிடம் கூறியுள்ளார். அதிபரின் தந்தையார் மூத்த மனைவி இறந்தபின்னர் இரண்டாவது திருமணம் செய்துகொண்டவர். அதிபர் இரண்டாவது மனைவியின் மகன். ஆனால் அண்ணன் முருகேசு அவர்கள் தம்பி மீது அலாதியான பிரியம் உடையவர். அவரின் உயர்வுக்கு அயராது உழைத்தவர்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கற்கும் காலத்தில் அங்கு அதிபராயிருந்த ஒறேற்றர் சுப்பிரமணியத்தின் எளிமை, கண்டிப்பு, நிருவாகத்திறமை என்பனவற்றால் பெரிதும் கவரப்பட்டவர். உயர்கல்விக்காக தமிழ்நாடு சென்று கிறிஸ்தவக் கல்லூரியில் உயிரியலைச் சிறப்புப்பாடமாகக் கற்று உயர்விருதினையும் தனதாக்கிக்கொண்டவர்.

அன்பு நிறைந்த ஆசானாகவும், கண்டிப்பு நிறைந்த அதிபராகவும் அவர் பணியாற்றியமையால் அவர் அனைவராலும் நன்கு மதிக்கப்படும் ஒரு வழிகாட்டியாக, நல்லதோர் எடுத்துக்காட்டாக, மானுடம்போற்றும் மகானாக வகுப்பறைகளில் மட்டுமன்றி வாழ்க்கை முழுமையும் பவனிவந்துள்ளார். தாரமும் குருவும் தலைவிதிப்படி என்பார்கள். எனவே குருவாக அமைய மாணவர்கள் கொடுத்து வைத்திருக்கவேண்டும். மகாஜனக் கல்லூரி தனது வாழ்வின் பொற்காலம் என்று அவர் பலதடவைகள் குறிப்பிட்டுள்ளமையை அவரோடு நெருங்கிப் பழகுபவர்களுக்கு நன்கு தெரியும். இருப்பினும் அவர் அதிபராக இருந்து வளர்த்த ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரியையும் அவர் தன் இரு கண்களாகவே கருதிவந்துள்ளார். ஏழாலை மகாவித்தியாலயத்திற்கு அதிபராக அனுப்பப்பட்ட அவர் அங்கிருந்து பட்டப் பின்படிப்பிற்காகப் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்றார். ஓரிருமாதங்கள் அங்கு பணியாற்றியவர் கற்கை விடுமுறையில் சென்றமையால் அங்கு அவர் பணி நீடிக்கவில்லை. இதன்பின்னர் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் ஒருநாள் அதிபராக இருந்தும் உள்ளார்.

பல்கலைக் கழகக் கல்வியை இந்தியாவில் முடித்துக் கொண்டு நாடுதிரும்பிய அவர் ஆசிரியத்தொழில் தேடி தான் கற்ற ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்குச் சென்று ஒறேற்றர் சுப்பிரமணியத்தை நாடினார். அங்கு இடம் இல்லாமையால் ஒறேற்றர் அவரை அழைத்துக்கொண்டு மகாஜனாவிற்குச் சென்று அங்கு அதிபராக விருந்த ஜெயரட்ணம் அவர்களிடம் இந்தப் பொடியன் கெட்டிக்காரன் உனது பாடசாலையில் இடம்கொடு என்று கேட்டுக்கொண்டதனால் அவருக்கு அங்கு இடம்கிடைத்தது. மகாஜனவிலேயே தனது கற்பித்தலைத் தொடங்கினார். பின்னர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கு வரும்படி அதிபர் சுப்பிரமணியம் கேட்டபோது மகாஜனா அவரை அனுப்ப மறுத்துவிட்டது. அவ்வளவிற்கு மாணவர்களையும் அதிபர், ஆசிரியர்களையும் கவர்ந்திழுத்த கற்பித்தல் ரகசியம் மட்டுமல்ல மற்றவர்களைக் கவரும் வசீகரமும் அவரிடம் குடிகொண்டிருந்ததே காரணம் எனலாம். பயிலும் மாணவர்கயையும், தனது தொழிலையும் நன்கு நேசித்தவர் அவர். அந்த நேசிப்பும் அர்ப்பணிப்பு மனமும் அவருக்கு மாணவர் மனம்பற்றிச் சிந்திக்கத் தூண்டியதில் வியப்பில்லை. அது மட்டுமன்றி மாணவப் பராயத்து மனதைத் தூண்ட அவரது உயிரியல் விஞ்ஞான அறிவும், மாணவர்களுடன் ஊட-ாடிய பட்டறிவும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பெற்றுக்கொண்ட உளவியல் அறிவும், கற்றல், கற்பித்தல் பற்றிய நோக்கும் அவருக்குத் துணைநின்றுள்ளன. இவற்றிற்கு மேலாக அவர் பல்துறை வித்தகராகத் திகழ்வதற்கு கண்டதும் திண்டு பன்றிபோலாகாது கண்டதும் கற்று பண்டிதராக அவர் தன்னை மிக அடக்கத்தோடு வளர்த்துக் கொண்டுள்ளார். கனடிய மண்ணில் அவரை ஒரு நடமாடும் நூலகம் என்றே குறிப்பிடத்தக்க அறிவுப் பெட்டகமாகத் திகழ்கின்றார். எவற்றையும் அறிவுபூர்வமாக நோக்கும் மனப்போக்கும், சரி எனப்பட்டதை ஆணித்தரமாக எடுத்துரைக்கும் மனவைராக்கியமும் அவரிடம் உண்டு. நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என இடித்துரைக்கும் நேர்மைத்தனமும் அவரை உயர்த்தி வைத்திருக்கும் பாங்குகள். அவர் ஒரு சாமானியனாக அன்றி மாணவர்களின் உள்ளங்களில் புகுந்து அவற்றைக் கல்லி (தோண்டி) எடுப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்தமையே அவரது கற்பித்தல் வெற்றிக்கு வழிவகுத்தது. கல்வி எடுப்பது அறிவின் ஊற்று. அந்த அறிவூற்றை மாணவர்களிடையே பெருக்கெடுக்க வைத்தவர். அதற்காக என்னென்ன உத்திகளைக் கையாளமுடியுமோ அவற்றைக் கையாண்டு மாணவர்களுக்கு இலகுவாக தான் கொடுக்கவேண்டியவற்றை புரிய வைத்து வெற்றி கண்டவர். இதனை அவரது மாணவர்களே பெருமையுடன் கூறி அவரின் இழப்பைத் தாங்கொண்ணாது கேவிக் கேவி அழுததைக் கண்டுள்ளேன். மனித உள்ளுறுப்புக்களை வண்ணச் சோக்குக்கட்டிகளால் மிக நேர்த்தியாக வரைந்து விளக்கமளிப்பது அவரது கைவந்து கலை. அன்று விளக்கப்படங்களே ஆசிரியர்களுக்குக் கைகொடுத்தன். அதனை உயிரியல் விஞ்ஞானத்தில் கையாண்டுள்ளமை மாணவர்களை பல்கலைக் கழகம் நோக்கி நகர்தியது மட்டுமல்ல மருத்துவத்துறையை அவரது மாணாக்கர் அக்கிரமித்துக்கொள்ளவும் வழிவகுத்தது. இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் மகாஜனக்கல்லூரியை நாடி மாணவர்கள் வரவைப்பதற்கு இவ்வித கற்பித்தல் உத்திகளோடு உதைபந்தாட்டம், கரபந்து, துடுப்பாட்டம் போன்றவற்றிலும் முன்னணி வகுத்து வந்தமை அகில இலங்கை மட்டத்தல் பேரும் புகழும் நிலவக்காரணமாகியது.




கனடாவில் கல்வி அமைச்சின்கீழ் பல்கலாச்சார அலுவலராகப் பணியாற்றிய அவர் பின்னர் தன்னை ஒரு எழுத்தாளராவே மாற்றிக்கொண்டு நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். அவுஸ்த்ரேலியாவில் பல்கலைக் கழக பேராசிரியராகப் பணியாற்றும் ஆசி. கந்தராசா அவர்கள் "நல்ல கருத்துக்களைக் கதையாக்கிச் சொல்வதன் வலிமை" பற்றி இன்று நிறையவே பேசப்படுகிறது. பள்ளியில் படித்ததற்கு மேலாக பாட்டியின் கதைகள் மூலம் நாம் ஒவ்வொருவரும் கற்றுக்கொண்ட ஆழ்ந்த விழுமியங்கள் ஏராளம்..... தனிநபரின் அடையாளத்தினை உருவகப்படுத்தவும் தொடர்பாடலை இலகுவாக்கவும் கதைகூறல் பயன்படுகிறது. இந்த யுக்தியை நாம் ஆசிரியர் எவ்வாறு இந்நூலில் கையாண்டிருக்கிறார் என்பதை உற்றுத் தெரிந்தோமேயானால் நாமும் நமது அன்றாடக் குடும்ப வாழ்க்கையில் பயனடையலாமென்பது இங்கு நோக்குதற்குரியது." என்று அவர் அதிபர் எழுதிய "மனம் எங்கே போகிறது" நூலுக்கு எழுதிய அணிந்துரையில் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திறவுகோல் நூலுக்கு அவர் எழுதிய மதிப்புரையில் "மானுடம் சார்ந்த வாழ்க்கை மயக்கங்களை பிரயோக விஞ்ஞான வழிகாட்டுதல்கள் எவ்வாறு அகற்றுகின்றன? அறிவியல் உண்மைகள் மனித வாழ்க்கையை மேம்படுத்துவதில் என்ன பங்களிப்புச் செய்கின்றன? இவ்வாறு எழும் கேள்விகளுக்கு திரு.கனகசபாபதி அவர்கள் இலகு தமிழில் சுவையாக விளக்கம் தந்துள்ளார் என்கிற நிறைவே இந்நூலினை வாசித்து முடித்ததும் எனக்குப் பட்டது" என எழுதியிருப்பதில் இருந்து பொ.க.வின் ஆளுமை புலப்படுகின்றது.

அவரது "திறவுகோல்" நூலுக்குப் பதிப்புரைதரப் புகுந்த வெற்றிமணி ஆசிரியர் மு.க.சு. சிவகுமாரன் "அவரது நகைச்சுவை ததும்பும் எழுத்துக்கள் விஞ்ஞானக் கட்டுரைகளில் உள்ள இயல்பான இறுக்கத்தைத் தவிர்த்து பல்தரப்பட்ட வாசகர்களையும் ஒருமுகப்படுத்தியது" என்று அவரின் எழுத்தாற்றல் பற்றியும் வாசகர்களை வசிகரிக்கும் தன்மைபற்றியும் குறிப்பிட்டுள்ளார். கோகிலா மகேந்திரன் அதிபரின் மாணவியருள் ஒருவர். அவர் தெல்லிப்பளை கலை இலக்கியக்களத்தின் செயலாளராக இருக்கின்றார். அந்த இலக்கியக் களத்தின் மூலம் அதிபர் பொ.கவின் மாறன் மணிக்கதைகள் பாகம் 2, "மனம் எங்கே போகிறது" இரண்டையும் நூலுருவாக்கி வெளியே கொண்டு வந்திருக்கின்றார். அவர் தனது வெளியீட்டுரையில் "அந்தக் காலம முதல் இந்தக்காலம் வரை அவருள் இருந்து இயல்பாக வெளிவரும் நகைச்சுவை உணர்வு, இத்தொகுதியில் விஞ்ஞான, உளவியல் உண்மைகளோடு கலந்து வரும்போது அற்புதமாக இருக்கிறது." என்று குறிப்பிட்டு அதிபரின் எழுத்தாற்றலை வெளிப்படுத்துகின்றார்.

**(தொடர்ச்சி 20 பக்கம்)**

*( 19 பக்கம் தொடர்ச்சி)*

## *பத்து ஆண்டுகள் பறந்தோடியதோ? மறக்க முடியாத மகத்தான மனிதர் பொ. க.*

*த. சிவபாலு*

"மனம் எங்கே போகின்றது" என்னும் நூல் உளவியல் கற்போருக்கு ஒரு மூலாதார நூலாகப் பயன்படும் அதேவேளை பெற்றோருக்கும் மற்றோருக்கும் உபயோகமான அறிவுப்பரப்பினை தரும் ஒன்றாக அமைகின்றது. பெற்றோர் பிள்ளைகள் உறவுமுறைகள், பெற்றோர் தமது நடத்தையில் மேற்கொள்ளவேண்டிய மாற்றங்கள், காலத்தோடு ஒட்ட ஒழுகல் வேண்டும் என்னும் நிபந்தனையை முன்வைத்து கட்டுரை ஆக்கம் செய்தது போன்றே அவரது கட்டுரைகள். ஆவர்களைப் புரிந்து கொள்வோமா, பெற்றோருக்கான எட்டுக்கட்டளைகள், பிள்ளைகள் வளர்ப்பு முறை காலத்தோடு மாற்றம் காணப்படவேண்டும், மாற்றம் விளைவிக்கும் திறனுடைய எட்டு நிபந்தனைகள், செவிமடுத்தல் தொடர்புறுதல், அந்தநாள் ஞபாபகம் வந்ததே நண்பனே, நினைக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத்தெரியாதா? நனவு அல்லது பிரக்ஞை, பயம் - அச்சம்தவிர், கற்றல், தூக்கம் கண்களைத் தழுவட்டுமே, கனவு... அரு ஒருவர் பார்தது அனுபவிக்கும் நாடகம், பாதியும் மாஸ்லோவும் என மிகவும் நகைச்சுவையான தலைப்புக்கள் நகைச்சுவையோடு கூடிய அறிவுரைகள்.

"திறவுகோல்" அனைத்தும் நாளாந்தம் வெளியே வரும் விஞ்ஞான ஆய்வுக் கண்டு பிடிப்புக்களை நுணுகி அவற்றை இலகுவாக நகைச்சுவை கலந்து மூளைக்கு வித்தகத் தந்துள்ளார். மக்கள் அறிந்து கொள்ளவேண்டிய பலவிடயங்கள் அலசப்பட்டுள்ளன. "அழகுக்கும் அறிவிற்கும் உத்தரவாதம் மனித முட்டைகள் விற்பனையில்", "முதுமை இனி இல்லை புதுமையான கண்டுபிடிப்பு", "புதுமை இனி இல்லை! புதுமையான கண்டுபிடிப்பு!" "ஆழரளநக்கு வநத மவுசு!" "நீ இன்றேல் நான் இல்லை" "அர்த்தநாரீஸ்வரர் என்பதில் அர்த்தம் உள்ளது" "நெற்றிக்கண் காணமுடியுமா?", "2050இல் முதியவர்க்கு உயிர் கோபாப் பிரச்சினை" "பெயர் சொல்ல ஒரு பிள்ளை ஆண்பிள்ளை?" "ஆண்களுக்கு கேடுகாலாம் வருகிறதா?" "ஆண்களாலும் முடியும் ஆனால்..", "இரட்டைக் குழந்தைகளுக்கு இரண்டு தந்தையர்" "சிறுவனின் வயிற்றில் சிசு" "இன்னுமொரு ஐம்பது ஆண்டுகளின் பின்னர்" இவ்விதமான பல கட்டுரைகள் காணப்படுகின்றன. அவர் தேர்ந்தெடுத்த கட்டுரைகளின் தலைப்புக்களே அதனுள் என்ன உள்ளது என்பதனைத் தேட ஆவலைத்தூண்டும் கட்டுரைகளைத் தருவதில் போலவே அவரது கருப்பொருட்களும் சிறந்த கருத்துக்களை உள்ளடக்கியனவாகும்.

அதிபர் பொ.க. அவர்கள் "சிரிக்கும் கோடையில் சிலிர்க்கும் பனி நாடு" என்னும் என்.சோமகாந்தன் அவர்களின் பிரயாணக் கட்டுரைகளாக அமைந்த நூலுக்கு அணிந்துரை தந்துள்ளார். அதில் மார்க்கோபோலோ 24 ஆண்டுகள் ஆசிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தபின்னர் தான் பார்த்தவற்றை ஒன்றும் தவறவிடாது எழுதியது போன்று சோமகாந்தனின் கனடிய பயணம் அவர் பார்த்தவற்றை எல்லாம் எழுத வைத்திருக்கின்றது எனக்குறிப்பிட்டுள்ளமை அவரது புலமையைப் புலப்படுத்துகின்றது. "சாமானியன் ஒருவன் கற்பனைக்கும் எட்டாத, சாமானியன் ஒருவனால் சொல்வதற்கு முடியாத எண்ணிறந்த தகவல்களை இந்த மேதாவி மூன்றாம் வேற்றுமையில் சொல்லப்போக - "இவன் கதை அகள்கிறான்" எனச சாமனியன் மாத்திரமல்ல கற்றறிந்தோர்களும் கூடச சொல்லப் போனார்கள். இது கதையல்ல வார்த்தைக்கு வார்த்தை அப்பளுக்கற்ற நிசம் என் மக்கள் உணர்வதற்கு மேலும் ஒரு நூறு வருடங்கள் எடுத்தன" என்பதனை ஒப்புநோக்கித் தந்துள்ளார் என்றால் அவரது ஆழமான பார்வை எப்படியானது என்பது புலப்படும்.

அவர் எழுதிய "எம்மை வாழவைத்தவர்கள்", "மரம் மாந்தர் மிருகம்" என்னும் இரு நூல்களும் பல நாடுகளில் வெளியீடு செய்யப்பட்டுள்ளன. முதலாவது நூலுக்கு அணிந்துரை எழுதியவர்கள் இருவர் ஒருவர் இன்று நோர்வேயில் வாழ்ந்துகொண்டிருக்கும் வரலாற்றாசான் பொன்னம்பலம் இரகுபதி ஆவார். மற்றவர் பொ.கா. காலத்தில் யாழ்ப்பிராந்திய கல்விப்பணிப்பாளராக இருந்து ஓய்வுபெற்று இன்று கனடாவில் வாழ்ந்து மறைந்த க.சிவநாதன் அவர்கள். இந்த நூலில் யாழ்ப்பாணத்தில் கோலோச்சிய அதிபர்கள் 24 ஆளுமைகள் பற்றிப் பதிவாக்கியுள்ளார். காலத்தின் கட்டாய தேவையாக அவர் கருதிய நீண்டகாலக் கனைவை அவர்தான் மறைவதற்கு முன்னர் பதிந்துவைக்கவேண்டும் என வேணவாக்கொண்டிருந்தார். அவரது நூல்வெளியீட்டிற்கு பெருந்தொகையானவர்கள் வந்து நூல்களைப் பெற்றுச் சென்றார்கள் என்றால் அவரைப் பற்றிய சமூக நிலை எத்தகையது என்பது வெள்ளிடை மலை. இரண்டாவது நூலில் அவர் விரும்பி இரசித்து மகிழும் இயற்கை வனப்பைப் பற்றியது. ஆனால் கதையோடு இணைத்து இவற்றைத் தந்திருப்பது அவரது கதைசொல்லும் திறனையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்த நூலுக்கு முனைவர் பால சிவகடாட்சம் அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார்.

இவற்றைவிட நாடக, நடன, இசைத்துறைகளில் நுணக்கமான பார்வையையும் அறிவையும் கொண்டிருந்தார். கனடாவில் இடம்பெற்ற அரங்கேற்றங்கள் அவர் இல்லாமல் நடந்ததில்லை என்று சொல்லும் அளவிற்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார். அவரது பேச்சுக்கள் யாரையாவது மனங்கோண வைக்காத பண்பார்ந்த ஆனால் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கத்தக்க பேச்சாகவே இருக்கும். கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் ஒரு விழாவில் பங்கேற்றபோது அவரைப் பற்றி அதிபர் ஆற்றிய உரையைக் கேட்டபோது "என்னைப் பற்றி நான் அறிந்திராதவற்றையெல்லாம் துல்லியமாக அறிந்து வைத்திருக்கின்றாரே" என்று வியப்புற்றுள்ளார்.

இதனை இதனான் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அதன் கண்விடல்

என்னும் வள்ளுவர் வாக்குக்கேற்ப யாரிடம் எந்தப்பணியைக் கொடுக்கவேண்டும், யாரால் இது ஆகும், யார் இதற்கு உரியவர் என்பதனை அவர் ஒருவரைப் பார்த்தமாத்திரத்தே தீர்மானித்துவிடும் இயல்புடையவர். நான் கனடாவிற்கு வந்தபுதிதில் நான் அவரை ஒரு முறை சந்தித்தேன். ஏதோ என்னை அவருக்குப் பிடித்துவிட்டது. ஒரு பாட நூல் வெளியீட்டிற்குப் போயிருந்தேன். ஆனைப் பற்றி எழுதுங்கள் என்றார். அவரது அன்புக்கட்டளையைத் தட்டமுடியாமல் எழுதிக் கொண்டுபோனேன். ஆவர் அதனை உதயன் அலுவலகத்தல் சேர்த்துவிடுமாறு பணித்தார். நான் அவ்விதமே கொண்டு சென்ற கொடுத்தேன். லோகேந்தரலிங்கத்திடம் கொடுத்தேன். அவர் ஒரு பார்வை பார்த்தார். யாரிவர்? என்ன என்ற கேள்விகள் அவர் மனதில் தோன்றியிருக்கவேண்டும். அதிபர் கனகசபாபதி அவரகள் கொடுக்கச் சொன்னார் என்று கூறியதோடு கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டேன். என்னைப் போல் எழுதத் தொடங்கியவர்கள் பலரை ஊக்குவித்தவர் அதிபர் பொ.க. அவர் ஒரு பூந்தோட்ட, மரக்கறித்தோட்டத்துப் பயித்தியம் என்பதனைவிடவும் துடுப்பாட்டப் பயித்தியம் என்று சொல்லாம். அவ்வளவிற்கு அதில் ஊறிப்போய் அனைத்தையும் மறந்தே போயிருப்பார். துடுப்பாட்டம் நடக்கின்றதென்றால் அவரோடு தொலைபேசியில் அழைத்தாலும் கதைநீளாது என்றால் அவர் துடுப்பாட்டம் இடம்பெறுகின்றது என்பதனை உணர்ந்துவிடாம். துடுப்பாட்டம் பற்றி பக்கம்பக்கமாக அவர் எழுதிக் குவித்து வாசகர்களை மகிழ வைத்தவர். அது மட்டுமன்றி அதிகாலையில் துடுப்பாட்டத்தை தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருந்தவேளையே அவரது உயிர் பிரிந்திருக்கின்றது என்பது அவர் அதில் எத்துணை ஈடுபாட்டைக்கொண்டிருந்துள்ளார் என்பது தெளிவு. யாராருக்கு விருதுகள் வழங்கப்படவேண்டும், யாராருக்குப் பாராட்டுவிழா எடுக்கவேண்டும், யாராருக்கு பிறந்தநாள், திருமண நினைவுநாள் கொண்டாடவேண்டும் எனக் கணக்குப்போட்டு அவற்றைச் செயற்படுத்தியவர். குறிப்பாக யாருக்கு யார்மூலம் செய்யவேண்டும் என்பதனையும் அறிந்து அவர்களை முன்னிருத்திச் செயற்பட்டவர். கவிநாயகர் வி.கந்தவனம், டாக்டர் கதிர் துரைசிங்கம், பண்டிதர் மா.சே. அலக்சாந்தர், சட்டத்தரணி மனுவல்ஜேசுதாசன், செல்வா இலங்கையன், குறமகள் வள்ளிநாயகி, போன்றோரின் பாராட்டுவிழாக்கள் மட்டுமல்ல 60வது 75வது பிறந்த நாள் கொண்டாடங்களுக்கான முன்னெடுப்புகளுக்குச் சூத்திரதாரி அவரே. இதற்காக அவர் குழுக்களை அமைத்துச் செயற்படவைத்தார். அனைத்துக்குழுக்களில் மட்டுமல்ல அவரது நூல்வெளியீட்டிலும் என்னை முக்கிய வகிபாகத்தை ஏற்க வைத்திருந்தார். அவ்விதமே உதயன் சர்வதேச விருது விழா, போன்ற காத்திரமான விடயங்களுக்கு ஆலோசகராகவும் பணியாற்றியவர்.

புதிதாக வரும் ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களை ஆக்கவேண்டும் என்பதில் முனைப்புக்காட்டியவர். ஆதற்காக விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் இராஜா மகேந்திரனின் உதவியோடு மாதாந்தம் கூடி சொல்லாக்கம் செய்வதற்குத் தலைமைதாங்கி வழிநடத்தியவர் என்பது அவரது அபார முயற்சி என்றே சொல்லுவேன். எந்தெந்தத் துறைகளில் யார் யார் வல்லுநர் என அறிந்து அவர்களை அழைத்து அந்த சொல்லாக்கத்தை மேற்கொள்ள அவருக்கு உறுதுணையாக நின்றவர்களுள் மணி வேலுப்பிள்ளை முக்கியமானவர்.

புத்திரியைகளுக்கு எழுதியதோடு மட்டுமன்றி அவற்றிற்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கி நெறிப்படுத்தியவர் என்பதனையும் மறக்கமுடியாது. தாய்வீடு, உதயன், விளம்பரம், தமிழர் தகவல், ஈழநாடு போன்ற பத்திரிகை ஆசிரியர்கள் "அதிபர்" அவர்களிடம் ஆலோசனைகளைப் பெற்றுவருவதனை நான் நன்கு அறிவேன்.

அவரிடம் கற்றவர்கள் உலகின் பல பாகங்களிலும் மிக உயர்ந்த நிலையில் இருக்கின்றனர். அவர் உயிரியல் ஆசானாக இருந்தமையினால் மருத்துவர்களாக உள்ளவர்கள் அநேகர். அவரோடு நெருங்கிப் பழகியவர்களுக்கு பெரும் துன்பத்தையும் ஒரு இடைவெளியையும் ஏற்படுத்தியுள்ளது என்பதும் கலை இலக்கிய உலகிற்கு பேரிழப்பு என்பதும் நிதர்சனம். ஒரு ஜனரஞ்சக மனிதரை தமிழ் கூறும் உலகு இழந்துவிட்டது. அன்பால் பெருந்தொகையான உள்ளங்களைக் கவர்ந்திழுத்த அவரது பிரிவு பழகிவயர்கள் அனைவரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளமை வியபப்பில்லை.

அதிபர் காங்கேசன்துறையைச் சேர்ந்த திரு,திருமதி. குருநாதபிள்ளை இராசம்மா தம்பதியினரின் புதல்வி அமிர்த கௌரியைத் ஒக்டோபர், 1963ல் திருமணம் செய்துகொண்டார். ஆமிர்தகௌரி அவர்கள் கொழும்பில் பணியாற்றிக் கொண்டிருந்தவர். இவர்களது திருமணத்தை நிறைவேற்றுவதில் அவரது முதல்மாணாக்கர் என அடிக்கடி குறிப்பிடும் நெருங்கிய நண்பர் கதிர் துரைசிங்கம் தம்பதியினர் உழைத்தனர் என்பதனை நன்றிப்பெருக்கோடு அடிக்கடி நினைவு கூருவதனை அறிவேன். இதன்பயனாக மணிவண்ணன், மணிமாறன், மணிவிழி, மணிமொழி எனப்பெயரிய நான்கு பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர். துரதிஷ்டவசமாக துணைவியாரை புற்றுநோய்க்கு பறிகொடுத்த அதிபர் அவர்கள் இரண்டாவது மகன் மணிமாறனையும் பறிகொடுத்த மனச்சுமையோடு வாழ்ந்துவருவது துர்லபமே! முதன்மைப் புதல்வன் மணிவண்ணன் திருமணம் செய்து ஒரு புதல்வியைப் பெற்றெடுத்து அதிபருக்குப் பேத்தியாக இலட்சியா மணிவண்ணனைக் கண்டு களிக்கவைத்துள்ளமை அவருக்கு மனமகிழ்வைத்தரும் ஒன்றாக அமைந்துள்ளமையை அறியமுடிகின்றது. ஆன்புப்பேத்தியின் வளர்ச்சி, முன்னேற்றத்தை கண்டு அனுபவித்து இன்பங்கொள்ளும் நிலைமை அவருக்கு புது உற்சாகத்தை ஊட்டுகின்றமை கருத்திற்கொள்ளத்தக்கது.

ரொறன்ரோவில் குடியேறிய அதிபர் அவர்கள் தான் வாழ்ந்த கூட்டுறவுக்குடியிருப்பில் ஒரு நூலகத்தை ஆரம்பிப்பதில் முழுமூச்சாக உழைத்தவர். அந்த நூல் நிலையம் நண்பர்களால் அவரின் பெயரைச் சூடிக்கொண்டது அவரது பெருமையை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. தனக்கென வாழப் பிறர்க்குரியாளராக வாழ்ந்து வந்தவர், வருபவர் அதிபர் திரு. கனகசபாபதி அவர்கள். "என்னை நன்றாகப் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்றார் ஞானி திருமூலர். ஆம் அந்தவழியிலே தான் இந்த மண்ணிற்கும் மக்களுக்கும் ஏதாவது செய்தே ஆகவேண்டும் என விளைந்தவர், விளைந்து வருபவர் மட்டுமன்றி தன்னைச் சார்ந்தோரை நெறிப்படுத்தி வழிப்படுத்தி முன்னுக்குக் கொண்டுவருவதில் சமர்த்தராகவே விளங்குகின்றார். "என்கடன் பணி செய்து கிடப்பதே" என அல்லும் பகலும் அனைவரதமும் தொடர்ந்து செயற்படுபவர். ஏந்த நிகழ்ச்சிக்கு அழைத்தாலும் அதனை ஏற்றுத் தவறாது சென்று வருபவர். தனது சுக துக்கங்களை ஒருபுறம் தள்ளிவைத்துவிட்டு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் பண்பாளர். தனது உயரிய பார்வையால் அனைவரையும் வசீகரிக்கும் அற்றல் கொண்டவர். இன்றும் எம்முள்ளே மறைந்தும் மறையாத ஆசானாகவே அவர் மனக்கண்முன் காட்சிதருகின்றார்.

---

**பத்து ஆண்டுகளுக்கு முன்னர் விண்ணுலகிற்கு பயணித்துச் சென்றாலும் இன்னும் பக்கத்தில் அமர்ந்திருப்பது போன்ற உணர்வோடு... அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் பற்றியது.**

# அன்பின் தொனி - 786

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது**

எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது? இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார்; அவருக்கு அழகுமில்லை, சௌந்தரியமும் இல்லை; அவரைப் பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதி ருந்தது. அவர் அசட்டைபண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்; அவரைவிட்டு, நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம்; அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார்; அவரை எண்ணாமற்போ னோம். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங் களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக் கினை அவர்மேல் வந்தது் அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடு களைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம் மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார். அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப் படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக் குட்டியைப்போலவும், தன்னை மயிர்கத்தரிக் கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். - **ஏசாயா 53: 1-7**

**அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்துகொண்டர்**

ல் சொல்லி முடியும்; ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்; என் ஜனத் தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார். துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழி யை நியமித்தார்கள்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்; அவர் கொடுமை செய்யவில்லை; அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை. கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னை குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்த நாளாயிருப்பார், கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினால் வாய்க்கும். அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார்; என் தாசனாகிய நீதிபரர் தம்மைப் பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார்; அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்துகொள்வார். அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்கார ரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து, அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்பேன்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக்கொள்வார். - **ஏசாயா 53: 8-12**

**இஸ்ரவேலின் பரிசுத்தர் உன் மீட்பர்**

பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்துபாடு; கர்ப்பவேதனைப்படாதவளே, கெம்பீரமாய்ப் பாடி ஆனந்தசத்தமிடு; வாழ்க்கைப்பட்டவளுடைய பிள்ளைகளைப் பார்க்கிலும், அநாத ஸ்திரீயினுடைய பிள்ளைகள் அதிகம் என்று கர்த்தர் சொல்லுகிறார். உன் கூடாரத்தின் இடத்தை விசா லமாக்கு; உன் வாசஸ்தலங்களின் திரைகள் விரிவாகட்டும்; தடைசெய்யாதே உன் கயிறுக ளை நீளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து. நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங் கொண்டு பெருகுவாய்; உன் சந்ததியார் ஜாதிகளைச் சுதந்தரித்துக்கொண்டு, பாழாய்க்கிடந்த பட்டணங்களைக் குடியேற்றுவிப்பார்கள். - **ஏசாயா 54: 1-3**

**தொடரும்...**

TRADITIONAL CHINESE
ACUPUNCTURE THERAPY

எல்லாவிமான வலிகளுக்கும் - All Pain & Aches, Arthritis
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை - Asthma, Sinusitis, Rhinitis Allergies
மனத்தளர்ச்சி, தலைவலி - Stress, Migraine & All Types of Headaches
நீரிழிவு நோய், வயிற்றுவலி - Diabetes, Gastric Pain, Ulcer
மாதவிடாய் சம்மந்தமானவையும் - Menstruation
உடற்பருமன் குறைத்தல் - Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

## மழை நீங்கியும் தூவணம் நிற்கவில்லை!

### மாங்குளத்தில் கண்ணிவெடி விபத்தில் நான்கு பணியாளர்கள் படுகாயம்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் - துணுக்காய் பகுதியில் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த கண்ணிவெடி அகற்றும் பணியாளர்கள் நால்வர் கண்ணிவெடி விபத்தில் படுகாயமடைந்துள்ளனர். 5ம் திகதி வியாழக்கிழமை மத- ியம் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வெடிவிபத்தில் மனிதநேய கண்ணிவெடியகற்றும் பண- ியில் ஈடுபட்டிருந்த நான்கு பெண் பணியாளர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

தங்கராசா ராஜேஸ்வரி (வயது 43), கதிரேசு கவிகலா (வயது 40), கிஷோர் மோகனாம்பாள் (வயது 39), சிவரூபன் தமிழினி ஆகியோரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த நால்வரில் மூவர் மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்களுக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

## நல்லூர்க் கந்தன் ஆலய இவ்வருட உற்சவத்தில் தொடரும் கொள்ளைகள்

- நடராசா லோகதயாளன்

நல்லூர் ஆலய ரதோற்சவ தினத்தில் மட்டும் 51 தங்கப் பவுண் நகை களவாடப்பட்டுள்ளதாக உற்சவகால பணிமனையில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நல்லைக் கந்தன் ஆலய ரதோற்சவ தினத்தன்று ஒரே நாளில் இந்தளவிற்கு நகைகள் களவாடப்பட்டுள்ளதாக மாநகர சபையின் உற்சவகால பணிமனையில் முறைப்பாடுகள் செய்யப்பட்டாலும், இந்த விடயம் தொடர்கதையாகவே உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் உற்சவ காலப்பகுதியில் கந்தனை தரிசிக்க ஆயிரக்கணக்கானவர்கள் கூடும் நிலையில், களவுகளும் இடம்பெறுகின்றன.

2024-09-01 அன்று இடம்பெற்ற தேர் உற்சவ தினத்தில் 20 பேரின் 51 பவுண் தங்க நகைகள் களவாடப்பட்டதாகவே இந்தப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு தங்க நகைகளை களவு கொடுத்தவர்களின் நகைகள் எவையும் இதுவரை கிட்டியதாக எந்த தகவலும் கிடைக்கவில்லை.

ஆண்டுதோறும் இடம்பெறும் வருடாந்த உற்சவத்தில் பல லட்சம் பக்தர்கள் கூடும்போது பக்தர்களோடு பக்தர்களாக சில திருடர்களும் உட்புகுந்து தமது கை வரிசையை காட்டி வருவதனால் ஆலயத்திற்கு வரும்போது தங்க நகைகளை அணிந்து வர வேண்டாம் என தொடர்ச்சியாக அறிவித்தல் விடுக்கப்படுகின்றபோதும் பெண்கள் இதனை செவி சாய்க்காது நடப்பதன் விளைவு ஆண்டுதோறும் இவ்வளவு நகைகள் களவாடப்படுகின்றது என்று ஆலயம் மற்றும் மாநகர சபையின் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேநேரம் சப்பறத் திருவிழா அன்று ஒரு தாயாரின் கழுத்தில் கை வைத்த இளைஞன் தப்பி ஓடிவிட்டதும் நடந்துள்ளது. அந்த தாயார் அவலக் குரல் எழுப்பிய போதிலும் அவர் மீது கை வைத்த இளைஞன் சங்கிலியை அறுத்துக்கொண்டுதான் ஓடுகின்றானா அல்லது அறுக்காமல் ஓடுகின்றானா என்பதனை அந்த தாயாரால் உறுதியாக கூறமுடியாது திணறுகின்றார்.



"ஏனெனில் தன்னிடம் 5 சங்கிலிகள் இருப்பதாகவும் தற்போது கழுத்தில் 3 சங்கிலிகள் உள்ளதனால் இரண்டை அறுத்துச் சென்றுவிட்டானா அல்லது மறந்துபோய் வீட்டிலேயே விட்டுவிட்டு வந்துள்ளேனா என்பதனை மகளிடம் கேட்டால்தான் உறுதி செய்ய முடியும, மகளும் ஆலய சூழலில் நின்றமையினால் அதிக சத்தம் காரணமாக தொலைபேசி அழைப்பு உடன் கிடைக்கவில்லை.எனப் பதற்றத்துடன் கூறினார்".

நல்லூர் கந்தன் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவிற்கு வரும் பக்தர்களில் பெரும்பாலும் புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து வருபவர்களே அதிகமான நகைகளை அணிந்து வருகின்றனர் என்று உள்ளூர்வாசிகள் கூறுகின்றனர். அதன் காரணமா- கவே உற்சவ காலத்தில், ஆலயத்திற்கு வரும் போது நகைகளை தவிர்க்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டாலும், அதை யாரும் கேட்பதில்லை என்றும் அவர்கள் ஆதங்கப்படுகின்றனர்.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# 'Vote Sajith' splits Ilankai Tamil Arasu Katchi (ITAK)



The claim by a prominent lawmaker of a key Tamil party in the North and East of Sri to support one of the leading contenders in the presidential race has been trashed by the party leadership.

ITAK high power policy making body which met in Vavuniya on Sunday (1st sept) passed a "unanimous" resolution to support Sajith Premadasa, parliamentarian M. A. Sumanthiran told journalists after the meeting in the northern town of Vavuniya.

"Three resolutions were passed in the meeting after five hours of deliberations. The first one is not to support Pakkiaselvam Ariyanethran 'the common Tamil candidate', the second is asking him to withdraw from the contest as he is a member of the party, and the third 'without a division' it was decided to support Sajith Premadasa".

However, this claim or decision of the policy making body has been dismissed by the Party President 'Maavai' So. Senathiraja. Speaking to the media he said, "the decision taken at the Vavuniya meeting was the personal decision of some people and not the official decision of the ITAK".

Senathiraja further commented senior leaders of the party including himself, leader elect Sivagnanam Shritharan, Charles Nirmalanathan, Seenitamby Yogeswaran, and Gnanamuthu Srinesan did not attend the meeting.

The ITAK's senior vice president, CVK Sivagnanam, presided over the central committee meeting. He told local media that although the resolutions were adopted, the vote was divided.

"The decision to support Sajith Premadasa was taken at the meeting which was held according to the constitution of the party. A total of 27 persons were present among the 39 members of the committee which includes Ariyanethran also. 'Maavai' Senathiraja has informed he could not participate in the meeting as he is unwell. He also had not sought the postponement of the meeting for any other reason. At the same time, Sivagnanam Shritharan has informed his choice in writing. At the meeting, 17 members said they could not support the common candidate Ariyanethran while 6 expressed support in his favour. Totally 22 persons spoke at the meeting. Finally, three resolutions including extending support to Sajith Premadasa was passed".

Jaffna District MP Sivagnanam Shritharan is in London seeking support from the diaspora for the north and east Tamil candidate Ariyanethran.

Speaking at a meeting of the Tamil diaspora in London Siritharan described the idea of a 'common candidate' as a tribute to the war dead and seeking justice for the Tamils

"Now Sajith says he will implement the 13th Amendment. But when Ranil Wickremesinghe, Maithripala Sirisena and Sajith Premeadasa were in power they were not prepared to share power. Sajith even did not come to the North and East to thank the Tamil voters when we supported him in the last Presidential election"

Sivagnanam Siritha Shritharan ran also made it clear that there was no external pressure regarding candidates while speaking at the same meeting on Saturday (31)

"There was no pressure either from India or any other country saying, 'Don't put this candidate or support that candidate. The reports in this regarding such things are purely speculative and nothing as such happened any time or during the discussion with the Indian National Security Advisor (NSA) Ajit Doval in Colombo, just before I left for London".

However, the Colombo-based Sunday Times in its edition on 1st September claimed Ajit Doval as saying the Tamil political leaders who met him to avoid wasting votes. "He told them they should not "waste the votes of the Tamil people" and try to negotiate with a candidate who could win and secure the aspirations of the Tamil people through talks".

The paper also said the General Secretary of the Tamil National People's Front, Selvarasa Kajendran explained to the Indian NSA their reason for calling upon the Tamil people to boycott the September 21st Presidential election.

"While MPs made representations on the situation on the ground, Mr. Kajendran explained in detail why his party was campaigning for a boycott but indicated his party would consider supporting any candidate who was willing to devolve powers to provinces within a federal structure".

Meanwhile, Sajith Premadasa has immediately thanked the ITAK for their support to him in a post on his X platform.

"Thank you for your support ITAK @MASumanthiran. Together, we'll create a future where everyone wins-a future with no racism, no discrimination and a future built on unity, strength, and shared purpose".

His message was cautious not to mention two key demands of Tamils; power sharing based on a federal constitution and accountability for alleged war crimes.

With the majority southern Sinhala electorate split among at least three leading candidates, the 1.2 million voters in the Tamil speaking north and the east evidently hold the key to ushering Sri Lanka's next president to office.

# இந்திய உயரதிகாரி முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம்

-நடராசா லோகதயாளன்



முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு விஜயம் செய்த இந்திய துணைத்தூதுவர் - மாவட்ட வளர்ச்சித் திட்டங்கள் குறித்து அரசாங்க அதிபருடன் கலந்துரையாடியுள்ளார்

யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத்தூதுவர் சாய் முரளி 5ம் திகதி வியாழக்கிழமைமுல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு விஜயம் செய்தார்.

இதன் போது அரசாங்க அதிபர் அ.உமாமகேஸ்வரனை சந்தித்து மாவட்ட வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார் என்று அம்மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகம் கூறியுள்ளது.

இந்த கலந்துரையாடலின் போது அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்கள் தொடர்பிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்கள் பிரச்சினைகள் தொடர்பிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் பல்வேறு அபிவிருத்தித் தேவைகள் தொடர்பிலும் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபரினால் யாழ்ப்பாணத்திற்கான இந்தியத் துணைத்தூதுவரிற்கு விபரிக்கப்பட்டது.

இந்த சந்திப்பின் போது முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், யாழ். இந்திய துணைதூதரகத்தின் இணைப்பாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

எனினும், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு என்னென்ன அபிவிருத்திகள் தேவை, அந்த மாவட்டத்திலிருக்கும் மக்கள் எவ்விதமான பிரச்சனைகள், சவால்களை எதிர்கொள்கிறார்கள் என்பது இந்திய துணைத்தூதருக்கு எடுத்துக் கூறப்பட்டது என்பது தொடர்பில் உடனடியாக தகவல்கள் வெளியாகவில்லை.



# இவ்வார ராசிபலன்

**06-09-2024 வெள்ளி தொடக்கம் 12-09-2024 வியாழன் வரையும்**




**மேஷம்:** தன்னடக்கத்தோடு செயல்படும் வாரம். வம்பு தும்புகள் ஒழியும். பூர்வீக சொத்து சேரும். உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் களவுப்போகும். கனவு தொல்லை உண்டு. தேவைகள் பூர்த்தியாகும். எளிமையை விரும்புவீர்கள். இனிய காதல் உருவாகும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். புதிய வாய்ப்புத்தேடி வரும். இனிய தகவல் வந்து சேரும். புதியத்தொழில் அமையும். உடல்சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். உடல் மனநிம்மதி தரும். பாராட்டுப் பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. செல்வாக்கு உயரும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். நினைத்த தொழில் அமையும். காதல் விவகாரத்தில் நன்மை பயக்கும். ஏற்றமான தருணம் அமையும். இனிப்பான செய்திகள் வரும். புதிய முதலீடு தவிர்க்கவும். போட்டிகள் நீடிக்கும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். புதிய நட்பை தவிர்க்கவும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. சாதகமான வாய்ப்பு உருவாகும். வார்த்தைகளில் நிதானம் தேவை. மங்களச் செய்தி வரும். மாணவர்கள் உற்சாகம் கூடும். நவகிரஹ அனுகிரஹம் கூடும். வீடு, மனை யோகம் உண்டு. விரக்திகள் மறையும். அந்நிய தேசப்பயணம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 2,7,8,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,L




**ரிஷபம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். செய்தொழில் லாபம் தரும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மனஆரோக்கியம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். சுபகாரியம் நடந்தேறும். நட்பு வட்டம் விரிவடையும். புத்தி சாதுர்யம் பெருகும். தந்தை உடல்நலனில் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். புதிய கடன் வாங்க நேரிடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். எதிர்பார்த்த பதவி உயர்வு தாமதமாகும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். பேச்சில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு உண்டு. வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளால் தாமதம் ஏற்படும். தேகப்பலம் கூடும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். இல்லத்தில் அமைதி கூடும். நீண்ட நாள் நோய் விலகும். தொழில் முயற்சி வெற்றி தரும். நண்பர்கள் உதவி கிட்டும். உடல்நலனில் அக்கறை தேவை. பிரியமானவர்களை சந்திப்பீர்கள். சுபகாரியம் கைகூடும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். பொது வாழ்வில் புகழ் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோணியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,4,5,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,K




**மிதுனம்:** மனதில் இனம்புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும் வாரம். இடமாற்றம் நன்மை தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. காதலர்கள் தம்பதியாவார்கள். கல்வியில் ஆர்வம் கூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. திருமண முயற்சி பலன் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. வஸ்திர தானம் வளம் சேர்க்கும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். திறமைகள் வெளிப்படும். பழையக்கடன் அடையும். இடமாற்றம் நன்மை தரும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். மனக்கசப்பு நீங்கும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். பிரார்த்தனை பலன் கொடுக்கும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் தரும். தன வரவில் தடங்கல் உண்டு. பழைய நட்பு பலன் தரும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. மனைவி உடல்நலம் பாதிக்கும். லஷ்மி கடாட்ஷம் பெருகும். பிரயாணம் ஏற்படும். உணவு விடுதி லாபம் தரும். அரசியலில் புகழ் கூடும். உலோகத் தொழில் உயர்வு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ சுப்ரமணியர், அதிர்ஷ்ட எண்: 8,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C




**கடகம்:** பிள்ளைகளால் சொத்து சேரக்கூடிய வாரம். தாராளமான தனவரவு உண்டு. கட்டிடத்தொழில் லாபம் தரும். தோல்விகள் விலகும். பித்தளைத் தொழில் லாபம் தரும். பிரார்த்தனை நிறைவேறும். எதிர்ப்புகள் அடங்கும். சிறப்புக்கள் சேரும். பொறுப்புக்கள் கூடும். குடும்ப அன்யோன்யம் கூடும். வாய்ப்புகள் தேடி வரும். பொருள் வரவு திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். பணியில் உயர்வு உண்டு. புதிய பதவிகள் கிட்டும். கையிருப்பு கரையும். உடல்நலம் சீராகும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். அறிவாற்றல் பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். மாணவர் திறமை பளிச்சிடும். சிறிய இடையூறு ஏற்படும். தன்னம்பிக்கை அதிகமாகும். சுய பலம் கூடும். தொழில் வழி தொல்லை குறையும். பயணம் ஆதாயம் தரும். வழக்கு வெற்றி தரும். குழந்தைகளால் குதூகலம் கூடும். தங்க நகைகள் சேரும். இடையூறுகள் அதிகமாகும். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். பக்குவமான பேச்சு அவசியம். பதவி உயர்வு ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். புகழ்ச்சி அதிகரிக்கும். வெளியூர் பயணம் ஏற்படும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். ஆரோக்கியம் சீராகும். குடும்ப மேன்மை தரும். எந்திர தொழிலில் லாபம் உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. வாகன அபிவிருத்தி உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 4,2,7,9
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,K




**சிம்மம்:** நம்பிக்கைக்குரியவர்களை சந்திக்கும் வாரம். வழக்குகள் வெற்றி தரும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். கடன் சுமை குறையும். கமிஷன் தொழில் கவனம் தேவை. ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். வேலை பளு அதிகரிக்கும். பொறுப்புக்கள் கூடும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். புதிய முதலீடுகளை தவிர்க்கவும். விடாமுயற்சி அவசியம். போட்டிகள் மறையும். நல்லோர்களின் நட்பு கிட்டும். நிதி நிலைமை சீராகும். வழிபாடு மாற்றம் தரும். முயற்சிகள் வெற்றி தரும். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர். உறவினர்களால் அனுகூலம் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. நிர்வாகத்தில் நிதானம் தேவை. காதல் கைகூடும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சியில் பலன் தரும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பணவரவு உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. அணிகலன் சேரும். அற்புத வாய்ப்பு கிட்டும். தொல்லைகள் ஒழியும். திடீர் பயணம் ஏற்படும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்வர்ண தேவதை, அதிர்ஷ்ட எண்: 5,4,1,9
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C,F




**கன்னி:** இக்கட்டான சூழ்நிலைகள் அகலும் வாரம். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பயணம் அனுகூலம் தரும். பணவரவு உண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். ஆரோக்கியம் கவனம் தேவை. விவாக முயற்சி வெற்றி தரும். உடல் உபாதை நீங்கும். உறவினரால் பண விரயம் உண்டு. சுபகாரியம் கைகூடும். அணிகலன் சேரும். ஆலோசனை பலன் தரும். அற்புத வாய்ப்பு கிட்டும். தொல்லைகள் ஒழியும். புதிய எண்ணம் நிறைவேறும். நண்பர்களால் நன்மையுண்டு. வருத்தங்கள் மறையும். தடுமாற்றம் ஏற்படும். திருத்தமான முடிவு ஏற்படும். கல்வியில் கவனம் தேவை. காதல் கசக்கும். வழக்குகள் சாதகமாகும். தொழில் மேன்மை உண்டு. விவசாயம் பலன் அளிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பயணத்தடை ஏற்படும். சோம்பல் அதிகரிக்கும். விருப்பங்கள் நிறைவேறும். வேலை வாய்ப்புக் கூடும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. மங்களச் செய்தி வரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பாதிப்புகள் அகலும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். உடல்நலம் கவனம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம சாஸ்தா, அதிர்ஷ்ட எண்: 3,7,5,1
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,H




**துலாம்:** பெருமைகள் சேரும் வாரம். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பழைய கடன் வசூலாகும். பயணம் அனுகூலம் தரும். வாகனச்செலவு ஏற்படும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். உறவினர்களால் நன்மை உண்டு. காரியத்தடை ஏற்படும். கடன் சுமை அதிகரிக்கும். மாணவர்கள் கவனம் தேவை. கலைத்துறையில் திருப்பம் உண்டு. ஆபரணச்சேர்க்கை உண்டு. சகோதரியால் அனுகூலம் உண்டு. பொருள் இழப்பு ஏற்படும். போட்டிகள் உருவாகும். மெத்தனப்போக்கு விலகும். விருந்தினர் வருகை உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். தகுதிகள் உயரும். புதிய எண்ணங்கள் உருவாகும். கவலைகள் ஒழியும். கடன் பிரச்சனைகள் அகலும். சுபச்செலவு அதிகரிக்கும். அரசு வழி ஆதாயம் உண்டு. விவசாயம் பலன் தரும். புதிய நட்பு ஏற்படும். அந்தஸ்து உயரும். உடல்நலம் சீராகும். விளையாட்டுத் துறையில் வெற்றி கிட்டும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். கலைத்தொழிலில் நிலை உயரும். பேச்சில் இனிமை கூடும். திறமையால் பெருமை சேரும். பொறுப்புக்களால் சிறப்பு சேர்க்கும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். மறைமுக எதிர்ப்பு விலகும். பணிவான பேச்சுகள் தேவை. சச்சரவுகள் அகலும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. வீடு, மனை யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: காவல் தெய்வம், அதிர்ஷ்ட எண்: 5,3,7,9
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,K




**விருச்சிகம்:** சுபவிரயம் ஏற்படும் வாரம். நன்மைகள் பெருகும். தொழில் லாபம் கூடும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பெண்களுக்கு கவனம் தேவை. மருத்துவச் செலவு உண்டு. ஆடை, அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். வழக்கு முடிவுக்கு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். பொருளாதாரம் உயரும். சிந்தனைகள் மேலோங்கும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. உதவும் குணம் அதிகரிக்கும். வணிகத்தொழில் வளம் கூடும். உணவுத்தொழில் உயர்வு தரும். குளிர்பான தொழில் கவனம் தேவை. தொலைபேசி தகவல் தொல்லை தரும். பங்குத்தொழில் பணம் தரும். பழைய பாக்கி வசூலாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பாராட்டுக்கள் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். செல்வாக்கு உயரும். ஆடை, அணிகலன் சேரும். தோதான எண்ணம் உருவாகும். கடன் தொல்லை நீங்கும். மன சந்தோஷம் அதிகரிக்கும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். பெருமைகள் சேரும். திட்டமிட்ட செயல் தேவை. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. ஞாபக மறதி ஏற்படும். வெளி வட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். பணப்பற்றாக்குறை நீங்கும். பயணத்தால் அனுகூலம் உண்டு. எள் தானம் ஏற்றம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மர், அதிர்ஷ்ட எண்: 5,4,1,9
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C




**தனுசு:** வறுமைகள் விலகும் வாரம். விவசாயிகள் பயன்பெறும். தெளிவான முடிவுகள் உதயமாகும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். நண்பர்கள் மதிப்பு உயரும். எதிர்ப்புகள் தவிடுப்பொடியாகும். கௌரவத்தில் கவனம் தேவை. புதிய சிந்தனை உதயமாகும். கண்ணாடி பொருட்கள் சேதமாகும். கலக்கமான மனநிலை காணப்படும். பிரார்த்தனையால் பலன் உண்டு. ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். எதிலும் வெற்றி கிட்டும். அதிகாரம் உயரும். அணிமணிகள் சேரும். வாகன யோகம் உண்டு. கட்டிட தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். தேச பயணம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். பொருளாதாரம் மேம்படும். திருமண தீபம் சுடர்விடும். கடன் பாக்கிகள் வசூலாகும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. உழைப்பில் கவனம் தேவை. சுபச்செலவுகள் அதிகரிக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். மனநெருக்கடிகள் தீரும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். பணியில் பாராட்டு கிட்டும். உடல்நலம் மேம்படும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். கணவன், மனைவி உறவு மேம்படும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,1,3,2
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K


**(தொடர்ச்சி 26 பக்கம்)**



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1110

## நாச்சிமார் திருக்கோயில் வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

*" நகாற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்*
*கருவாகி உயிராகி உடலாகினாய்*
*நேற்றாகி இன்றாகி நாளாகினாய்*
*நிலமாகி பயிராகி உணர்வாகினாய்*
*தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்*
*தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்*
*போற்றாத நாளில்லை தாயே உன்னை*
*பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை.."*

ஆலயம் விருத்தியடைய இதனைச் சரிவர நிர்வகிக்கும்பொருட்டு, கி.பி 1893 ஆம் ஆண்டில் ஆலய பரிபாலனத்திற்கென அமைக்கப்பட்ட ஐவரைக்கொண்ட பஞ்சாயத்தும், பதின்நான்கு பேரைக்கொண்ட நிர்வாகசபையும் நிறுவப்பட்டது. இவர்கள் நிர்வாகத்தில் இக்கோவில் வளர்ச்சிகண்டதோடு, நாச்சிமார்கோவில் அருளும், புகழும்கொண்ட கோவிலாக விளங்கியது. இதன் பின்னர் சுற்றுப்புறப் பிரதேசங்களில் உள்ளவர்கள் மட்டுமன்றி, நாட்டின் பல பாகங்களிலுமிருந்தும் இக்கோவிலுக்கு மக்கள் வர ஆரம்பித்தனர்.

இருபதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில், நமசிவாயம் செல்லப்பா என்பவர் இந்தியாவிற்குத் தலயாத்திரை மேற்கொண்டார். அப்பொழுது சுவாமிமலையிலுள்ள சிற்பாச்சாரியரைக்கொண்டு, விக்கிரகங்கள் பலவற்றைச் செய்வித்தார். பூமாதேவி சமேத மகா விஷ்ணு, இலக்குமி. வள்ளிநாயகி, தெய்வயானை சமேத சுப்ரமணியப்பெருமான், வைரவர், நவக்கிரகங்கள், சண்டேசுவரி, ஆகிய விக்கிரகங்களை அவர் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வந்தார். இவ்விக்கிரகங்கள் நாச்சிமார்கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ்வேளையில், சுற்றுப்பிரகார மண்டபமும் அமைக்கப்பட்டு, 1926 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, கொடித்தம்பமும் அமைக்கப்பட்டு, கொடியேற்றம் முதல் தீர்த்தம் வரை பத்துத்திருவிழாக்கள் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது. ஆதியிலே காணப்பட்ட பதிவேட்டுக் குறிப்பின்படி, இக்கோவிலிலே ஒன்பது நாட்களே திருவிழா நடைபெற்றுள்ளது. பத்தாம் நாள் பங்குனி உத்தரத்தன்று மணிவிழாவும், பதினோராம் நாள் ஊஞ்சல் திருவிழாவும் நடைபெற்றதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு, 1870 ஆம் ஆண்டளவில் கற்கோவிலாக மாற்றம் பெற்றபின், இங்கு ஆண்டுதோறும் அலங்கார உற்சவங்கள் நடைபெற்றதாக, குறிப்புக்களிலே கூறப்பட்டுள்ளது. ஆலயவளர்ச்சியின் காரணமாக, ஆலயப்பணிகள் பலவாகக் காணப்பட்டன. இவற்றைச் சமாளிக்கும் விதத்தில், 1933 ஆம் ஆண்டளவில் புதியதொரு நிர்வாகசபை நிறுவப்பட்டது.

இக்கோவிலிலுள்ள மகாமண்டபம், மு.முத்துவேலுபத்தரின் உபயமாகவும், கோவி லுக்கு முன்னால் வடக்குப்பக்கமாக அமைந்துள்ள திருக்குளம், கந்தர் உடையார் என்பவராலும் கட்டப்பட்டது. 1965 ஆம் ஆண்டிலே, சப்பை ரதமும் (சப்பறம்) செய்யப்பட்டது. பல புனருத்தாரணப் பணிகளின் பின் மீண்டும், 1967 ஆம் ஆண்டு, மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அத்தோடு பத்து நாட்கள் நடைபெற்று வந்த வருடாந்த மகோற்சவமும், பதினைந்து நாட்களாக மாற்றம் பெற்றது. 1968 ஆம் ஆண்டு சிறு மஞ்சமும் செய்யப்பட்டது. 1971ஆம் ஆண்டு இவ்வாலயத்துக்கென அழகிய சிற்பத்தேர் உருவாக்கப் பட்டது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிற்பாச்சாரியார் ஆ.தம்பித்துரை அவர்கள், தேரை உருவாக்கினர். சித்திரத்தேரின் அடித்தளத்துச் சிற்பங்கள் சில இந்தியாவிலே செய்யப்பட்டன.

இக்கோவிலின் இராசகோபுரம் சைவாகமவிதிகளுக்கு அமைய நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இராசகோபுரத்தை அமைக்கும் பணிகள், 1976 ஆம் ஆண்டிலே ஆரம்பமாகியது. இவ்வேலைகள் தமிழகச் சிற்பாசாரியாரான நாகலிங்கம் அவர்கள் தலைமையிலே நடைபெற்றது. நாச்சிமார்கோவில் இராசகோபுரம், அற்புதமான அமைப்பைக்கொண்டது. இக்கோபுரம் 51.5 அடி உயரமும், 17.5 அடி விட்டமுங் கொண்டது. இக்கோபுரத்திலே ஐந்து வாசல்களும், ஐந்து கோபுரங்களும் காணப்படுகின்றன. கோபுரத்தின் அடித்தளத்திலே, கோவிலோடு தொடர்புடைய ஐதீகங்கள், சிற்பவடிவிலே பேசுஞ் சித்திரங்களாகக் காணப்படுகின்றன. சிவனும், சக்தியும் போட்டிபோட்டு ஆடிய திருநடனக்கோலங்கள், திருக்கல்யாணக்கோலம், பிள்ளையார், முருகன், பிரமன், ஆகியோரின் சிற்பங்கள் ஆகியன எழிலுடன் வடிக்கப்பட்டுள்ளன. அமாவாசையைப் பௌர்ணமியாக்கி அபிராமி பட்டருக்குக் காட்டிய காட்சி, சமயகுரவர் நால்வரின் அற்புதத் தோற்றங்கள், சிவபிரானின் தவக்கோலம், விஸ்வப்பிரம்மாவின் வடிவம் முதலியன இக் கோபுரத்திலே சிற்பவடிவிலே காணப்படுகின்றன. கோபுரத்தின் மூன்றாவது தளத்திலே பழனியாண்டவர், விநாயகர், சிவபெருமான் ஆகியோரின் உருவங்களும், நான்காவது தளத்திலே உமாதேவியார் முருகப்பெருமானுக்கு, சக்திவேலைக்கொடுக்கும் காட்சி, மற்றும் அர்த்தநாரீஸ்வரர், விஷ்ணு, பிள்ளையார், துவாரபாலகர் போன்றோரின் உருவங்களும் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. ஐந்தாவது தளத்திலே சரஸ்வதி, மகாலக்சுமி, மாரியம்மன், விநாயகர், முருகன் ஆகியோரின் உருவங்கள் பேசும் சிற்பங்களாக, கலைநயத்தோடு மிளிர்கின்றன.

வளரும்...

---

## கோட்டபாய ராஜபக்ஷவின் மோசமான ஆட்சியில் இந்த நாடும் மாவட்டமும் பாதிக்கப்பட்டது

### மீட்டெடுக்க தகுதியான ஒரு வரை ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டும்

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்



**மன்னாரில் ரிஷாட் பதியுதீன்.எம்.பி.**
**- எஸ்.ஆர்.லெம்பேட் (31-08-2024**

கோட்டபாய ராஜபக்ஷவின் மோசமான ஆட்சியின் போது ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியினால் இந்த நாடும் மாவட்டமும் பாதிக்கப்பட்டது.

குறித்த நாட்டை முழுமையாக மீட்டெடுக்கவும்,மன்னார் மாவட்ட மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்கவும் மக்கள் தகுதியான ஒருவரை ஜனாதிபதியாக தெரிவு செய்ய வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னார் பள்ளிமுனை வீதியில் 31-08-2024 சனிக்கிழமை கட்சியின் தேர்தல் அலுவலகம் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் மன்னாருக்கு விஜயம் செய்ய உள்ளார். மன்னார் மாவட்ட மக்கள் ஒன்று பட்டு அவரை வெற்றி பெறச் செய்ய இருக்கிறார்கள். கத்தோலிக்க மக்கள் அதிகமாக இருக்கின்ற இந்த மாவட்டத்தில் முஸ்லிம் மற்றும் இந்து மக்களும் சேர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

அனைவரும் ஒற்றுமையாக வாழ்கின்ற இந்த மாவட்டத்தில் அவரது வருகையை எதிர் பார்த்துள்ளனர்.

இந்த மாவட்டத்திலே பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகிறது. குறிப்பாக மீனவ சமூகம் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொண்டு வருகின்றனர். விவசாயிகளுக்கும் பல்வேறு பிரச்சினைகள் உள்ளது.

கோட்டபாய ராஜபக்ஸவின் மோசமான ஆட்சியின் போது ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியினால் இந்த மாவட்டமும் பாதிக்கப்பட்டது.

இந்த மாவட்டத்தில் இருக்கின்ற பாதிப்புக்களில் இருந்து இம் மாவட்டத்தை மீட்டெடுப்பதற்காகவும், இந்தியாவிற்கு அருகில் இந்த மாவட்டம் இருக்கின்றமையினால் இந்தியாவிற்கும் தலைமன்னாருக்கும் இடையில் பாலம் அமைத்தல்,கப்பல் சேவையை ஆரம்பித்தல், சுற்றுலாத்துறையை மேம்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல் உள்ளிட்ட பல்வேறு விடையங்கள் குறித்து நாங்கள் இங்கு வரவுள்ள வேட்பாளருடன் பேசி உள்ளோம்.

எதிர்வரும் 3 ஆம் திகதி அவர் மன்னார் வருகின்ற போது அவர் மக்களுக்கு குறித்த விடையங்கள் குறித்து தெளிவாக தெரியபடுத்துவார்.

அவரின் வெற்றிக்கு பின்னர் என்ன சொல்கிறாரோ அதை செய்ய அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி அவருடன் இணைந்து செயல்படும்.

எமது கட்சி மாத்திரம் இல்லாது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மனோ கணேசன் எம்.பி. திகாம்பரம் எம்.பி போன்றவர்களின் கட்சிகள் உற்பட எத்தனையோ கட்சிகள் அந்த வேட்பாளரின் பின்னால் அவரின் வெற்றிக்காக பாடுபடுகின்றனர்.

நாடு முழுவதும் அவருடைய வெற்றிக்காக மக்கள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். அனைத்து இன மக்களின் வாக்குகளுடனும் அந்த வேட்பாளரம் வெற்றி பெறுவார். விவசாயிகள்,மன்னார் மீனவர்களின் பிரச்சினை, வன வள திணைக்களத்தின் கீழ் அபகரிக்கப் பட்டுள்ள காணிகள் உள்ளிட்ட 10 விடையங்கள் உள்வாங்கப்பட்டுள்ள.

எனவே அவர் மீது எங்களுக்கு பூரண நம்பிக்கை உள்ளது. அவர் பல விடையங்களை கேட்டுச் செய்யக் கூடியவர். எனவே அவரை வெற்றி பெற அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எனவே தமிழ் மக்கள் ஏமாந்து விடக் கூடாது.மிகவும் நொந்து போன ஒரு சமூகமே எம் தமிழ் சமூகம்.இன்று உரிமைகளை பற்றி பேசுகின்றவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் நல்ல நிலையில் இருக்கிறார்கள். ஆனால் இன்று மீனவர்களும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மக்கள் பலர் யுத்தத்தினால் அவயங்களை இழந்தும் வாழ்ந்து வருகின்றனர். எனவே மக்களாகிய நீங்கள் இந்த நாட்டிற்கு தகுதியான ஜனாதிபதி யார் என்பதை தெரிவு செய்ய வேண்டும்.

அவரினால் எமது பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்குமா என்பதை உணர்ந்து இங்கு வரவுள்ள அந்த வேட்பாளரை அமோக வாக்குகளால் வெற்றி பெறச் செய்யுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

---



## மன்னார் மாவட்ட வளத்தை பாதுகாக்க கோரி எதிர்வரும் 10ஆம் திகதி பேரணிக்கு வடமாகாண கடற்றொழிலாளர் இணையம் அழைப்பு

**- எஸ்.ஆர்.லெம்பேட் (04-09-2024)**

"மன்னார் மாவட்டத்தின் வளத்தை பாதுகாப்போம்" எனும் தொனிப் பொருளில் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மன்னாரில் அமைதி பேரணி ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடக பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

மன்னாரில் 4ம் திகதி புதன்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஏற்பாட்டில், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் அனுசரணையில் வடமாகாண கடற்தொழிலாளர்களும் இலங்கையின் ஏனைய மாவட்டங்களை சேர்ந்த கடற்தொழிலாளர்களும் இணைந்து "மன்னார் மாவட்டத்தின் வளத்தை பாதுகாப்போம்" எனும் தொனிப் பொருளில் குறித்த பேரணியை முன்னெடுக்க உள்ளனர்.

குறித்த பேரணி ஊடாக இலங்கை ஜனாதிபதி, கடற்றொழில் அமைச்சர், மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வர உள்ளோம். மன்னார் வளத்தை பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கு மகஜரையும் கையளிக்க உள்ளோம்.

மன்னார் மக்களுக்கும் மீனவர்களுக்கும், பாதிப்பாக இருக்கின்ற கணிய மணல் அகழ்வு, காற்றாலை மின் உற்பத்தி, இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகை, சூழலுக்கும், மன்னார் மாவட்டத்திற்கு பாதிப்பான பண்ணை செயற்பாடுகளை நிறுத்தக் கோரியும் குறித்த அமைதி பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த பேரணிக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மீனவர்கள் ஆதரவு வழங்க உள்ளனர்.எனவே அன்றைய தினம் மன்னார் மாவட்ட மீனவர்கள், பொது அமைப்புக்களும் பூரண ஆதரவை வழங்க வேண்டும் என அன்னலிங்கம் அன்னராசா கோரிக்கை விடுத்தார்.

இதன் போது வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் மன்னார் மாவட்ட தலைவர் அன்ரனி சங்கரும் கருத்து தெரிவித்தார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# கிளிநொச்சி மாவட்டத்தில் 100,907 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி 3 முறைப்பாகள் பதிவாகின என்கிறாரம் அரச அதிபர்



கிளிநொச்சி மாவட்டத்தில் 1 லட்சத்து தொல்லாயிரத்து ஏழு வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமான எஸ் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் "அதற்கு அமைவாக கிளிநொச்சி மாவட்டத்தில் 108 வாக்களிப்பு நிலையங்கள் தயார் படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு மேலதிகமாக வாக்கெண்ணும் பணிக்காக பழைய மாவட்டச் செயலக வளாகத்தில் 8 நிலையங்களில் நடைபெறவிருக்கின்றன.

நாளை முதல் நடைபெறவிருக்கின்ற தபால்மூல வாக்களிப்பிற்காக 3656 அரச உத்தியோகத்தர்கள் தகுதி பெற்றுள்ளார்கள். அவர்களுக்காக 96 வாக்களிப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த வகையில் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் நாளை 4ம் திகதியும், பொலிசார் 4ம் மற்றும் 6ம் திகதியும் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்காக 5ம், 6ம் திகதியும் வாக்களிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த நாட்களில் அவசர வேலை உள்ளிட்ட தவிர்க்க முடியாத காரணத்தால் வாக்களிப்பை தவறவிடுகின்ற உத்தியோகத்தர்கள். 11ம், 12ம் திகதிகளில் பழைய மாவட்டச் செயலகத்தில் தமது வாக்கை செலுத்த முடியும்.

இதேவேளை, வாக்காளர்கள் அனைவரும் நேரகாலத்தோடு வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களிக்குமாறும், இறுதிநேரம் வரை காத்திருக்காது வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும்". என்றார்

தேர்தல் முறைகேடுகள் தொடர்பில் முறைப்பாடு கிடைத்ததா என அவரிடம் வினவிய போது, 3 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# சுமந்திரன் ஒரு பொய்யன் என்பது தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல ஏனைய இனம் சார்ந்த மக்களுக்கும் தெரியும் என்கிறார் கஜேந்திரன் எம்.பி!



ஏக்கே ராஜ்ஜியவில் சமஸ்டி இருக்கிறது என தமிழ் மக்களை ஏமாற்றிய சுமந்திரன் சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்கிவிட்டு மக்களுக்கு பொய் விளக்கம் கூறுவார் என தமிழ் மக்களுக்கு மாத்திரமல்ல ஏனைய இனம் சார்ந்த மக்களுக்கும் நன்கு தெரியும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

03-09-2024 திங்கட்கிழமை யாழ்ப்பாணம். காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள அவரது கட்சி அலுவலகத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுமந்திரன் என்கின்ற நபர் யார் என்பது தொடர்பில் தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். நல்லாட்சி அரசாங்கத்தில் ஐ.நாவில் கால அவகாசம் பெற்றுக் கொடுப்பதற்கு சம்பந்தர் தலைமையிலான அணியில் சுமந்திரன் அரசாங்கத்தை காப்பாற்றினார்.

அது மட்டுமல்லாது புதிய அரசியல் அமைப்பை உருவாக்குகிறோம் எனக் கூறிக்கொண்டு ஏக்கே ராஜ்ஜியவில் சமஸ்டி இருக்கிறது என மக்களுக்கு பொய்களை கூறிவந்தவர். அதேபோன்று பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சிப் போராட்டத்தை திசைதிருப்பி இலங்கையில் இடம்பெற்ற இன அழிப்புக்கு தமிழ் மக்கள் உள்ளக விசாரணையை வலியுறுத்தி போராட்டம் செய்தார்கள் என பாராளுமன்றத்தில் தெரிவித்தவர்.

அப்போது எமது கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் தெளிவாக குறிப்பிட்டார், எமது போராட்டம் சர்வதேச விசாரணையை கோரி இடம்பெற்றதே அல்லாமல் உள்ளக விசாரணையை கோரி இடம்பெறவில்லை என அழுத்தம் திருத்தமாக கூறினார்.

இந்த விடயம் இந்த போராட்டத்தில் ஏற்பாட்டாளர்களில் ஒருவராக இருந்த வேலன் சுவாமியிடம் நாங்கள் தெரிவித்த போது சுமந்திரன் இவ்வாறாக பேசினாரா என கோபப்பட்டார். ஆனால் ஊடக சந்திப்பில் சுமந்திரன் கூறிய விடயங்களை மறுத்துப் பேச தயங்கிவிட்டார். இவ்வாறு பொய்களை உரைத்த சுமந்திரன் தற்போது தமிழ் மக்கள் வடக்கு கிழக்கு இணைந்த சமஸ்டி தீர்வினை கேட்கும் நிலையில் ஒற்றையாச்சி அரசியலமைப்பை தேர்தல் விஞ்ஞாபனத்தில் கொண்ட சஜித் பிரேமதாசாவுக்கு தமிழரசு ஆதரவு வழங்குவதாக சுமந்திரன் அறிவித்திருக்கிறார்.

தமிழ் மக்களிடம் சமஸ்டித் தீர்வை முன் வைப்போம் என தேர்தல் காலத்தில் வாக்குகளை பெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒற்றை ஆட்சி சிங்கள வேட்பாளருக்கு ஆதரவை வழங்கியமை ஒட்டுமொத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பும் பொறுப்பேற்க வேண்டும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவு என பொது வெளியில் கூறிக் கொண்டாலும் பாராளுமன்றத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பாகவே பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களிடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன் நீங்கள் தமிழ் மக்களை நேசிப்பவர்களாக இருந்தால் தமிழ் தேசியத்துக்கு எதிராக செயல்படுபவர்களை உதறிவிட்டு தனித்து பாராளுமன்றத்தில் இயங்காதது ஏன் எனக் கேட்க விரும்புகிறேன்.

தமிழ் மக்களை ஏமாற்றி சர்வதேச விசாரணையை உள்ளக விசாரணையாக மாற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களை தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றனர். இந்த ஏமாற்றத்தின் ஒரு பகுதியாக தமிழரசு கட்சி சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவை வழங்கி தமிழ் மக்களின் தாயகம் தேசியம், சுய நிர்ணய உரிமையை ஒற்றை ஆட்சியின் கீழ் மண்டியிட வைப்பதற்கான முயற்சியாக சஜித்தை ஆதரித்துள்ளனர்.

ஏற்கனவே புதிய அரசியலமைப்புக்கான வேலைத்திட்டங்கள் முடிவுற்ற நிலையில் அதனை நிறைவேற்றுவதற்கான முன்னேற்பாடாக தெற்கு கட்சிக்கு ஆதரவு வழங்கியுள்ளனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தமிழ் தேசிய நீக்கல் செயற்பாடுகள் தொடர்பில் எமது கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பல தடவைகள் மக்கள் முன் தெரிவித்திருக்கிறார்.

இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் நிகழ்ச்சி நிரல் களுக்கேற்ற வகையில் செயற்பாடும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஒற்றை ஆட்சியின் கீழ் தமிழர்களை அடி பனிய வைப்பதற்கான வேலை திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. ஆகவே தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காக தமிழ் தேசிய நீக்கத்தை மேற்கொள்வோர் தொடர்பில் அவதானமாக இருப்பதுடன் அவர்களுக்கு தகுந்த பாடத்தை தமது வாக்குகளால் வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இவ்வார ராசிபலன்

( 24 பக்கம் தொடர்ச்சி)




**மகரம்:** நீண்ட நாள் கனவு நிறைவேறும். பெண்களால் பெருமை உண்டு. எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குழப்பங்கள் அகலும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். திடீர் பயணம் ஏற்படும். மதிப்பு உயரும். மனைவி பிள்ளைகளிடம் அன்பு அதிகரிக்கும். உடல் பொலிவு கூடும். பூமியால் லாபம் உண்டு. குடும்பத்தில் குழப்பம் நீங்கும். சுபச்செலவு அதிகரிக்கும். நட்டமில்லாமல் திட்டங்கள் நிறைவேறும். சொந்த முயற்சிகள் பலன் கொடுக்கும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். ஞாபக மறதி ஏற்படும். பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. உதவிகள் கிட்டும். விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. பயணம் வெற்றி தரும். உடல்நலம் சீராகும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். எடுத்த முயற்சியில் வெற்றி பெறும். முன்னோர்கள் ஆசிர்வாதம் கிடைக்கும். பெண்களுக்கு யோகம் கூடும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வசதிகள் பெருகும். புதுமுயற்சிகள் பலன் அளிக்கும். பங்குச்சந்தை மாற்றம் தரும். நல்லோர்கள் நட்பு கிட்டும். சொத்துக்கள் சேரும். உத்யோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். கவனமுடன் செயல்பட வேண்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 1,4,7,9

அதிர்ஷ்டநிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Y




**கும்பம்:** திட்டம் வெற்றி பெறும் வாரம். யோகமான காலம். எதிர்பார்ப்பினால் பலன் உண்டாகும். கலை ஆர்வம் கூடும். பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் மேன்மை உண்டு. குடும்ப முன்னேற்றம் அதிகரிக்கும். தாய்வழி உறவு நன்மை தரும். பயணம் தடைப்படும். இடமாற்றம் ஏற்படும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். பல் வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. வெற்றி சீக்கிரம் கிட்டும். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை அமையும். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். பூமியால் லாபம் அடைவீர்கள். புதிய பொருள் சேரும். பொருளாதார வளர்ச்சி ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். பாராட்டுக்கள் கிடைக்கும். மற்றவர் தொல்லைக் குறையும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். கலைத்தொழிலில் திருப்பம் தரும். சமூக சேவை செய்ய முன் வருவீர்கள். உடல் நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள். முகப்பொலிவு உண்டாகும். உணவு பிரியம் அதிகரிக்கும். வாய்ச்சொல் பலன் உண்டு. தொழில் வளம் கூடும். காதலில் புரிந்துணர்வு இருக்கும். மருத்துவத்துறையில் ஆர்வம் கொள்வீர்கள். உலோகத் தொழில் உயர்வு தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி, அதிர்ஷ்ட எண்: 8,1,2,9

அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,R




**மீனம்:** காரியத்தில் வெற்றி காணும் வாரம். ஆதாயம் பெருகும். நிர்வாகத் திறமை கூடும். வீடு, மனை யோகம் உண்டு. அரசாங்க அனுகூலம் உண்டு. இனிய எண்ணம் உதயமாகும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. மாணவர்கள் திறமை பளிச்சிடும். நினைத்தக் காரியத்தில் வெற்றி பெறுவீர்கள். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். கலை ஆர்வம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். திறமைகள் அதிகமாகும். வீண் செலவு அதிகமாகும். தடைகள் விலகும். தொழில் வாய்ப்பு கூடி வரும். நற்செய்தி நாடி வரும். பொன், பொருள் சேரும். வெற்றிக்கான வழி பிறக்கும். விவசாய நிலம் சேரும். வேண்டிய உதவி கிட்டும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். குடும்ப மேன்மை உண்டு. திருமணம் கூடி வரும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். இனிதான காரியம் நடைபெறும். குடும்ப மகிழ்ச்சி இருமடங்காகும். சகோதரியால் லாபம் உண்டு. ஒப்பற்ற பலன் சேர்க்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகமாகும். குடும்ப சச்சரவு ஏற்படும். அலட்சியப்போக்கு தவிர்க்கவும். தொழில் திறமை பளிச்சிடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 1,4,6,9

அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,J





# மரண அறிவித்தல்

தோற்றம்: **24-04-1933**
மறைவு: **30-08-2024**



**திரு. பொன்னம்பலம் செல்வராசா**

**யாழ். வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும், தற்போது கனடா Toronto வை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் செல்வராசா அவர்கள் 30-08-2024 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - இராசரத்தினம் தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான ஆதிரத்தினம் - நீலாதாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும்,

தையல்நாயகி (தெய்வம் - பருத்தித்துறை, கனடா) அவர்களின் அன்புக் கணவரும்,

காலஞ்சென்றவர்களான தவமணிஅம்மா, தியாகராசா, காந்தரூபி மற்றும் ஸ்ரீராதா (இந்தியா), அருணாச்சலம் (ரூபன் - இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,

வசந்தகுமாரி (வசந்தி - கொழும்பு), இராசநாயகி (ஜெயந்தி - கொழும்பு), சுகந்தி (Scarborough Health Network Emergency), சுமதி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும்,

அமரநாதன், வில்பிறட் பெர்னான்டோ, அன்ரனி ராஜ் மரியதாசன், இராசகுமாரன் ஆகியோரின் அன்பு மாமனாரும்,

நிரோசன் (இலங்கை), ஜெரூசன் - மெலனி (இலங்கை), தாட்ஷாயினி (தாட்ஷா - கனடா), நக்கீரன் (கனடா), திரிஷா (இலங்கை) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்

***அன்னாரின் பூதவுடல் 08-08-2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8:00 மணி தொடக்கம் 10:30 மணிவரை Ajax Crematorium & Visitation Centre (38 Finley Ave., Ajax, ON L1S 2E3) இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, பின்னர் 08-08-2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10:30 மணி தொடக்கம் பி.ப. 12:00 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.***

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்
அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு: சுகந்தி - மகள்: (416) 930-3134
ஜெயந்தி - மகள்: +94777520146
தாட்ஷா - பேத்தி: (647) 704-8848
நக்கீரன் - பேரன்: (647) 774-2231

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பழமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

இவ்விடத்தில் விளம்பரம் செய்ய எங்களுடன் தொட்பு கொள்ளவும்.

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 416-291-0005
www.iselldreamcondos.ca www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

உதயம் 1483 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 6, 2024



# யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் (கவிஞர் ஆரணி) கனடா வந்துள்ளார்.

அண்மையில் பதவியிலிருந்து இளைப்பாறிய யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் யாழ்ப்பாண பல்கலைக் கழகப் பட்டதாரியுமான அம்பலவாணர் சிவபாலசுந்தரன் (கவ-ிஞர் ஆரணி) நேற்று வியாழக்கிழமை மாலை கனடா வந்தார்.

ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தில் அவரை வரவேற்கச் சென்றிருந்த உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அவரை .இன்முகத்தோடு உரையாடி மகிழ்ந்தனர்.

கவிஞர் ‘ஆரணி’ எனற கவிதை உலகப் பெயர் கொண்ட அம்பலவாணர் சிவபாலசுந்தரன்அவர்களின் ‘நினைவிடைத்தோய்தல்’ கவிதை நூல் வெளியீட்டு விழா கனடா மார்க்கம் நகரில் நடைபெறவுள்ளது

இடம்:- யுயனைைை ஊழஅஅரனைவைல ஊநவெசந, 5665 14வா யுஎநரெந. ஆயசமாயஅ

காலம்:- 14-09-2024 சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணி தொடக்கம்

மேலதிக விபரங்களுக்கு 416 732 1608 என்னும் இலகத்தை அழைக்கவும்.

கவிஞர் ‘ஆரணி’ எனற கவிதை உலகப் பெயர் கொண்ட அம்பலவாணர் சிவபாலசுந்தரன்அவர்களின் கனடியப் பயணம் பயனுள்ளதாகவும் அவருக்கு மகிழ்ச்சியை அளிப்பதாகவும் இருக்க வேண்டும் என நாம் பிரார்த்தனை செய்வோம்!!



# ஒன்றாறியோ மேன்முறையீட்டு நீதிமன்றம் தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமைக்கான சட்டமூலம் – 104ஐ உறுதிப்படுத்தியது

இன்று, செப்டம்பர் 5, 2024 அன்று, ஒன்றாறியோவுக்கான மேன்முறையீட்டு நீதிமன்றம் தமிழின அழிப்பு அறிவூட்டற் கிழமைக்கான சட்டமூலம் - 104ஐ உறுதிப்படுத்தியதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். தமிழின அழிப்பு நடைபெற்றதென்பதை மறுப்பவர்களால் மேன்முறையீடு செய்யப்பட்டு முன்வைக்கப்பட்ட அரசியலமைப்புக்கான சவால்கள் பல நிராகரிக்கப்பட்டதோடு, இலங்கையில் நடைபெற்ற தமிழின அழிப்புக் குறித்து ஒன்றாறியோவில் வாழ்வோர் தொடர்ந்தும் கல்வி கற்கவும் அதனைப் பற்றிக் கற்பிக்கவும் மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் இந்த சட்ட மூலம் பாதிக்கப்பட்ட எமது இனத்திற்கு சாதகமான தீர்ப்பும் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

இச்சட்டமூலம் 104 ஐப் பாதுகாக்கவும் அதற்கு எதிராக வந்த எதிர்ப்புக்களை முறியடிக்கவும் அயராது உழைத்த அறுபதுக்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகளுக்கும், சமூக உறுப்பினர்களுக்கும், குறிப்பாக தமிழ் இளையோர்களுக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

ஒன்றாறியோவில் மட்டுமன்றி உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்கள் அனைவருக்கும் சட்டமூலம் 104 நிறைவேற்றப்பட்டது ஒரு வரலாற்று நிகழ்வாகும் என்றால் அது மிகையாகாது.

இவ்வாறு ஸ்காபரோ - றூஜ் பார்க். மாநில சட்டமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் மகிழ்ச்சியுடன் இந்த அறிக்கையை பகிர்ந்து கொண்டார்



# ஒன்றாறியோ மாகாண பாடசாலைகளில் மாணவர்களின் கவனச்சிதறலைக் குறைக்க அரசு நடவடிக்கை

ஒன்றாறியோ மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் கவனச்சிதறல்களற்றவர்களாகவும் தமது கற்கையில் கவனம் செலுத்துபவர்களாகவும் இருக்கும் வகையில் அதற்கு ஏதுவான சூழலை உருவாக்கிக் கொடுப்பதற்கான தீர்க்கமான முடிவை எடுத்துள்ள ஒன்றாறியோ அரசு, அதற்கென 47.5 மில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளது. செப்டெம்பர் 1, 2024 முதல் மாநிலம் முழுவதும் நடைமுறைக்கு வந்துள்ள இந்நடவடிக்கையானது மாணவர்களின் கற்கையில் செல்லிடப்பேசிகள், சமூக ஊடகங்கள் மற்றும் புகைத்தல் போன்றவை ஏற்படுத்தும் எதிர்மறை மாற்றங்களைக் கட்டுப்படுத்தும். இது தொடர்பாக அமைச்சர் விஜய் தணிகாசலம் கருத்துத் தெரிவிக்கையில், ”மாணவர்களின் கல்விக்கும் அவர்களின் உடல்நலத்துக்கும் நாம் எப்பொழுதும் முன்னுரிமை கொடுப்பதற்கு உறுதிபூண்டுள்ளோம்” எனத் தெரிவித்தார். செல்பேசிக்கான கட்டுப்பாடுகள், பள்ளியில் மின்புகைப்பிடித்தல் கருவி-களைப் பயன்படுத்தலுக்கான தடை போன்றவற்றுடன் மாணவர்களுக்கான நவீனமயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் என்பன அவர்களைத் தடையற்ற விதத்தில் தமது கல்வியாண்டை வெற்றிகரமாக எதிர்கொள்ள உதவும்.

Ontario
MINISTRY OF EDUCATION

பெருந்தன்மையுடன் நிதியாதாரம் அளிப்பவர்கள்
CN Loblaws

செப்டம்பர் மாதம் பிராம்ப்டன் நகர மரங்களுக்கான மாதம் ஆகும்
கீழ்கண்டவாறு கொண்டாட எங்களுடன் இணையுங்கள்:
- மரம் நடும் முனைப்புக்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி அறிதல்
- கால அட்டவணையிடப்பட்ட நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகளில் பங்கெடுத்தல்
- குடியிருப்பகங்களில் நடுவதற்கான இலவச மரக்கன்றுகள் பெறுவதில் பங்கெடுத்தல்
- ஒரு பரிசை வெல்வதற்கான வாய்ப்பினை அடைய படம் வரையும் போட்டியில் பங்கேற்றல்

உங்களுக்குப் பிடித்தமான ஒரு மரத்தினை புகைப்படம் எடுத்து #BramptonTrees உபயோகித்து சமூக வலைத்தளத்தில் பகிருங்கள்
brampton.ca/treemonth
இல் மேலும் அறியவும்
BRAMPTON